பக்கங்கள்:பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5392
(C-7319)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 09 ஞாயிற்றுக்கிழமை (22.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 034

பணிந்தது அரசு; நீங்கியது தடை

## ஜல்லிக்கட்டுக்கு அனுமதி அளித்து அவசர சட்டம் நேற்று பிறப்பிப்பு

### முதலமைச்சர் ஓ.பி.எஸ் ஆரம்பித்து வைப்பார்

(சென்னை)

இந்தியாவில் தமிழர்களின் பாரம் பரிய வீர விளையாட்டான ஜல்லிக் கட்டுக்கு அனுமதி அளிக்கும் அவ சர சட்டத்தை தமிழக ஆளுநர் வித் தியாசாகர் ராவ் நேற்று பிறப்பித் தார். இதையடுத்து இன்று காலை யில் மதுரையில் ஜல்லிக்கட்டு நட க்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு

15 ஆம் பக்கம் பார்க்க...



## அவசர சட்ட அனுமதிக்கு பரிசீலித்து நடவடிக்கை

### பீட்டா அறிக்கை

(சென்னை)

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலை யில், ஜல்லிக்கட்டை அனுமதிக்கும் புதிய அவசர சட்டத்தின் வரைவை பரிசீலித்து நடவடிக்கை எடுப்போம் என்று விலங்குகள் நல அமைப்பான, பீட்டா தரப்பில் நேற்றிரவு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

பீட்டா அமைப்பின் இந்திய பிரிவு சார்பில் வழக்கறிஞர் பி.ஸ்ரீனிவாசா வெளியிட்டுள்ள குறிப்பு ஒன்றில், ஜல்லிக்கட்டு குறித்த வழக்கு உச்ச நீதிமன்றல இன்னும் நிலுவையில் உள்ளது என்று சுட்டிக்காட்டியிரு

16 ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி பயணித்த உலங்கு வானூர்தி அவசர தரையிறக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன பயணித்த உலங்கு வானூர்தி கொட்டகலையில் அமைந்துள்ள தொண்டமான்தொழிற்பயிற்சிநிலைய வளாகத்தில் நேற்று திடீரென தரை

16 ஆம் பக்கம் பார்க்க...

# ஜெனிவாவில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம்!

## பிரேரணையை முன்வைக்க ஐரோப்பிய நாடுகள் முயற்சி

(ஜெனிவா) ------------------------

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 34ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் விவகாரம், நல் லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் கால அவகாசம் வழங்கும் வகையில் மற்றுமொரு பிரேரணை கொண்டு வரப்படலாம் என அறியக்கிடைத்துள்ளது

15 ஆம் பக்கம் பார்க்க...

## மகிந்தவை அமைச்சர்கள் சந்திக்க ஜனாதிபதி மைத்திரி அனுமதியளிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் ஏழு பிரதான அமை ச்சர்கள் ஏற்பாடு செய்த சந்திப்பு ஒன்றை திட்டமிட்டபடி நடத்துவத ற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அனுமதியளித்துள்ளார். இன்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியை ஒன்றிணைக்க இந் தச் சந்திப்பு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே இந்தச் சந் திப்புக்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அனுமதியளித்துள் ளார்.

இச்சந்திப்பின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையை வலியுறுத்துவதோடு, மகிந்த ராஜ பக்ஷ மீண்டும் கட்சியில் இணைய வேண்டும் என்று அமைச்சர்கள் கோரிக்கை முன்வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## அமெரிக்காவின் புதிய அரசுடன் உறவை வலுப்படுத்த விருப்பம்

### ட்ரம்ப்பிற்கு மைத்திரி வாழ்த்து



(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப்

16 ஆம் பக்கம் பார்க்க...



## ஊறணி பகுதியில் விரைவில் காணி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு ஊறணி பகுதியில் உள்ள பொதுமக்களின் ஒருபகுதி நிலம் இந்த மாத இறுதிக்குள் விடுவி க்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவல்கள்கிடைத்துள்ளன.

வலி வடக்கு இராணுவ உயர்

16 ஆம் பக்கம் பார்க்க...

## 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியி னால் 10 லட்சத்து 41 ஆயிரத்து 690 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர் த்த முகாமைத்துவ மத்திய நிலை யம் தெரிவித்துள்ளது.

வரட்சியினால் கிழக்கு மாகாணம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நிலை யில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவா ரணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அரசாங்

16 ஆம் பக்கம் பார்க்க...

சமூக அங்கீகாரம் கிடைக்கும் வகையில்

## முன்னாள் போராளிகளுக்கான பொதுத் திட்ட பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளிகளுக்கு சமூகத்தில் அங்ககாரம் கிடைக்கும்படியான பொதுத்திட டம் ஒன்று புனர்வாழ்வு அதிகார சபையால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் 'அத்திட்டம் இந்த மாத இறுதிக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது என புனர்வாழ்வு அதி காரசபையின் நிறைவேற்று பணிப்பாளர் . என்.புவனேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் உள்ள புனர் வாழ்வு அதிகாரசபையால் முன்னாள் போரா ளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல் வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

15 ஆம் பக்கம் பார்க்க...

ESWARRAN
Traders, Transport + Service, Courier Service & Passenger Service
தினசரி பஸ் சேவை
கொழும்பு → யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் → கொழும்பு
ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்து சேவை பிறந்திருக்கும் 2017 புத்தாண்டில் புதுப் பொலிவுடன் புத்தம் புதிய அதிநவீன சொகுசு பஸ்களுடன் பாதுகாப்பும் சௌகரியமுமான தனது சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.
● புறப்படமுன் தெய்வ தரிசனம்

Hot Line 077 767 4119
Booking Hot Lines:- Colombo - 077 780 6583
Jaffna - 077 780 6573, 077 780 6574
(C-7309)

**பிரத்தியேக வகுப்பு**

கணிதம் & விஞ்ஞானம்

தரம் 6 - O/L வரை

**English & Tamil Medium**

வீட்டிற்கு வந்து சிறப்பாக கற்பிக்கப்படும்

Tel : **076 886 5300**

---

**Personal Classes**

English Literature

For Grade 10 & 11 (O/L)
Home Visit Classes

Please Call : **Mr.Prashath**

Tel : **076 803 4994**

---

**டோமன் நாய்க்குட்டிகள்**

45 நாள் நிரம்பிய நல்லின டோமன் (Doberman Pinscher) நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

Pure Breed - Black & Tan Colour

தொ.பே: **078 528 2879**

யாழ்.நகர்

(7578)

---

**Personal Classes**

English

தரம் 6 - O/L வரை

வீட்டிற்கு வந்து சிறப்பாக கற்பிக்கப்படும்

Tel : **078 528 2879**

---



# போஸ்கோ

## திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

**யாழ் நகரை நோக்கி**

**"சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படும் உங்கள் திருமணத்தின் அழைப்பிதழ்களை நாங்கள் வழங்குகின்றோம்."**

(சி-7321)

**- தெய்வீகம் கமழும் திருமண அழைப்பிதழ்கள் -**

610/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0370

யாழ் கிளை:-
412, ஆஸ்பத்திரி HNB அருகாமை,
சங்கீதா ஏஜென்ட் மேல் மாடி
தொ.பே: 021 222 8590

Web: www.boascocards.com Email: boasco09@yahoo.com / boascoprinters@gmail.com FB: www.facebook.com/boascocards

---

SIHARAM CAREER PATH

# கிளிநொச்சியின் முதலாவது முகாமைத்துவக் கல்லூரி ஆரம்பம்

**ஜனவரி 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணி**
**கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் விளக்கவுரை**

## அனுமதி இலவசம்

## OPEN DAY

**கீழ்வரும் கல்வி நெறிகளுக்குரிய வகுப்புகள் முதன் முறையாகத் தமிழில்**

- சந்தைப்படுத்தல் (Marketing in Tamil - Sri Lanka Institute of Marketing)
- விற்பனை நுட்பங்கள் (Sales Techniques)
- பிரத்தியேக நிறுவனங்களும் அவற்றில் வேலைவாய்ப்பு பெறும் வழிகளும்
- சர்வதேச நிறுவனங்களின் பயிற்சி நெறிகள் சர்வதேச அனுபவம் பெற்ற தமிழ் விரிவுரையாளர்களால்
- அனைத்து நிறுவனங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்படும் சான்றிதழ்
- சர்வதேச அனுபவம் உள்ள விரிவுரையாளர்களின் வழிகாட்டல்

**ஜனவரி 29ஆம் திகதி நடக்கவிருக்கும் திறந்த நாள் (Open Day) நிகழ்ச்சியில் இலவசமாகக் கலந்துகொண்டு உங்கள் எதிர்காலத்தை சுபீட்சமாக்கும் கல்வி நெறிகளைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள். யாருக்காக...**

- பிரத்தியேக நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள்
- சில்லறை விற்பனை நிலையங்களில் கடமையாற்றுபவர்கள்
- புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர்கள்
- தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள்
- க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதியவர்கள்
- க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கற்பவர்கள்
- பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பவர்கள்
- இளம் பட்டதாரிகள்

**விபரங்களுக்குக் கீழ்வரும் கைத்தொலைபேசிக்கு உங்கள் பெயரை SMS மூலம் அனுப்பவும்**

**071 773 0866**

SIHARAM CAREER PATH

கிளிநொச்சி வட மாகாணத்தின் மத்தியில் அமைந்திருப்பதனால் மாகாணத்தின் சகல மாவட்டங்களில் வசிப்பவர்களும் இலகுவாக இணைந்து கொள்ளலாம். *(வரும்போது விண்ணப்ப படிவங்களை நிரப்ப ஒரு பேனா கொண்டு வரவும்)*

(சி-7316)

# ஜல்லிக்கட்டு தடையை நீக்கக்கோரி யாழில் உண்ணாவிரதம்








படங்கள்;- பொ.சோபிகா

ஜல்லிக்கட்டுக்கு தடையை நீக்கக் கோரியும் தமிழக மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ்ப்பாணம் தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையினரால அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.பொது நூலகம்முன பாக முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் யாழ்.தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பனர்களான சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் இப்போராட்டத்தில் இணைந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மகஜர் ஒன்றினை இந்திய பிரதமருக்கு அனுப்பி வைப்பதற்காக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனிடம் அவரது அலுவலகத்தில் வைத்து கையளித்திருந்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட இந்தியத் துணைத்தூதுவர் ஜல்லிக்கட்டு விவகாரம் தொடர்பில் இங்குள்ள தமிழர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள முடிகிறது. இந்த மகஜரினை இந்திய பிரதமரின் அலுவலகத்துக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார். (இ-9)

# ஒற்றையாட்சி நாடு சமஷ்டி நாடாகும்

# ஆளுநரின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டால் ஆபத்து

## ஜனாதிபதிக்கு முன்னாள் ஆளுநர்கள் கடிதம்

(கொழும்பு)

மாகாண ஆளுநர்களின் அதிகாரத்தை குறைத்து அந்தப் பதவியை பெயரளவிலான பதவியாக மாற்றினால் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். இவ்வாறான அச்சுறுத்தலை எதிர்நோக்க அரசாங்கத்திற்கு இருக்கும் இயலுமை பலவீனமடையும் என 8 மாகாணங்களின் முன்னாள் ஆளுநர்கள் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். ஆளுநர்களின் அதிகாரம் குறைக்கப்படுவதன் மூலம் ஒற்றையாட்சி நாடு சமஷ்டி நாடாக மாறும் எனவும் முன்னாள் ஆளுநர்கள் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசியலமைப்புச் சபையின் நடவடிக்கை குழுவினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைய ஆளுநர் ஒருவர் ஜனாதிபதியின் பிரதிநிதியாக சுதந்திரமாக செயற்பட முடியாது உட்பட பல விடயங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் டிக்கிரி கொப்பேகடுவ, ஜகத் பாலசூரிய, மொஹான் விஜேவிக்கிரம, கருணாரத்ன திவுல்கனே, குமாரி பாலசூரிய, திஸ்ஸ பலல்ல, ஜீ.ஏ.சந்திரசிறி ஆகிய முன்னாள் மாகாண ஆளுநர்கள் கையெழுத்திட்டுள்ளனர். (இ-3)

## ட்ரம்ப் அரசாங்கத்துடன் உறவை வலுப்படுத்த ஜனாதிபதி விருப்பம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்துடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள டொனாட் ட்ரம்பிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ட்ரம்ப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதற்கான வாழ்த்துச் செய்தியில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி தெரிவிதுள்ளார்.

டுவிட்டர் ஊடாக ஜனாதிபதி இந்த வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார். (இ-3)

## பேரணியில் பங்கேற்பேன்

### சிறையில் மகிந்த அறிவிப்பு


27 ஆம் திகதி நுகேகொடையில் இடம்பெறும் பேரணியில் தான் கலந்து கொள்வது உறுதி என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல். வீரவன்சவின் நலம் விசாரிப்பதற்காக நேற்று முன்தினம் சிறைச்சாலை சென்ற சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது மகிந்த இதனை தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவின் நலம் விசாரிக்கச் சென்ற சந்தர்ப்பத்தில் கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த பலர் இணைநது கொண்டுள்ளனர்.

27 ஆம் திகதி பேரணியை மிகவும் வெற்றிகரமாக நடத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-3)

## ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்





(கொழும்பு)

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரிய போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான இலங்கையர்கள் ஈடுபட்டனர்.

இலங்கை இளைஞர், யுவதிகள் ஏராளமானவர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதேவேளை, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து பல நாடுகளில் ஆர்ப்பாட்டம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# வவுனியாவில் நேற்று இரு இடங்களில் விபத்து

## ஒருவர் படுகாயம்

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட வவுனியா நகரப் பகுதியிலும் மற்றும் குருமன்காடு சந்திப் பகுதியிலும் இடம்பெற்ற இரு வேறு விபத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில்



வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துச் சம்பவங்கள் முறையே நேற்று சனிக் கிழமை காலை 10.00 மணிக்கும், பிற்பகல் 2.00 மணிக்கும் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் உள்ள இ.போ. சபையின் பேருந்து நிலையத்தில் இருந்து காலை 10 மணிக்கு அரச பேருந்து ஒன்று ஏ - 9, வீதியின் ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்க திரும்பிய வேளை, அதே வீதியில் கல்முனையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த அரச பேருந்து மோதுண்டு விபத்துக் குள்ளானது.

இதில் தெய்வாதீனமாக எவருக்கும் எவ்விதமான உயிர் சேதங்களும் ஏற்படவில்லை ஆயினும் பேருந்துக்களுக்கு பகுதியளவு சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை பிற்பகல் 2.00. மணியளவில் குருமன்காடு சந்திப் பகுதியில் இடம்பெற்ற முச்சக்கர வணடியும் மற்றும் பார ஊர்தி ஒன்றும் மோதிக் கொண்ட விபத்துச்சம்பவதில் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் வவ்வுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இரு விபத்துச் சம்பவங்களின்போது சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார சிறிது நேரம் தடைப்பட்டிருந்த வீதிப போக்குவரத்துக்களை சீர் படுத்தியதுடன், விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு வவுனியா பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதுடன மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15, 250)

# முதிரை மரக்கடத்தல் முறியடிப்பு கைதான இருவருக்கு விளக்கமறியல்



(மல்லாவி )

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட ஓமந்தைப் பொலிஸ் பகுதியில் உள்ள பெரிய மடு அரச காட்டுப் பகுதியில் அனுமதியின்றி நுழைந்து சட்டவிரோதமாக முதிரை மரங்களை வெட்டி உழவு இயந்திரம் மூலம் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

ஓமந்தையில் உள்ள பெரியமடு காட்டுப் பகுதியில் இருந்து பெறுமதியான முதிரை மரங்களை வெட்டிக் கடத்தப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத்தகவலையடுத்து, ஓமந்தை வட்டார வனவள பாதுகாப்பு பிரிவினரும் மற்றும் விசேட அதிரடிப்படைப் பொலிஸாரும் திடீரென சுற்றி வளைப்பை மேற்கொண்டபோதே சுமார் 05, இலட்சம் ரூபா பெறுமதியான 18 முதிரை மரக்குற்றிகளுடன் அதனை வெட்டுவதற்குப் பயன்படுத்திய இயந்திர வாளுடன், புளியங்குளம், பனிக்க நீராவி மற்றும் ஓமந்தை, பெரிய மடுபகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.


இச் சட்டவிரோத மரம் வெட்டும் நடவடிக்கையை ஓமந்தை, பெரியமடு பகுதி விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த ஐ.பி ரஞ்சன தலைமையிலான அதிரடிப் படைப் பொலிஸாரும் மற்றும் ஓமந்தை வட்டார வன வளபாதுகாப்பு பிரிவினைச்சேர்ந்த ரி.வி.சமன் பிரியந்த, எல்.என்.ஏ.நுவன் சமீர, லைஜீரு உதார உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அணியினர் முறியடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (செ - 15,250)


**வீடு வாடகைக்குண்டு**

வெள்ளவத்தையில் 42-ம் இலக்க வீதியில் இரண்டு அறைகள் (A/C) இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி. நாள், மாத வாடகைக்குண்டு.

**T.P-0778378597** (7580)


# பங்களாதேஷின் பந்துவீச்சில் நியூசிலாந்துக்கு கடும் நெருக்கடி



கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வரும் 2-வது டெஸ்டில் பங்களாதேஷ் பந்து வீச்சாளர்கள் நியூசிலாந்து அணிக்கு கடும் நெருக்கடி கொடுத்து ஓட்டங்களைக் கட்டுப் படுத்தியுள்ளனர்.

நியூசிலாந்து- பங்களாதேஷ் அணிகள் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் கிறிஸ்ட்சர்ச் நகரில் தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி பட்டிங்கை தொடங்கிய பங்களாதேஷ் அணியின துவக்க வீரர் தமீம் இக்பால் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மெஹ்முதுல்லா 19 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதையடுத்து 3-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சவுமியா சர்க்கார்- சாகிப் அல் அசன் ஆகியோர் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். அரைசதம் கடந்து விளையாடிய சவுமியா சர்க்கார் 86 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். சாகிப் 59 ஓட்டங்கள் சேர்த்து அவுட் ஆனார்.

அதன்பின்னர் நியூசிலாந்தின் சிறப்பான பந்துவீச்சில் பங்களாதேஷ் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்தன. நுருல் ஹசன் (47 ஓட்டங்கள்) தவிர மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற, பங்களாதேஷ் அணியின் முதல் இன்னிங்ஸ் 289 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது. அத்துடன் முதல் நாள் ஆட்டம் முடித்துக் கொள்ளப் பட்டது.

நியூசிலாந்து தரப்பில் சவுத்தி அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். போல்ட் 4 விக்கெட்டும், வாக்னர் 1 விக்கெட்டும வீழ்த்தினர்.


நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. நியூசிலாந்து அணியின் ராவல், லாதம் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ராவல் 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த கப்டன் வில்லியம்சனை 2 ஓட்டங்களில் வெளியேற்றினார் கம்ருல் இஸ்லாம் ரபி.

நியூசிலாந்து அணி 47 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது. 3-வது விக்கெட்டுக்கு லாதம் உடன் ராஸ் டெய்லர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 3-வது விக்கெட்டுக்கு 106 ஓட்டங்கள் சேர்த்தது. லாதம் 68 ஓட்டங்கள் எடுத்தும், டெய்லர் 77 ஓட்டங்களும் எடுத்தும் ஆட்டம் இழந்தனர்.

அதன்பின் நியூசிலாந்து அணியின் விக்கெட்டுக்களை சீரான இடைவெளியில் பங்களாதேஷ் பந்து வீச்சாளர்கள் வீழ்த்தினார்கள். சான்ட்னெர் (29), வாட்லிங் (1), கிராண்ட்ஹோம் (0) அடுத்தடுத்து அவுட்டாக நிக்கோல்ஸ் மட்டும் நிலைத்து நின்று அரைசதம் அடித்தார்.

நியூசிலாந்து அணி 2-வது நாள் ஆட்ட முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 260 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இதனால் முதல் இன்னிங்சில் 300 ஓட்டங்களுக்குள் நியூசிலாந்து அணியை கட்டுப்படுத்த வாய்ப்புள்ளது.

அப்படியிருந்தாலும் 2-வது இன்னிங்சில் பங்களாதேஷ் அணி அதிக ஓட்டங்கள் குவிக்க வேண்டியது அவசியமாகும். அப்படி குவித்தால்தான் நியூசிலாந்திற்கு நெருக்கடி கொடுக்க முடியும். (க)



# மாதிரிக்கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ஓதியமலை, பழம்பாசி கிராமங்களில் இன்று அடிக்கல் நாட்டுவிழா ஏற்பாடு

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஓதியமலை மற்றும் பழம்பாசி ஆகிய கிராமங்களில் மீள் குடியேற்றத்தின் பின்னர் மீள் குடியேறியுள்ள குடும்பங்களில் காணி இல்லாமலும், வீட்டுத் திட்டங்களில் உள்வாங்கப்படாமலும் உள்ள 100, குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மேற் கொள்ளப்பட்டு வரும் "கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு" (செமட்ட செவண) மாதிரிக் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டில் அவர்களுககுரிய வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் யதுகுசிங் - அனுருத்தனன் தெரிவித்துள்ளார்.

இதன்படி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓதியமலை கிராமத்திலும் முற்பகல் 11.30 மணிக்கு பழம்பாசி கிராமத்திலும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஓதியமலை கிராமத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் காணிகள் இன்றியும், வீட்டுத்திட்டத்தில் வீடுகள் கிடைக்காமல் இருக்கும் 50 குடும்பங்களுக்கும், மற்றும் பழம்பாசிக் கிராமத்தில் வீடுகளை புனரமைப்பு செய்ய வேண்டிய 50, குடும்பங்களுமாக மொத்தம் 100, குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ் அடிக்கல் நாட்டு நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், துறைசார்ந்த திணைக்களங்களின் அதிகாரிகள், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட கிராம அலுவலர்கள், கிராமட்ட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலதரப்பட்டவர்களும் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்கவுள்ளதாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (செ-15)

# இலங்கைக்கு எதிரான இருபது-20 தென்னாபிரிக்கா அணி வெற்றி



இலங்கை அணிக்கெதிரான முதல் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் டேவிட் மில்லரின் அதிரடியால் தென்னாபிரிக்கா 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாப்பிரிக்கா 3-0 எனக் கைப்பற்றியது.

டெஸ்ட் தொடரை தொடர்ந்து இரண்டு போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் செஞ்சூரியன் நகரில் நடைபெற்றது.

மழைக் காரணமாக போட்டி 10 ஓவராக குறைக்கப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பட்டிங் செய்த தென்னாபிரிக்கா 10 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 126 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் மில்லர் 18 பந்தில் மூன்று பவுண்டரிகள், மூன்று சிக்சர்களுடன் 40 ஓட்டம் எடுத்தார். கப்டன் டுஹோர்டியன் அவுட்டாகாமல் 18 பந்தில் 3 பவுணடரிகள், ஒரு சிக்சருடன் 31 ஓட்டங்கள் சேர்த்தார்.

பின்னர் 127 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களம் இறங்கியது. அந்த அணியால் 10 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 107 ஓட்டங்களே எடுகக முடிந்தது. இதனால் தென்னாபிரிக்கா 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 2-வது மற்றும் கடைசி போட்டி இன்று நடைபெறவுள்ளது. (க)




ஏழாலை. ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா நிலைய முன்றலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், ஏழாலையைச்சேர்ந்த புலம்பெயர் உறவான சிவகாந்தனும் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணப்பொதிகளையும் வழங்கி வைத்தனர். நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன், புலம்பெயர் உறவான சிவகாந்தன் மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், மாணவர்கள் எனபலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிஷோர்)

# போதைப்பொருள் தொடர்பில் விழிப்புணர்வு மிக முக்கியம்

## யாழ்.மதுவரித் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுவை ஒழிப்பதற்கு மது பானசாலைகளை மூடுவதில் பயன் இல்லை என தெரிவித்த யாழ். மாவட்ட மதுவரி திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சோதிநாதன் போதைப் பொருள் தொடர்பில் ஒவ்வொருவரிடத்திலும் விழிப்புணர்வே மிக முக்கியமானது எனவும் தெரிவித்துள்ளார்.



போதைப்பொருள் மற்றும் எச்.ஐ.வி.தொடர்பாக மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்றையதினம் யாழ்பாணம் எச்.என்.பி.கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வளவாளராக கலந்து கொணடு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் . மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் மதுசாரத்தினை நாம் ஒழிப்பதற்கு மதுபான சாலைகளை மூடி எந்தவொரு பயனும் இல்லை. நாம் மதுபான சாலைகளை மூடினால் கசிப்பு உற்பத்தி அதிகரித்து விடும். ஆகவே நாங்கள் குறித்த விடயம் தொடர்பில் எமது பிள்ளைகள் மற்றும் சமூகத்தை விழிப்படைய செய்வது முக்கியமானது.

குறிப்பாக தற்பொழுது பாடசாலை மாணவர்களிடையே இந்த போதைப்பொருள் பாவனை அதிகமாக காணப்படுகின்றது. அவர்கள் ஒருமுறை போதைப்பொருளை பயன்படுத்தினால் அவர்களை அறியாமலேயே அதற்கு அடிமையாகி விடுவார்கள்.

ஆகவே நாம் எமது இளைஞர்களை சரியான பாதையில் வழி நடத்த முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச றோட்டரி மாவட்டம் 3220, சர்வதேச லயன்ஸ மாவட்டம் 306 A2 மற்றும் கொழும்பு நகரமைய றோட்டரி கழகங்கள் ஆகியன இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் றோட்டரி கழக அங்கத்தவர்கள், யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொணடனர். (இ-9)

# மூன்று மாதங்களாக அம்புலன்ஸ் இல்லை

வடமராட்சிக் கிழக்கு முள்ளியான் வைத்தியசாலையில் மூன்று மாதத்திற்கு மேலாக அம்புலன்ஸ் வண்டி இல்லை என அப்பகுதி மக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடமராட்சிக் கிழக்கின் எல்லைப் பகுதியிலுள்ள இம் முள்ளியான் வைத்தியசாலையில் எந்நேரமும் ஓர் அம்புலன்ஸ் வண்டி இருக்க வேண்டும் என்பது சுகாதார பணிப்பாளரின் வேண்டுகோளாக இருந்துள்ளது.

ஆனால் இவ்வைத்தியசாலையில் இருந்த அம்புலன்ஸ் வண்டி திருத்த வேலைக்காக கொண்டு செல்லப்பட்டு மூன்று மாதங்கள் கடந்தும் இதுவரையில் திரும்பிகொண்டு வரப்படவில்லை. இவ் வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களை மாற்றுவதாயின் பளை, மருதங்கேணி, அம்பன் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகளே சென்று வரவேண்டி உள்ளதாகவும் பல கிலோமீற்றர்கள் கடந்து செல்வதற்குள் உயிர் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

எனவே முள்ளியான் வைத்தியசாலைக்கு உடனடியாக ஒரு அம்புலன்ஸ்வண்டி வழங்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சிடம் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-60)

# இரத்ததானம்

அமரர்கள் லஜிதன், திருக்குமரன் ஆகியோரது 150ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12மணிவரை அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். (இ-5)



ஜனாதிபதி பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு வடமராட்சியில் ஐங்கரா விளையாட்டுக்கழக 50 இளைஞர்கள் விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள மழை நீர், கழிவு நீர் செல்லும் வீதியை சிரமதானம் செய்யும்போது

# ‘மனிதாபிமான உதவிகள்’ வழங்கல்




"மனிதாபிமான உதவிகள்" எனும் தொனிப்பொருளில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகியமாவட்டங்களில் உள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட ஆயிரத்து 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கபபட்டதுடன், பல் கலைக்கழகத்துக்கு தெரிவாகிய 3 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை மற்றும் பாலர் பாடசாலை தளபாடங்கள் வழங்கப்பட்டது டன், சிறைச்சாலையில் உள்ள சிறைக்கைதிகளுக்கு தொலைக்காட்சிப்பெட்டியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய சத்துரு சேனாரட்ன, முற்போககு தமிழ் தேசிய கட்சி யின் செயலாளர் நாயகம் எஸ். விஜயகாந் பாடசாலை மாணவர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# இராசி பலன்

22.01.2017

(தை 09, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

தசமி முன்னிரவு 11.24 மணிவரை

விசாகம் பிற்பகல் 12.38 மணிவரை

சுபநேரம் 9.35-11.05 மணிவரை

இராகுகாலம் 5.05-6.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி சந் | குரு | |

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் நாள்.

**மேடம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**கடகம்** பெற்றோர் மீதான பாசம் கூடும், உடல்நலன் சீராகும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாடு குதூகலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

# பல்கலைக்கழகங்களுக்கு 'இருண்ட காலம்' தொலைவில் இல்லை

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரியினால் பல்கலைக்கழகங்கள் "இருண்ட காலம்" ஒன்றை அனுபவிக்கும் நாள் மிக தொலைவில் இல்லை என தெரிவித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவசர கடிதம் ஒன்றினை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் அனுப்பியுள்ளனர்.**

அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நம் நாட்டில் மருத்துவர் ஒருவராக பணியாற்ற பதிவு செய்ய வேண்டிய இரண்டு அத்தியாவசிய தேவைகளின் அடிப்படையில் முதலாவது இலங்கை மருத்துவ சபையின் ஒப்புதலின் படி எந்த அரசாங்கத்திற்கும் மருத்துவ துறைப் பயிற்சி குறித்தும் அவர்களது சேவைகள் குறித்தும் நோயாளர்களின் உயிர்களின் பாதுகாபபை உறுதி செய்ய வேணடிய கடமையுள்ளது.

இதனை உறுதி செய்வதற்கு மருத்துவ சபைகள் எல்லா நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரி ஒன்று மருத்துவ சபையின் ஒப்புதல் இன்றி இருக்க முடியாது. ஆனால் இந்த அடிப்படைக் கொள்கையை மீறியே சைற்றம் மாலபே நிறுவனம் தன்னை ஒரு மருத்துவ கல்லூரி என்று அழைத்துக் கொண்டு மாணவர்களை ஆட்சேர்த்து அம் மாணவர்களுக்கு பயிற்சியும் வழங்கி வருகின்றது.

பட்டம் வழங்கும் அந்தஸ்தின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களின் சட்டப் பிரகாரம் பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் ஒன்றிற்கு பட்டம் வழங்கும் அந்தஸ்து ஒரு வர்த்தமானி அறிவித்தல்' மூலம் வழங்கப்படும். குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்திற்கு எந்த ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலமும் பட்டம் வழங்கும் அந்தஸ்து வழங்கப்பட வில்லை.

மாலபே என்று அழைக்கப்படும் மருத்துவ கல்லூரியில் இருந்து வெளியேறிய மாணவியினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கில் மேற்குறிப்பிட்ட உண்மைகளை சரியாகவும் தெளிவாகவும் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் தனது "இருண்ட காலம்" ஒனறை அனுபவிக்கும் நாள் மிக தொலைவில் இல்லை என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். இந்த சூழலில் சைற்றம் மாலபே பிரச்சினை காரணமாக தற்போதுள்ள அமைதியின்மை பெரும் கவனத்தை ஈர்க்கும் விடயமாகும்.

இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமையிலிருந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை பாதுகாக்கவும் நோயாளிகளின் உயிர்களைப் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் இந்த பிரசினை பற்றி விரைவில் கலந்துரையாட ஒரு வாய்ப்பு தர வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தனியார் மருத்துவக்கல்லூரியை தடை செய்யக்கோரி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீ மாணவர்கள் 6 ஆவது நாளாக தமது பகிஷ் கரிப்பை இரவு முழுவதும்மேற்கொண்டதுடன் குறித்த போராட்டத்துக்கு வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தமது ஆதரவினை தெரிவித்துள்ளனர். (இ-9)

## வடக்கு மாகாணத்தில் இலத்திரனியல் முறையில் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மோட்டார் வாகனபோக்குவரத்து திணைக்களத்தினூடாக வருடாந்த வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதனை மேலும் வினைத்திறனான பயனுறுதிமிக்க சேவையாக வழங்கு முகமாகஇலத்திரனியல்முறையில் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தின் (CRL Programme) மூலம் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தற்போது வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவை வடக்கு மாகாணத்தின் சகல பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் முற்றாக அமுல்படுத்தப்பட்டபின்னர்வட மாகாணத்தினுள் பதிவிலுள்ள வாகன உரிமையாளர்கள் வடக்கு மாகாணத்தின் எந்த பிரதேச செயலகங்களிலும் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஆனால் இத்திட்டத்தில் வட மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் பதிவிலுள்ள வாகனங்களுக்குரிய வருமானவரி அனுமதிப்பத்திரங்களை வடக்கு மாகாணத்தில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான வாகனங்களுக்கு அந்தந்த மாகாணங்களுக்கு சென்று வருமான வரி அனுமதிப்பத்திரத்தினைபொது மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே எதிர் காலத்தில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் ஏனைய மாகாணங்களின்பதிவிலுள்ளதமது வாகனங்களின் பதிவினை விரைவாக வடக்கு மாகாணத்திற்கு மாற்றி வடக்கு மாகாணத்தில்தங்களுக்குரியவாகன வருமானவரி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதனைஉறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும் இதன் ஆரம்பப்படியாக வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து இலத்திரனியல் முறையில் வாகனவருமானவரிஅனுமதிப்பத்திரம் வழங்கலிற்கான அங்குரார்ப்பண வைபவம் நாளை 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் மீன்பிடி போக்குவரத்து வர்த்தகவாணிப, கிராம அபிவிரு த்தி,வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமைச்சர் பா.டெனிஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்நா.வேதநாயகன், ICTA கொழும்பு நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் பி.வி. அமரசேகர, UNDP நிறுவ னத்தின் GLED நிகழ்ச்சித் திட்டத்தின் நிர்வாக மற்றும் திறன்கள் அபிவிருத்தி வல் லுநர் இ.தனராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ




## கணனி வன்பொருள் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் (Computer Hardware Technician-NVQ Level 3) இற்கான 1வருட காலத்தைக் கொண்ட இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் புயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை

க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.தகுதிஉடையவர்கள்முழுப் பெயர்,முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள்,தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத்தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் ,NAITA , இல 44,சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி,யாழ்ப்பாணம் என்னும்முகவரிக்கு10.02.2017 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கைநெறிக்கன விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்படவேண்டும் என யாழ். மாவட்ட அலுவலகர் கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (இ

## பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் இன்று

அகில இலங்கை சைவப் புலவர்சங்கத்தின் இளஞ்சைவப் புலவர் சைவப்புலவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் இன்று 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லை திருஞானசம்பந்நர் ஆதீனத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் கலைஞானச்சுடர் சைவசித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆசியுரையினை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி ம.வேதநாதன் கலந்துகொண்டு பட்டமளிப்பு பேருரையினை நிகழ்த்தி பட்டங்களினை வழங்கி வைப்பார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சைவ சித்தாந்த முதுகலைமாணிகற்கை நெறி இணைப்பாளர் கலாநிதி திருமதி சுகந்தினி முரளிதரன். கௌரவ விருந்தினர்களாக ஆகமப் பிரவீணர் சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்தி ஹரக்குருக்கள்.சிவஸ்ரீ சி.குமார ராஜக்குருக்கள் சி.கந்தசாமி. க.க.க. சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## வாழ்வாதார உதவி வழங்கல்



வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான கே. என்.விந்தன் கனகரத்தினம் மற்றும் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் தங்களது நிதி ஒதுக்கீட்டின் கீழ் நெடுந்தீவு பகுதியல் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களுக்கு பல்வேறு உதவிகளை கடந்த வாரம் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கியிருந்தனர்.

மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தனது நிதியில் இருந்து நெடுந்தீவில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்கள் மற்றும சுயதொழில் மேற் கொள்வோருக்கு ஏழு இலட்சத்து இரண்டாயிரம் ரூபாய் பெறு மதியில் 52 துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார்.

மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை தனது நிதியில் நெடுந்தீவு முன்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு ஒலிபெருக்கி சாதனம், பிறிண்டர்கள், விளையாட்டு உபகரணங்கள், சனசமூக நிலையத்திற்கு புத்தகங்கள் என ரூபா மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான பொருட்கள்வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வுக்கு நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி திருமதி. சாரதாதேவி கிருஷ்ணதாஸ் தலைமை தாங்கினார். நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள்ஆசிரியர்கள் எனபலரும்கலந்து கொண்டிருந்தனர். (இ-9)

## யாழ்ப்பாணக் கருத்தரங்கு அமர்வு - 2017



இலங்கையில் முதலாவது பதிவு முகவர்

# ஆஸ்திரேலியாவிற்கு

நிரந்தர குடியேற்றம்

**கருத்தரங்கு - 1**

ஆஸ்திரேலியாவிற்கு Still Migration

அனுமதிக்கட்டணம் 1000 ரூபா

ஆரம்பம்: மு.ப. 9.45

குறிப்பிட்ட தினத்தில் சிற்றுண்டி வழங்கப்படும்

**கருத்தரங்கு - 2**

ஆஸ்திரேலியாவிற்கு Student Migration

இலவச கருத்தரங்கு

ஆரம்பம்: மு.ப. 11.30

Saturday, Jan 28 @ Green Grass Hotel, Jaffna

இந்த பெறுமதியான சந்தர்ப்பத்தைத்தவறவிடாதீர்கள்

ஆசனங்கள் வரையறுக் கப்பட்டுள்ளது

கடந்த பல வருடங்களாக Skilled Migration Visa & Student Visas 100 % வெற்றிகரமாக வழங்கப்படுகின்றது.

Q & A Session முக்கிய ஆலோசகரால் வழங்கப்படும்.

ஆஸ்திரேலியாவின் இடம்பெயர்வு ஆலோசனை முன்னோடிகள்



HIROSH GAMAGE
(MAERN 0320696)
Principal Migration Consultant, Australian Migration Services Colombo.

PETER RUSSELL LOUGHTON
(MARN 9789986)
General Manager, Australian Migration & Citizenship Services (Australia)

உங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பவும் ஏனைய ஆசன ஒதுக்கீடுகளுக்கு அழைக்கவும்

AUSTRALIAN EDUCATION CENTRE
(Subsidiary of Australian Migration Services)

Sri Lankan Office: 17, 18th Lane, Colombo 03, Sri Lanka

Head Office: 184, Level 1, Grange Road, Fairfield, Victoria 3078, Australia.

E-mail: edu@multinational.com.au
consultant@multinational.com.au

0115 500 100
0773 950 448
077 107 0991
077 107 6990
077 107 6991

Please visit us: www.facebook.com/AustralianEducationCentre

## மாதுளன் பதிப்பகம்

கொம்பியூட்டர் ரைப் செற்றிங் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. சாவகச்சேரி கொடிகாமத்திற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (சி-7315)

தொடர்புகளுக்கு-077 381 2450

## வீடு விற்பனைக்குண்டு

கோப்பாய் தெற்கு இராசவீதியில் 5 3/4 பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 548 8591 (7439)

## வேலையொன்றை எதிர்பார்க்கின்றீர்களா?

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம், கோடியல், பிஸ்கட், பால்மா, கையுறை போன்ற நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறுகின்றது.

ஆண், பெண் -18-45

077 683 8226

(சி-7317) 077 069 9492

## கடை விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி றோட் யாழ்ப் பாணத்தில் கடை ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-0779107242 (7565)

# விபத்தில் ஒருவர் பலி

தெற்கு அதிவேக வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளது டன் மேலும்ஆறுபேர்காயமடைந்துள்ளனர்.

கோளாறு காரணமாக வீதியின் இடது புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றின் மீது கனரக வாகனமொன்று மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது. குறித்த விபத்தில் உயிரிழந்தவர்பாணந்துறை பகுதியைச் சேர்ந்த டி.ஆர். உபாலி டிடியூஸ் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்த மேலும் 6 பேர் எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற "றோயல் குளுக்கோஸ்"

PACKED BY: ROYAL INDUSTRIES, Colombo-13 TP:- 077 727 7670

தற்போது புதிய வடிவில்!!




இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள் "றோயல் குளுக்கோஸ்"

தொடர்புகளுக்கு

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




### திரு. இரங்கையா இரகுபதி

வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்தில் வனஜீவராசிகள் பாதுகாவலராக கடமையாற்றி 22.01.2017 இன்று அகவை அறுபதில் ஓய்வுபெறும் திரு.இரங்கையா இரகுபதி அவர்கள் ஓய்வுக் காலத்தில் சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு பல்லாண்டுகாலம் நீடூழி வாழ எல்லாம்வல்ல பரம்பொருளை வணங்கி வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ செ.சதாசிவக் குருக்கள் குடும்பம்
நாயன்மார்கட்டு. (7574)

சிவஸ்ரீ ச.திருஞானசம்பந்தர் ஐயா குடும்பம்
மண்கும்பான்.

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/கடை
தொ.இ: B/6795

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 67 செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:பொறியியல் உதவியாளர்
தொ.இ: B/6796

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/6798

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/வியாபாரம்
தொ.இ: B/6799

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 36 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/3908

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/3919

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/3935

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 37.
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: G/3943

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

## சுயாதீன முகவர் தேவை

கொழும்பு நகரில் உள்ள புகழ்பெற்ற குடியேற்ற ஆலோசனை முகவர் நிலையம் யாழ்.நகரில் தமது வாடிக்கையாளர்களுக்கு தேவையான ஆலோசனை மற்றும் விசா செயற்பாடுகளை ஒருங்கிணைத்து சுயாதீன முகவராக பணியாற்ற விரும்புவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகிறது. ஓய்வு பெற்றவர்கள் கூட விண்ணப்பிக்க முடியும்.

உங்கள் விண்ணப்பங்களை edu@multinational.com.au இற்கு அனுப்பி வைக்கவும்.

அல்லது

மேலதிக விபரங்களுக்கு 077 107 6990 இற்கு தொடர்பு கொள்ளவும்.


# ஜப்பானையும் தாக்கிய ஜல்லிக்கட்டு சுனாமி

## ஆதரவாக கையெழுத்து வேட்டை

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவில் உள்ள பங்குசாய் உள்ளிட்ட நான்கு முக்கிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும் பீட்டா அமைப்பை தடைசெய்யக் கோரியும் கையெழுத்து வேட்டையை நடத்தி வருகின்றனர்.

தமிழர்களின் பழம் பெருமை மிக்க கலாசாரம் சார்ந்த வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கும் அந்நிய நாட்டு சக்திகளுக்கு இடமளிக்க மாட்டோம். எங்களது பாரம்பரியத்தை பாதுகாக்க இறுதிமூச்சு உள்ள வரை போராடுவோம் என பங்குசாய் நகரில் சுமார் 300 பேர் பங்கேற்ற போராட்டத்துக்கு தலைமை தாங்கிய அமைப்பாளர் தெரிவித்தார்.



இதேபோல், இங்குள்ள நிஷிகசாய் பகுதியில் பிரமிட் பூங்கா, செய்ஷின்ச்சோவில் உள்ள ரியோகுச்சி பூங்கா, டொக்காய்ச்சிபா பகுதியில் உள்ள கயாபா பூங்கா, ட்சுகுபா பகுதியில் உள்ள டோஹோ பூங்கா, கவாசாகி நகரில் உள்ள ஃபியூஜிமி பூங்கா மற்றும் நகோயா பகுதியிலும் தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டை ஆதரித்தும், பீட்டா அமைப்புக்கு தடை விதிக்க கோரியும் நேற்று கையெழுத்துப் போராட்டம் நடந்தது.

பெறப்படும் கையெழுத்து படிவங்கள் அனைத்தும் தலைநகர் டோக்கியோவில் உள்ள இந்திய தலைமைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்படும் என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# பயங்கர குண்டுவெடிப்பு 20பேர் பரிதாபமாகப்பலி!



ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள சந்தைப் பகுதியில் நேற்று நிகழ்ந்த குண்டு வெடிப்பில் சிக்கிய 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் குர்ரம் பிரதேசத்தில் உள்ள பரச்சினார் நகரில் அமைந்துள்ள ஈத்கா சந்தைப் பகுதியில் நேற்று அதிநவீன சக்திவாய்ந்த குண்டு வெடித்து சிதறியது.

நேற்றுக் காலை சுமார் 9 மணியளவில் அந்த சந்தையில் இருந்த காய்கறி பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த குண்டு வெடித்த விபத்தில் 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த 50இற்கும் அதிகமானவர்கள் அருகாமையில் உள்ள பரச்சினார் அரசு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு சிகிச்சை பெற்றுவரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அலி கான் உத்தரவிட்டுள்ளார். (இ)

# மத்திய பேருந்து நிலையத்தில் இழுபறி; மஸ்தான் எம்.பியுடன் பிரதிநிதிகள் சந்திப்பு

வவுனியா மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பணியினை ஆரம்பிப்பதில் அரச மற்றும் தனியார் பேருந்து துறையினரிடம் காணப்படும் இழுபறி நீடித்து வரும் நிலையில் இதனை தீர்க்கும் முகமாக அரச போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை பிரதிநிதிகள் மற்றும் தனியார் போக்குவரத்து வவுனியா மாவட்ட பிரதிநிதிகள், வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானுக்கும் இடையே விசேட சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மஸ்தானின் பிரத்தியேக அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது அரச மற்றும் தனியார் பேருந்துச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஒருமித்த கருத்துடன் இணைந்து செயற்படுவதற்கு முடிவு எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் இணைத்துக் கொண்டு நாளை திங்கட்கிழமை காலை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இறுதி முடிவை எடுப்பதெனவும் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் திங்கட்கிழமை கலந்துரையாடி முடிவு எட்டும் வரை எவ்வித இடையூறுகளையும் பொதுமக்களுக்கு ஏற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். அத்தோடு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (5-15)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2017
22

- 1506 - 150 சுவிஸ் பாதுகாப்புப் படைகளைக் கொண்ட முதற் தொகுதி வத்திக்கானை அடைந்தது.
- 1798 - நெதர்லாந்தில் இராணுவப் புரட்சி இடம் பெற்றது.
- 1840 - பிரித்தானிய குடியேற்றவாதிகள் நியூசிலாந்தை அடைந்தனர்.
- 1863 - ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போலந்து, லித்துவேனியா, பெலரஸ் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி வெடித்தது.
- 1879 - தென்னாபிரிக்காவின் சூலுப் படைகள் ஐசண்டல்வானாவில் வைத்து பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1889 - கொலம்பியா கிராமபோன் வாஷிங்டனில் அமைக்கப்பட்டது.
- 1899 - ஆறு ஆஸ்திரேலிய காலனிகளின் தலைவர்கள் கூட்டமைப்பு பற்றி விவாதிக்க மெல்பேர்னில் கூடினர்.
- 1901 - 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணி தனது 81வது அகவையில் காலமானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.
- 1905 - சென் பீட்டர்ஸ்பேர்க்கில் சார் மன்னருக்கெதிராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.
- 1906 - பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவர் தீவில் வலென்சியா என்ற பயணிகள் கப்பல் பாறைகளுடன் மோதியதில் 130 பேர் கொல்லப்பட்டனர்.
- 1927 - உலகின் முதல் வானொலி வர்ணனை, ஹைபரியில் நடைப்பெற்ற ஷெப்பீல்ட் யுனைடெட் இங்கிலாந்து லீக் கால்பந்து போட்டி ஒலிபரப்பாகியது
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் லிபியாவின் டோப்ருக் நகரை நாசிப் படைகளிடம் இருந்து கைப்பற்றியது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் செண்பக விநாயகர் கோயில் ஜப்பானியரின் குண்டுவீச்சினால் பெரும் சேதமுற்றது.
- 1952 - உலகின் முதலாவது பயணிகள் ஜெட் விமானம் (BOACapd; Comet) சேவைக்கு விடப்பட்டது.
- 1957 - சினாய் தீபகற்பத்தில் இருந்து இஸ்ரேல் வெளியேறியது.
- 1964 - கென்னத் கவுண்டா வட றொடீசியாவின் முதலாவது அதிபரானார்.
- 1973 - நைஜீரியாவின் கானோ விமான நிலையத்தில் போயிங் விமானம் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் 176 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - நோபல் பரிசு பெற்ற சோவியத் இயற்பியலாளர் அந்திரே சாகரொவ் மாஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.
- 1984 - ஆப்பிள் மக்கிண்டொஷ் கணினி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1992 - சாயீரின் தேசிய வானொலி நிலையத்தை தீவிரவாதிகள் கைப்பற்றி அரசை பதவி விலகும்படி அறிவித்தனர்.
- 1999 - இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் ஆஸ்திரேலிய கிறிஸ்தவ மதப் போதகர் கிரஹாம் ஸ்டைன்ஸ் என்பவரும் அவரது இரு மகன்களும் இந்துத் தீவிரவாதிகளால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.
- 2003 - பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.
- 2004 - ஆர்க்குட் தொடங்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1561 - பிரான்சிஸ் பேக்கன், ஆங்கிலேய மெய்யியலாளர் . (இ. 1626)
- 1788 - ஜார்ஜ் கோர்டன் பைரன், ஆங்கில-ஸ்கொட்டியக் கவிஞர் . (இ. 1824)
- 1869 - கிரிகோரி ரஸ்புடின், உருசிய மதகுரு . (இ. 1916)
- 1891 - அண்டோனியோ கிராம்ஷி, இத்தாலிய மெய்யியலாளர், அரசியல்வாதி. (இ. 1937)
- 1906 - ராபர்ட் ஈ. ஓவார்ட், அமெரிக்க எழுத்தாளர். (இ. 1936)
- 1909 - ஊ தாண்ட், ஐக்கிய நாடுகள் சபையின் 3வது பொதுச் செயலாளர் . (இ. 1974)
- 1922 - தி. வே. கோபாலையர், தமிழறிஞர். (இ. 2007)
- 1988 - கிரெக் ஓடென், அமெரிக்காவின் கூடைப் பந்து ஆட்டக்காரர்.


### இறப்புகள்

- 1666 - ஷாஜகான், முகலாலயப் பேரரசர் .(பி. 1592)
- 1901 - விக்டோரியா மகாராணி, ஐக்கிய இராச்சியம். (பி. 1819)
- 1922 - பதினைந்தாம் பெனடிக்ட் (திருத்தந்தை) . (பி. 1854)
- 1947 - சுவாமி ஞானப்பிரகாசர், ஈழத்தின் பன்மொழிப் புலவர் . (பி. 1875)
- 1978 - ஹெர்பட் சட்கிளிஃப், ஆங்கிலேயத் துடுப்பாளர் . (பி. 1894)
- 2005 - வேந்தனார் இளங்கோ, ஆஸ்திரேலியத் தமிழறிஞர்.
- 2008 - ஹீத் லெட்ஜர், ஹாலிவுட் நடிகர் .(பி. 1979)
- 2014 - அ. நாகேஸ்வர ராவ், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் . (பி. 1924)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 200 | 200 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 80 | 70 |
| கோவா | 20 | 20 | 40 | 40 | 30 |
| கரட் | 80 | 40 | 80 | 120 | 50 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 80 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 120 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 80 | 80 | 50 |
| பயற்றங்காய் | 120 | 120 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 70 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 300 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 1000 | 500 | 600 | 600 |
| போஞ்சி | 80 | 100 | 100 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 180 | 150 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 65 | 50-60 | 40 |
| இராசவள்ளி | 250 | 160 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 180 | 200 | 180 |
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 80 | 100 | 70 |

# தமிழ்நாட்டின் செழுமைமிக்க கலாசாரம் பாதுகாக்கப்படும்-பிரதமர் மோடி உறுதி



தமிழ்நாட்டின் செழுமை மிக்க கலாசாரத்தை எண்ணி பெருமைப்படுவதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் மோடி தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உறுதி அளித்துள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தை எடுத்துக்காட்டும் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதி மன்று தடை விதித்துள்ளது. இதனால் இந்த ஆண்டு பொங்கலையொட்டி ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை.

இந்த நிலையில் ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பாக தமிழக அரசு அவசரச் சட்டம் இயற்ற மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதைத் தொடர்ந்து ஜல்லிக்கட்டு தொடர்பாக பிரதமர் மோடி நேற்று தனது டுவிட்டரில் கருத்துக்களை பதிவு செய்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது.

வளர்ச்சியில் புதிய உச்சங்களை அடைய தமிழக அரசுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும். தமிழர்களின் பண்பாட்டை காக்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும்.

தமிழர்களின் கலாசாரம், உணர்வுகளை காக்க மத்திய அரசு தயாராக இருக்கிறது. தமிழர்களின் பண்பாட்டைக் காக்க மத்திய அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

தமிழர்களின் உயரிய கலாசாரத்தை கண்டு பெருமைப்படுகிறேன். இதில் தமிழக அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என பிரதமர் மோடி தெரிவித்தார். (இ-3)

# வேலைவாய்ப்புகளை பிறநாட்டவர் எடுத்துக்கொள்ள விடமாட்டோம்

## ட்ரம்ப் பரபரப்பு பேச்சு

நமது வேலைவாய்ப்புகளை இனி எந்த நாடும் எடுத்துக்கொள்வதற்கு விடமாட்டோம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் பதவி ஏற்றார். முன்னதாக, 'மீண்டும் அமெரிக்காவை மாபெரும் நாடாக்குவோம்' என்ற பொருளில் வோஷிங்டனில் நடந்த விழாவில் பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் அவர் தனது மனைவி மெலானியா ட்ரம்புடன் கலந்து கொண்டார். அந்த விழாவில் பேசிய அவர் அமெரிக்கர்களை ஒன்றுபடுத்துவதற்கு வாக்குறுயளித்தார்.

"நான் கடுமையாக உழைப்பேன் என்ற உறுதியை உங்களுக்கு அளிக்கிறேன் நாம் மீண்டும் சாதனைகள் படைப்போம். நாம் மீண்டும் நம்மவர்களுக்கு வேலை வாய்ப்புகளை கொண்டு வருவோம். நமது வேலைவாய்ப்புகளை இனியும் பிற எந்த நாடும் எடுத்துக்கொள்வதற்கு விடமாட்டோம்" எனத் தெரிவித்தார்.

"நாம் நமது இராணுவத்தை மிகப்பெரிய இராணுவமாக கட்டமைப்பு செய்வோம். நாம் நமது எல்லைகளை வலிமையாக்குவோம். இதுவரை பல்லாண்டு காலமாக யாரும் செய்திராதவற்றை நாம் செய்து காட்டுவோம்" என கூறினார். லிங்கன் நினைவுச்சின்னத்தில் நடந்த இந்த விழாவில் பங்கேற்க ட்ரம்ப், மனைவி மெலானியாவுடன் வந்த போது, அங்குள்ள ஆபிரகாம் லிங்கன் சிலைக்கு வணக்கம் செலுத்தினார்.

வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்வதற்கான தனது பயணத்தில் 18 மாதங்களாக ஆதரவு அளித்து வந்த அமெரிக்க மக்களுக்கு அவர நன்றி தெரிவித்தார். (இ-3)

# ஜல்லிக்கட்டை ஆதரித்து அமெரிக்க தமிழர்கள் மாபெரும் போராட்டம்



கடல்கடந்து பரவியுள்ள ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தின் ஒருகட்டமாக அமெரிக்காவின் தெற்கு புளோரிடா பகுதியில் வசிக்கும் ஏராளமான தமிழர்களும் போராட்டத்தில் குதித்தனர்.

தடைசெய்யப்பட்ட தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக கடந்த 17ஆம் திகதி சென்னை மெரினா கடற்கரையில் ஆயிரம் இளைஞர்களுடன் தொடங்கிய அறவழிப் போராட்டம் இன்று உலகமே வியந்து பார்க்கும் வகையில் விஸ்வரூபம் எடுதத்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பல பகுதிகளிலும் தாய்மார்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க வேண்டும் என போராடி வருகின்றனர்.

இதேபோல் மும்பை, டில்லி, குஜராத் என நாட்டின் பிற மாநிலங்களிலும் விரிவடைந்த இந்தப் போராட்டம் தற்போது கடல் கடந்து உலகின் பிறநாடுகளிலும் பரவத் தொடங்கியுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸதிரேலியா, தென்னாபிரிக்கா, ரஷ்யா, சீனா, கனடா, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பல நாடுகளில் வாழும் தமிழர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான பதாகைகளை ஏந்தியபடி பெருந்திரளாக போராட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.

குறிப்பாக அமெரிக்காவில் தமிழர்கள் அதிகம் வசிக்கும பகுதிகளில் இந்தப் போராட்டம் விஸ்வரூபம் எடுத்து வருகிறது. அவ்வகையில், தெற்கு புளோரிடா பகுதியில் வாழும் தமிழர்கள் தங்கள் குடும்பத்தாருடன் வீதியில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.


இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற திரளான பெண்களில் சிலர் தங்களது கைக்குழந்தைகளுடன் வீதியில் அமர்ந்து ஜல்லிக்கட்டை ஆதரித்து முழக்கங்களை எழுப்பினர். (இ-3)

## பேருந்து விபத்தில் குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழப்பு

இத்தாலி நாட்டில் பேருந்து தூணில் மோதி தீப்பிடித்து எரிந்ததில் குழந்தைகள் உடபட 7 பேர் பரிதாபமாக பலியாகினர். இத்தாலி நாட்டின் வடக்கு பகுதியில் வெரோனா அருகே ஹங்கேரிய நாட்டைச் சேர்ந்த பேருந்து ஒன்று நேற்று முன்தினம் பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. திடீரென, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியின் ஓரத்தில் இருந்த பெரிய தூணின் மீது பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் அந்தப் பேருந்து தீப்பற்றி எரிந்தது.

இந்த கோர விபத்தில் அந்தப் பேருந்தில் பயணம் செய்த குழந்தைகள் உடபட 7 பேர் உடல் கருகி, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். பேருந்தை ஓட்டி வந்த சாரதியும் உயிரிழந்தார். மேலும் 12இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து குறித்த தகவலறிந்து விரைந்துவந்த பொலிஸார் மற்றும் மீட்புப் படையினர் காயமடைந்தவர்களை அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். (இ-3)

# அவசர சட்டங்கள் மூலம் ஆட்சி நடத்தாதீர்கள்!



*அரசியல் ரீதியிலான எதிர்ப்புகளைச் சமாளிக்கத் தெரியாமல், அவசரச் சட்டங்கள் மூலம் ஆட்சி நடத்தக்கூடாது என்று உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், அரசியல் சட்டப்படியான பதவிகளை வகிக்கும் உயர் நிர்வாகிகள் பலமுறை சுட்டிக்காட்டியும்கூட அவசரச் சட்டங்களை இயற்றுவதற்கு அரசுகள் சலிப்பதே இல்லை.*

*குடியரசுத் தலைவருக்கும் மாநில ஆளுநர்களுக் கும் அரசியல் சட்டத்தின் 123, 213ஆவது பிரிவுகள் வழங்கும் இந்த அவசரச் சட்டம் இயற்றும் அதிகாரம், மூன்று காரணங்களுக்காக அரசுகளால் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்காக சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தைச் சந்திக்க ஆளும் தரப்பு தயங்கினால், முதலில் அவசரச் சட்டம் இயற்றி விடுகிறது. சட்ட மேலவை அல்லது மாநிலங்களவையில் மசோதாவை நிறைவேற்றப் பெரும்பான்மை வலு இல்லை என்றால், மசோதா தோற்றுவிடக்கூடும் என்ற அச்சத்தில் அவசரச் சட் டமாக நிறைவேற்றி விடுகிறது. அவையை நடத்த விடாமல் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கூச்சலிட்டு அமளியை ஏற்படுத்திக்கொண்டே இருந்தால், ஆளும் தரப்பு அவசரச் சட்டத்தை இயற்றுகிறது.*

*உச்ச நீதிமன்றத்தின் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட அமர்வு, அவசரச் சட்டங்கள் தொடர்பாக அளி த்துள்ள புதிய தீர்ப்பு, வரம் பின்றி அவசரச் சட்டங்களை இயற்றும் போக்குக்கு அரசியல் சட்டரீதியாக உள்ள வரம்புகளைச் சுட்டிக்காட்டுகிறது.*

*இந்தத் தீர்ப்பானது, அவசரச் சட்டங்களை நீதிமன்றங்கள் ஆய்வுசெய்வதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியிருக்கிறது. இப்படி அவசரச் சட்டங்களைக் கொண்டுவர அரசுக்கு உள் நோக்கம் இருக்கிறதா, மசோதா கொண்டுவரப்பட்டது நியாயம்தான் என்று குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் திருப்திப்படும் வகையில் தரவுகள் அரசால் தரப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் இனி நீதிமன்றங்கள் ஆய்வுசெய்யக்கூடும். அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் அரசு தார்மிக நெறி களின்படி செயற்பட வேண்டும், அரசியல் சட்ட உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும், அரசியல் சட்ட முறைமை காப்பாற்றப்பட வேண்டும் என்று நினைப் பவர்கள் இத்தீர்ப்பை நிச்ச யம் வரவேற்பர்.*

*ஆனால், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்குக் காரணமே அரசியல் சௌகரியத் துக்காகத்தான், நாடாளுமன்றத்துக்கு அல்லது சட்ட மன்றத்துக்குப் பதில் சொல் வதைத் தவிர்ப்பதற்காகக் தான் என்று எப்போதுமே கூறிவிட முடியாது. மிகவும் நெருக்கடியான தருணங்களில், அவசர நிலையைக் கருதி அரசுகள் அவசரச் சட்டம் இயற்றலாம். எதிர்க்க ட்சிகளின் கோரிக்கைகளில் எளிதில் நிறைவேற்ற முடிந்தவற்றைக்கூட ஏற்க மறு க்கும் ஆளும் தரப்பின் பிடிவாதமும், நிச்சயமாக ஏற்க மறுப்பார்கள் என்று தெரி ந்தும் நிபந்தனைகளை விதிக்கும் எதிர்க்கட்சிகளும் இப்படி அமளிகளுக்கும் முட்டுக்கட்டை நிலைகளுக்கும் காரணங்களாகி விடுகின்றன. இந்தப் போக்கு காரணமாகவே அவசரச் சட்டங்கள் அதிகரிக்கின்றன.*

*அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கும் தவறாகப் பயன்படுத்துவதற்கும் உள்ள எல்லையை நீதிமன்றங்களால் சுட்டிக்காட்டத்தான் முடியும். சம்பந்தப்பட்டவர்கள்தான் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்துத் தங்களுடைய செயல்களை மாற்றிக் கொள்ள வேண்டும். முறையாகச் சட்டமியற்றி நிர்வாகம் நடத்துவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தையும் கடமையையும் ஆளும் தரப்பு - எதிர்க்கட்சிகள் என்று இரண்டுமே வெளிப்படுத்த வேண்டும்!*

நன்றி:- தஹிந்து



## நிதி நகரத்துக்கான 28 வீத நிலப்பரப்பு கடலிலிருந்து மீட்பு

கொழும்பு நிதி நகரத்தை அமைப்பதற்காக கடலில் இருந்து 28 வீத நிலப்பரப்பு உருவாக்கப்பட்டு விட்டதாகவும், எஞ்சிய நிலப்பரப்பு இந்த ஆண்டு இறுதிக்குள் உருவாக்கப்பட்டு விடும் என்றும் சீன துறைமுக பொறியியல் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெருநகர அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் கொழும்பு துறைமுக நகர திட்டத்தை ஆய்வு செய்யச் சென்றிருந்த போது சீன அதிகாரிகள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

கடலில் இருந்து மணல் நிரப்பி கொழும்பு நிதி நகரம் உருவாக்கப்படவுள்ளது. இதற்காக, மணல் அகழும் கப்பல்கள் மூலம் கடலுக்குள் நிலப்பரப்பை உருவாக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

புதிதாக அமைக்கத் திட்டமிடப்பட்ட நிலப்பகுதியில் 28 வீதம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலப்பரப்பு, இந்த ஆண்டு இறுதிக்குள் அமைக்கப்பட்டு விடும்.

இதன் பின்னர், அடுத்த ஆண்டு கொழும்பு நிதி நகர கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் சீன நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# திருமலை துறைமுக அபிவிருத்தி குறித்து இந்தியாவுடன் பேச்சு



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்து இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்க சுவிஸ் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் என்டிரிவி தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சுற்றி 15 ஆயிரம் ஏக்கர் நிலம் முதலீட்டாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு இந்தியா முதலீடுகளை மேற்கொள்வதற்கு அழைக்கிறோம்.

சீனாவுக்கு மட்டும் இங்குள்ள நிலங்களை நாம் வழங்கவில்லை. அங்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளன. சீன வர்த்தகர்களுக்கு 1300 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. அனைத்துலக கொள்கலன் முனையம் ஒன்றை அவர்கள் அமைக்கவுள்ளனர்.

இலங்கையில் இருந்து பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது. அதற்கு சீனர்கள் 2000 தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளனர்.

இதனைச் சாத்தியப்படுத்துவதற்கு தொழிற்சாலைகள், கைத்தொழில் மையங்கள், வீதிகள், நீர்வழங்கல் திட்டம், களஞ்சியங்கள், மேலதிகமாக வரும் மக்களுக்கான குடியிருப்புகள் போன்றவற்றை அமைப்பதற்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகள் தேவைப்படுகின்றன.

இங்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகள் அரசாங்கத்திடம் உள்ளன. இந்தப் பகுதியில், சீனா மாத்திரமன்றி யாரும் முதலீடு செய்யலாம். இந்தியாவும் கூட முதலிடலாம்.

இங்கு இந்தியாவும் வர வேண்டும் என்று விரும்புகிறோம். இது நடக்கும். ஆனால், இரண்டு மூன்று பிரச்சினைகள் உள்ளன. முதலாவது இந்தியாவுடன் நாம் எட்கா உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டும்.

சிங்கப்பூருடனும் ஐந்து தென்னிந்திய மாநிலங்களுடனும் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டும்.

வங்காள விரிகுடாவின் பிரதான துறைமுகமான திருகோணமலையை அபிவிருத்தி செய்வது குறித்து இந்தியாவுடன் பேசுகிறோம்.

அதுவும் நடக்கும். அதற்காக நிலங்களை இழக்க வேண்டியதில்லை. நீரைக் கொண்டு வர வேண்டியதுமில்லை.

இலங்கையில் ஏனைய பகுதியில் முதலீடு செய்வதற்கு இந்தியர்கள் விரும்புகின்றனர். அவர்களை வடக்கில் முதலீடுகளை மேற்கொள்ளச் செய்வது குறித்து அரசாங்கம் பேச்சு நடத்தி வருகிறது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## புதிய ரக தேயிலை அறிமுகம்





தலவாக்கலை சென்கூம்ஸ் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் 25 வருடகால ஆய்வுகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரக தேயிலை அறிமுகமும், குறுந்தகவல் மற்றும் தகவல் அறியும் நிலையமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் வைத்தே இந்த அறிமுக விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை தேயிலை பயிர்ச்செய்கையின் 150 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 92 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டே இவ்விழா முன்னெடுக்கப்பட்டது.

தேயிலை பயிர்ச்செய்கையின் எதிர்காலம் கருத்திற்கொண்டு தேயிலைத் துறை தொடர்பில், புத்தகம் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் 92 வருட வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் நாட்டின் ஜனாதிபதியின் முதல் வருகையாக ஜனாதிபதியின் வருகை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது அமைச்சர்களான நவின் திஸாநாயக்க, பழனி திகாம்பரம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், முக்கிய அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-3)

## லசந்த படுகொலை குறித்து அமைச்சர் பொன்சேகாவிடம் பல மணிநேரம் விசாரணை



சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக, முன்னாள் இராணுவத் தளபதியும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்தப்பட்டுளளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் இந்த விசாரணைகளை மேற்கொண்டனர்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவியில் இருந்த போதே, 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையுடன் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ள நிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

பல மணிநேரம் இந்த விசாரணைகள் இடம்பெற்றதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

## அலரிமாளிகையை ஆடு, மாடுகளும் சுற்றிவளைக்குமாம்-ரோஹித எம்.பி



(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் ஆடு, மாடுகள் சேர்ந்து அலரிமாளிகையை சுற்றி வளைக்கும் நிலைமை உருவாகும் எனவும், இதன்போது அவற்றின் மீதும் தண்ணீர்ப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் எனவும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. தெரிவித்தார்.

குரோட்டன் இலைகளும் மனித உணவுக்கு உகந்தது என நல்லாட்சி அரசாங்கத்தின் சுகாதாரத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ள கருத்துக் குறித்து அவரிடம் வினவப்பட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் போகின்ற போக்கில் காட்டிலுள்ள ஏனைய இலைகளையும் சாப்பிடுமாறு கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## ரத்ன தேரரின் இயங்கு சக்தி அவரிடமில்லை-மகிந்த கருத்து

(கொழும்பு)

அத்துரலிய ரத்ன தேரரின் இயங்கு சக்தி வேறு ஒருவரிடம் உள்ளது. தேரர் வெறும் செயற்பாட்டை வெளிப்படுத்துபவர் மட்டும்தான். அவரது சுயாதீனம் என்பது அர்த்தமில்லாத ஒன்று என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்ற



அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். ரத்ன தேரரின் சுயாதீன நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.


நான் என்றால் ரத்ன தேரர் சுயாதீனம் என்று கருதமாட்டேன். சுயாதீனமான செயற்பாட்டை முன்னெடுக்கும் ஒருவரல்ல தேரர் எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-3)

# வல்லரசின் தலைவரானார் ட்ரம்ப்

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக, டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார். வோஷிங்டனில் நேற்றுமுன்தினம் நடந்த இந்த விழாவில், அமெரிக்க தலைமை நீதிபதி ஜோன் ஜி.றொபேர்ட்ஸ், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் பதவியேற்பின் போது பயன்படுத்தப்பட்ட மற்றும் ட்ரம்பின் தாயார் 1955ஆம் ஆண்டு வழங்கிய இரண்டு பைபிள்களின் மீது கைவை




த்து ட்ரம்ப் உறுதியேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில், முன்னாள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பங்கேற்று, பொறுப்பை ட்ரம்பிடம் கையளித்தார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் பில்கிளின்டன், ஜோர்ஜ் புஷ் உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். இந்த நிகழ்வில் அமெரிக்காவின் புதிய துணை ஜனாதிபதியாக மைக பென்சும் பதவியேற்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாகப பதவியேற்ற பின்னர் உரையாற்றிய டொனால்ட் ட்ரம்ப், இஸ்லாமிய தீவிரவாதத்தை உலகில் இருந்து அடியோடு அகற்றப் போவதாகவும், அமெரிக்காவின் எல்லைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்காவில அமெரிக்கர்களுக்கே வேலை வாய்ப்பு என்ற கொள்கையை உறுதியாக கடைப்பிடிக்கப் போவதாகவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். (இ-3)

# என்றென்றும் நினைவில் நிற்பீர்கள் பராக் ஒபாமா



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக் காலம் முடிவுக்கு வந்தது. அமெரிக்க மக்களிடம் அவர் விடைபெறும் போது உரையாற்றியது அமெரிக்காவைத் தாண்டியும் நெகிழ்ச்சியான ஒரு தருணமாக உருவெடுத்தது செயற்கையானது அல்ல. அமெரிக்காவைத் தாண்டியும் நேசிக்கப்பட்ட ஜனாதிபதி அவர். சவால்களுக்காக அல்லாமல், நம்பிக்கையூட்டும் வார்த்தைகளுக்காக உலகின் கவனத்தை ஈர்த்த ஜனாதிபதி அவர்.

தன்னுடைய உரையில், தனது அரசாங்கத்தின் முக்கியமான சாதனைகளைப் பட்டியலிட்டார். அதிகரித்து வரும் பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பற்றி எச்சரித்தார். இனரீதியான பிரிவினைகளைப் பற்றி நிதானமாக மக்களிடம் பேசினார். நட ந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அவரது ஜனநாயகக் கட்சி பின்னடைவைச் சந்தித்தது. அவர் பதவியிலிருந்து இறங்குகிற இந்தச் சூழலில் குலைந்து கிடக்கிறது கட்சி. அரசியலில் தாக்கம் செலுத்துகிற பணத்தின் திருவிளையாடல்களைக் குறைப்பதன் மூலம் ஜனநாயக அமைப்புகளை மறுகட்டுமானம் செய்ய வேண்டும் என்று அவர் தனது கடைசி உரையில் கேட்டுக்கொண்டார். பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் அமெரிக்க நாடாளும ன்றம் திணறுவதைச் சமூகத்தின் அடித்தளத்தில் செயற் பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் சரிசெய்ய வேண்டும் என்றார். தனது கொள்கை களுக்கு முரணாக, அமெ ரிக்காவின் தேர்வாளர் சபை யில் இனரீதியான பிளவுகள் அதிகரித்துவிட்டன என்பதை அவர் அறிவார். அவர் மனதுக்கு மிக நெருக்கமான, துப்பாக்கிகள் பயன்பாட்டுக்கான கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளை அவரால், பெரிய அளவில் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. அதேசமயம், அவரைச் சங்கடத்தில் ஆழ்த்தினாலும், பொதுமக்களை அதிகமாகக் கொல்லக்கூடிய ஆள் இல்லாத விமானங்கள் போன்றட் ரோன் போர்க் கருவிகளைப் பயன்படுத்த அனுமதி அளிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. அமைப் புக்குள் தன்னாலான அளவில அவர் போராடினார் என்று சொல்லலாம். உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளில் மனதில் நிற்கக்கூடிய ஒரு தாக்கத்தை அவர் உருவாக்கினார்.

அமெரிக்காவைக் கடுமையான பொருளாதார மந்தம் தந்த அழுத்தத்தின் மத்தியில் அவர் வழிநடத்தினார். முதல் நான்கு ஆண் டுகளில் நாட்டைப் பழைய நிலைக்குக் கொண்டுவர பணியாற்றினார். அமெரிக்க நிறுவனங்களைப் பாதுகாப் பதற்கான நிறையச் சட்டங் களை அவர் உருவாக்கினார். அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியதுபோல, வேலையில்லாத் திண்டாட்டம் இன்றைய அமெரிக் காவில் பத்தாண்டு காலத்துக்கு முந்திய நிலைக்குக் குறைந்துள்ளது. மீண்டும் வளர்கிறது அமெரிக்கப் பொருளாதாரம்! வெளியுறவுக் கொள்கையில் ஈரான் அணு ஒப்பந்தம் தொடர்பில் அவர் பெருமைப்பட்டுக் கொளவதில் நியாயம் உண்டு. அவர் கியூபாவைக் கெடுபிடி காலக் கட்டத்திலிருந்து வெளியே கொண்டுவந்தார். அமெரிக்க மண்ணில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரத்தில் ஒசாமா பின்லேடன் மரணம் மூலம் அவர் நிறைவுரை எழுதினார். பகைமை நாடுகளான ரஷ்யா, சீனாவை எதிர்கொள்வதில் அவர் குறை வான திறன்கொண்டிருந்தார். அவரது மென்மையான அணுகுமுறையால் அந்த நாடுகள் பல விவகாரங்களில் அமெரிக்காவுக்குச் சவால் விடுத்து விட் டுத் தப்பித்தன.

ஒபாவின் சாதனைகள், தோல்விகளுக்கான பெறுமதியை அவர் பெறாவிட்டாலும் ஒரு மனிதன் என்ற முறையில் அவரை மக்கள் எப்போதும் நினைவுகூர்வார்கள். ஆழமான சிந்த னையோடு செயற்பட்ட தலைமை அதிகாரியாக, அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி நினைவுகூரப்படுவார். சமூக ஊடகங்களோடும் மக்களின் பண்பாட்டோடும் நல்ல உறவுகளைப் பேணிய 21 ஆம் நூற்றாண்டு மனிதராக அவர் இருந்தார். துப்பாக்கிக் கலாசாரத்தாலும், இன வெறுப்பாலும் பாதிக்கப்பட்டவர்களின் வலியை உணர்ந்தவராக அவர் இருந்தார். மக்களின் நினைவில் எப்போதும் அவர் இருப்பார்!

# ஒபாமா அறிமுகப்படுத்திய திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி ட்ரம்ப் முதல் கையெழுத்து



அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் டொனால்ட் ட்ரம்ப், முன்னாள் ஜனாதிபதி ஒபாமா அறிமுகப்படுத்தியிருக்கும் 'ஒபாமாகெயார்' மருத்துவத் திட்டத்தை மாற்றியமைக்கும் உத்தரவில் தனது முதல கையெழுத்தை இட்டார். இதன்படி, ஒபாமா கெயார் திட்டத்தின் விதிமுறைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதியாக நேற்று முன்தினம் மாலை பதவியேற்ற ஒருசில மணித்தியாலங்களில் அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகமான 'ஓவல்' அலுவலகத்துக்கு வருகை தந்த ட்ரம்ப், ஒபாமா கெயாரில் காணப்படும் சிக்கலான விதிமுறைகளை மாற்றியமைக்கவேண்டும் என்ற உத்தரவில் கையெழுத்திட்டார்.

ஒபாமாகெயாரில் காணப்படும் விதிமுறைகளை இரத்துச் செய்யும் அதேவேளையில், அதற்கு மாற்றாக என்னென்ன விதிமுறைகளை அமுல்படுத்தலாம் என்பதை அமெரிக்க காங்கிரஸ் ஆலோசனை செய்து வருகிறது.

மேலும், இந்த உத்தரவு குறித்த அறிவித்தல் ஒன்று ஒபாமாகெயாருடன் தொடர்புடைய முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் ஒபாமாகெயாரின விதிமுறைகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

ஆசிரியர்:- தஹிந்து

# ஜல்லிக்கட்டு நம் இனத்தின் அடையாளம் வவுனியா இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

(மல்லாவி)

இந்தியாவில் உள்ள தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரி நடைபெற்று வரும் அஹிம்சை ரீதியான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா மாவட்ட பொது இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கண்டன ஆர்ப்பாட்டம் வவுனியா நகரப பகுதியில் உள்ள இலங்கை போக்குவரத்து சபையின் மத்திய பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரி பல்வேறு வகையான கோசங்களை எழுப்பியவாறும், பதாகைகளை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

“தடை அதை உடை, ஜல்லிக்கட்டு நம் இனத்தின் அடையாளம், காப்போம் காப்போம் மாட்டைப் பாதுகாப்போம், தமிழகத்திற்காக ஈழம்,ஈழத்திற்காக தமிழகம்” என்ற வாசகங்களுடன்கோசங்களை எழுப்பியவாறு பெருமளவான ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை தமிழகத்திற கும், ஜல்லிக்கட்டை நடத்தக் கோரியும் ஜல்லிக்கட்டு தடைக்கு எதிராக எதிர்ப்பையும் தெரிவித்தனர். (5-15)

# எம் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றுங்கள் மாதிரிக் கிராம மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கேப்பாபுலவு குடியிருப்பு கிராமத்தில் 64 குடும்பங்களுக்குச் சொந்த மான காணிகள் காணப்படு வதாகவும் அவற்றில் தங்களை மீள்குடியேற அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக கடந்த 2008 ஆம் ஆண்டு சொந்த நிலங்களிலிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி மாதிரிக் கிராமத்தில் மீள் குடியேற்றப்பட்டனர்.

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து 2012ஆம் ஆண்டு சொந்த நிலத்தில் மீள்குடியேற்றுவதாக தெரிவித்து அழைத்து வந்து, மாதிரிக் கிராமம் ஒன்றில் தங்களை மீள்குடியேற்றியதாகவும், எனினும் தாம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது தமது காணிகளில் விமானப்படையினர் நிலைகொண்டிருந்ததாகவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

எனினும் விமானப்படையினர் குறித்த பகுதியிலிருந்து விலகி சென்றிருந்த நிலையில் மக்கள் விமானப் படையினரிடம் சென்று காணிகளை விடுவிக்குமாறு கோரிய நிலையில் வனவளப் பாதுகாப்பு பிரிவிடம் கடிதம் ஒன்றை பெற்று வருமாறு கோரியதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வனவளப் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய நிலையில், காணிகளின் அளவீடு தொடர்பில் தமக்கு தெரியாதுள்ளதாகவும் அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்தால் தாம் காணிகளை விடுவிப்பதாக வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக மக்கள் தெரிவித்தனர்.

மாதிரிக் கிராமத்தில் வாழ்வதால் சுயதேவை பொருளாதாரத்தைக்கூட செய்யமுடியாத நிலையிலுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை காணிகளை இழந்து பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சொந்த இடத்தில் மீள்குடியேற்றுமாறும் அந்த மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை நாளை மறுதினம் 24 ஆம் திகதி, நிலஅளவையாளர்கள் மற்றும் வனவளப்பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் புலக்குடியிருப்பிற்கு சென்று நில அளவீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சிவபாலன் குணபாலன் தெரி வித்தார். (5-281)




# கனகராயன்குளம் மகா வித்தியாலயத்திற்கான புதிய தொழில்நுட்ப பீட கட்டடம் திறந்து வைப்பு

(மல்லாவி)

அறிவினை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வியை புனரமைத்தல் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஊடாக உலக வங்கி மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்க நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்திற்கான புதிய தொழில்நுட்பபீட கட்டடம் உள்ளூராட்சிகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைககலநாதன் ஆகிய இருவரும் இணைநது திறந்து வைத்து ஆய்வு கூடத்தை மாணவர்களிடம் கையளித்துள்ளனர்.



இந் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ரேவதி கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வானது மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் வரவழைக்கப்பட்டு தொழில் நுட்ப பீடத்தின் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

அத்துடன், பாடசாலை மாணவர்களில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்தவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான உதவித்திட்டமும் அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் வழங்கி வைக்கப்பட்டது.

அமைச்சரின் வருகையினை நினைவுபடுத்தி பாடசாலை வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.கே.மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், உள்ளூராட்சிகள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் மேலதிக செயலாளர்கள் எஸ்.டி.ஏ.பி.பொரலெஸ்ஸ, எம்.எம்.நஜீமுதீனும் பணிப்பாளர்கள் என்.டி. என்.புஸ்பகுமார, ஏ.பி.இளஞ்கிங்க, டி.பி.சமரக்கோனும் உதவிப் பணிப்பாளர்களான ஜி.ரஞ்சித், பிரசாத், டிமுத்ரணசிங்க மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (5-15)

# பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்

வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் கடந்த ஆண்டின் திட்டங்கள் தொடர்பான மீளாய்வும் 2017 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் தொடர்பாகவும் விசேட கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 18 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.



குறித்த கலந்துரையாடலை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனஸ்வரன் தலைமையேற்று நடத்தினார்.

இவ்விசேட ஒன்றுகூடலில் கடந்த ஆண்டு நிறைவுற்ற திட்டங்கள் தொடர்பான மீளாய்வினையும் புதிய ஆண்டிற்கான திட்டங்கள் தொடர்பான சாதக பாதகங்களை குறித்து அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்கள தலைவர்களும் அதிகாரிகளும் அமைச்சருக்கு எடுத்துரைத்துள்ளனர்.

அந்த வகையில் கடந்த அரசின் காலத்தில் வழங்கப்பட்ட திட்டங்களில் சில மக்களால் சரியான முறையில் பயன்படுத்தாமல் இருப்பதை இனங்கண்டு அவற்றை மீண்டும் பயனுள்ளதாக மாற்றுவது தொடர்பாகவும், அதே வேளை அமைச்சரால் கடந்த பாதீட்டில் மாகாணசபையின் முதலமைச்சர் மற்றும் எதிர்க கட்சி தலைவர்,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கலாக 38 உறுப்பினர்களுக்கும் தனது வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஒதுக்கீட்டில் இருந்து ஒவ்வொருவருக்கும் தலா 5 மில்லியன் நிதி வழங்கி அவர்களால் தெரிவுசெய்யப்படும் வீதிகளை புனரமைப்பதாக கூறியதற்கு அமைவாக அவர்களுடனான விசேட கலந்துரையாடல் நாளை 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்றும் அதில் அவர்களது வீதிக்கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (5-281)

# தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் NVQ மட்டத்திலான முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது. பின்வரும்கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக் கற்கை நெறிகளாவன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர்,வீட்டு மின்னிணைப்பாளர், தையல், வெதுப்புநர், அழகுக்கலையும் சிகைஅலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர்,நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் வாகனம் திருத்துநர் ஆகும்.

இக்கற்கைநெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

இக்கற்கைநெறிகள்அனைத்தும் தேசியதொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளைகற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி,மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழிற்பயிற்சி நிலையம், மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு அல்லது ஒட்டுசுட்டான் தொழிற்பயிற்சி நிலையம், 14 ஆம் கட்டை, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரியில் பதிவு செய்ய முடியும். 2017.01.16 ஆம் திகதி பயிற்சிநெறிகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் 2017.01.25 ஆம் திகதி வரை வெதுப்புநர், அலுமினியம் பொருத்துநர், மின்னியலாளர் போன்ற பயிற்சிநெறிகளுக்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் பயிற்சி நெறிகள் யாவும் இலவசம்.

தொடர்புகளுக்கு முல்லைத்தீவு-071 031 8989, ஒட்டுசுட்டான்-071031 8991, பாலிநகர்-071 031 8990 என நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (இ)




வவுனியா மருதோடை அ.த.க. பாடசாலையில் தரம் 5 இல் கல்விகற்கும் வறிய மாணவர்களுக்கு வெளிச்சம் அறக்கட்டளையால் ஒருதொகை கற்றல் உபகரணங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று வழங்கப்பட்டன. வறுமைக்குட்பட்டு கல்வியைத் தொடர முடியாமலுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமான கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதில் வெளிச்சம் அறக்கட்டளை தொடர்ச்சியாக முன்னின்று செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சாகசச் செயல்களின் நறுமணம் தான் புகழ்
~ சோக்கிரட்டிஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜல்லிக்கட்டில் ஒன்றுபட்டதால் தமிழர் மரபு காப்பாற்றப்பட்டது

ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்ததன் காரணமாக தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் எங்கும் சூடேற்றின.

தமிழர்களின் மரபு வழிப்பண்பாட்டு நிகழ்வான காளை அடக்குதல் என்ற ஜல்லிக்கட்டை தடுத்ததால் இளங்காளைகள் சிங்கங்களாகப் பாய்ந்தன.

அட! கட்டுக்கடங்காத காளைகளையே பாய்ந்து அடக்கும் எங்களை அடக்க முடியுமா? என்பது போல நம் தமிழகத்து இளைஞர்கள் பேரணியாகத் திரண்டு எழ, அதன் உணர்ச்சிப் பிரவாகமாக எங்கள் மண்ணிலும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான கோசங்கள் எழுந்தன.

ஜல்லிக்கட்டில் அப்படி என்னதான் உண்டு என்று யாரேனும் கேட்கலாம்.

தமிழ் இனத்தின் வீரத்தை பறைசாற்றுகின்ற நிகழ்வுதான் ஜல்லிக்கட்டு. எனவே அந்த ஜல்லிக்கட்டை தடை செய்ய அனுமதியோம் என்று வீறுகொண்ட இளைஞர்கள் போர்க்கொடி தூக்க, தமிழகம் முழுவதும் ஒன்று சேர்ந்து ஒரணியாகி, பேரணியாகி எழுக தமிழ் என்று ஆர்ப்பரிக்கலாயிற்று.

இதன் முடிவாக ஜல்லிக்கட்டை நடத்தலாம் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு தடைவிதிக்கப்பட்டது ஜல்லிக்கட்டுக்காயினும். அதற்காக எழுந்த இளைஞர்களின் ஆவேசமும் இளைஞர்களின் பின்னால் தமிழகம் முழுவதும் திரண்டதும் கவனிக்கத்தக்க விடயமாகும்.

கூடவே தமிழகத்து இளைஞர்களின் ஒற்றுமை என்ற மாபெரும் சக்தி தமிழகம் என்ற எல்லை கடந்து உலக நாடுகளிலும் வியாபகம் பெற்றது.

ஆக, தமிழினம் ஒற்றுமைப்பட்டதன் விளைவாக தமிழர்களின் மரபுரீதியான – தமிழர்களின் வீரம் பொருந்திய நிகழ்வை மீண்டும் அமுல்படுத்த வேண்டிய தேவை பாரதத்திற்கு ஏற்பட்டது.

இதற்காக சில விசேட சட்டங்களும் கொண்டு வரப்படலாயிற்று. ஜல்லிக்கட்டுக்காக இத்தனை ஆர்ப்பாட்டங்கள் தேவைதானா என்ற கேள்வியும் ஜல்லிக்கட்டு நிகழ்வில் ஜீவகாருண்யம் கசங்கிப்போகிறது. அல்லவா? என்ற கருத்தும் இருக்கலாம். இது குறித்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த வாதப் பிரதிவாதங்கள் பேச்சளவில் இருந்துவிட்டுப் போகலாமே அன்றி செம்மொழியாம் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழினத்தின் பண்டைய நிகழ்வாகவும் தமிழர்களின் வீரத்தை – இளைஞர்களின் துணிச்சலை செப்புகின்ற பாரம்பரிய நிகழ்வாகவும் இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டை தடைசெய்வது என்பதும் அது கண்டு பேசாமல் இருப்பதும் தமிழ் இனத்திற்கு அவ கௌரவத்தை கொடுக்கக்கூடியது.

ஆகையால் தமிழகத்து இளைஞர்களும் அவர்களோடு இணைந்து தமிழகத்து மக்களும் நடத்திய ஆர்ப்பாட்டம் வெற்றி தந்தது. தமிழினத்தின் மரபுவழிப்பண்பாடு பாதுகாக்கப்பட்டது.

இந்த திருப்தியோடு தமிழ்மக்கள் ஒற்றுமைப்பட்டால் எதையும் சாதிக்கமுடியும் என்ற செய்தி சொல்லப்படுகின்றது. கூடவே ஜல்லிக்கட்டு மீதான தடை தமிழினத்தை உசார்ப்படுத்தியுள்ளது. ஒற்றுமைப்படுத்தியுள்ளது. தமிழர் வீரத்தின் பக்கம் உலக நாடுகளை ஈர்த்துள்ளது என்ற உண்மைகளை நாம் அடிக்கடி நினைக்க வேண்டும். இந்த நினைப்பு எங்களுக்கு மிகவும் பலமானதாக இருக்கும்.

# திருட்டில் ஈடுபட்டவர் மறியலில்

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டியொன்றை திருடிய சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

68 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியொன்றினை திருடியதாக தெரிவித்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பருத்தித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.(இ-60)

# யோகாவாழ்வு சொற்பொழிவு

யோகி-ராமையாவின் சீடரும் உலகின் பல நாடுகளிலும் யோகாசனக் கலையைப் பரப்பி பாபாஜி சங்கம் அமைத்து வரும் யோகி ராம்சுந்தரின் யோகா வாழ்வு சொற்பொழிவு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புலோலி மருதங்கேணி வீதியிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

புலோலி சுந்தா தோட்டம் சன சமூக நிலையச் செயலாளரும் ஊடகவியலாளருமான இ.கிருபாகரசூரியன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பருத்தித்துறை மாவட்டதில் நீதவான் பா.சுப்பிரமணியம், பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஐ.பரமேஸ்வரன், வைத்தியர் எஸ்.சிவகுமார், ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் எம்.தர்மராஜா, புலோலி வடகிழக்கு கிராம சேவை அலுவலர் திருமதி. விஜிதா, வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில இராமலிங்கம் வீதி, GPS வீதி, பாற்பண்ணை, கிளக்கடை, திருநெல்வேலி சந்தை, முடமாவடி, பூங்கனிச் சோலை, கலாசாலை வீதி, ஆடிய பாதம வீதி, அரசடி அம்மன் வீதி, Dr. சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# உழவர் பெருவிழா இன்று

வடமாகாண விவசாய அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்ச்சியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தமிழகத்தைச் சேர்ந்த, 'பூமியை மீளுயிர்ப்பூட்டும் முன்னோடிகளின் நிறுவகம்' என்ற அமைப்பின் பணிப்பாளர் திருமதி ரேவதி மாரிமுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வடக்கு விவசாய அமைச்சு ஆண்டுதோறும் பயிர்வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பில் பல்வேறு பிரிவுகளில் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்ற சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நோக்கில் உழவர் பெருவிழாவைக் கொண்டாடி வருகிறது. கடந்த 2016 ஆம் ஆண்டில் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர், வயல் நிலங்களில் சிறந்த பயிர் மாற்றீட்டுச் செய்கையாளர், சிறந்த சேதன உள்ளீடு உற்பத்தியாளர், சிறந்த காளான் செய்கையாளர், சிறந்த பழச்செய்கையாளர்.சிறந்த பயிர் மாற்றீட்டுத் திட்டச் செய்கையாளர், தூவல்நீர்ப்பாசனத்தின்கீழ் சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர், நுண்நீர்ப்பாசனத்தின்கீழ் சிறந்த பப்பாசிச் செய்கையாளர், மரக்கறிச் செய்கையாளர், சிறந்த விவசாய நடைமுறைகளைச் செயற்படுத்தும் விவசாயி, நெற்செய்கையில் சீரானகளை முகாமைத்துவத்தினூடாகச் சிறந்த விளைச்சலைப் பெறுபவர், சிறந்த மறுவயற் செய்கையாளர், புதிய பயிராக்கவியல் தொழில்நுட்பங்களுடனான வர்த்தகரீதியான சிறந்த வாழைச் செய்கையாளர்,சிறந்த பாற்பசுப்பண்ணையாளர், சிறந்த ஆட்டுப்பண்ணையாளர், சிறந்த கோழிப்பண்ணையாளர் ஆகிய பிரிவுகளில் மாவட்டரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 120 சாதனையாளர்கள் இந்நிகழ்ச்சியின்போது கேடயங்களும், சான்றிதழ்களும் பணப்பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

உழவர்களைக் கௌரவிக்கும்இப்பெருவிழாவில் பொன் சக்தி கலாகேந்திரா நிறுவனத்தினரின் 'மீண்டும் தொடங் கும் மிடுக்கு' கிராமிய நடன நிகழ்ச்சியும், தொன்மம் கலைக்குழுவினரின் பறை இசை முழக்கம் நிகழ்ச்சியும் நடைபெறும். அத்தோடு நிகழ்ச்சி நடைபெறவுள்ள மைதானத்தில் பிற்பகல் 1 மணி முதல் 'வரட்சியை எதிர் கொள்ளவல்ல விவசாய முறைமைகள்' என்ற கருப்பொருளில் விவசாயக் கண்காட்சியும் இடம்பெறும். (இ)

# இயேசுவைப் பின்பற்றுவோர்க்கு வழிகாட்டும் நாம் எமக்குள் பேதங்களை முதலில் களைவோம்

இயேசு தன் பணிவாழ்வைத் தொடங்கிய செய்தியை இன்றைய பைபிள் பகுதி தருகின்றது. இயேசு கலிலேயாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் நாசரேத்தை விட்டு அகன்று செபுலோன், நப்தலி ஆகிய இடங்களின் எல்லையில் கடலோரமாய் அமைந்திருந்த கப்பர்நாகுமுக்குச் சென்று குடியிருந்தார் எனத் தொடங்கும் பகுதி அதுவாகும்.

இயேசு கலிலேயாவை தன்னுடையப் பணிக்காக தேர்ந்தெடுத்தார் என்றால் அது ஏதோ எதேச்சையாக நிகழ்ந்ததல்ல. மாறாக, சரியான திட்டமிடல். தன்னுடைய பணிவாழ்வை எங்கே தொடங்குவது? எப்படி செயற்படுத்துவது? யாரை அழைப்பது? என்ற சரியான திட்டமிடலை இயேசு கையாண்டார். அதுதான் அவரின் வெற்றிக்கு காரணம். இயேசு கலிலேயக் கடலோரமாய்

## பரமபிதா காட்டிய பாதை

நடக்கும்போது, பேதுரு எனபடும் சீமோன், மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரரான யோவானும் ஆகியோரைக் கண்டு அவர்களை தம்மை பின்பற்றுமாறு அழைத்த போது அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை பின் தொடர்ந்தனர். இயேசு அவர்களை கண்ட முதல் சந்தர்ப்பம் இதுதான் அல்லது அவர்கள இயேசுவைக் கண்ட முதல் சந்தர்ப்பம் இதுதான் என்று நாம் எண்ண முடியாது. இயேசு இவர்களை முதலில் சந்தித்த சந்தர்ப்பங்கள் உண்டு என பைபிள் தெளிவாக்குகிறது. இதறகு முன்பும் அவர்கள் இயேசுவுடன் உரையாடியிருக்கிறார்கள். அவருக்கு கூர்ந்து கவனத்திருக்கிறார்கள். ஆனால் இந்த இப்போதைய சந்தர்ப்பம தான் ஒரு சவால் நிறை ந்த சந்தர்ப்பம் ஆகும். ஏனெனில் மனிதரை பிடிக்க அழைக்கும் சந்தர்ப்பம்.

தன்னை பின் தொடருமாறு இயேசு வரவழைத்த போது அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரை பின் தொடர்கின்றனர். அவர்கள் யார் என்றால் பெரிய கல்விமான்கள் அல்ல, அல்லது செல்வாக்கு நிறைந்தவர்கள் அல்ல. பணம் படைத்தவர்கள் அல்ல. பெரிய சமூகப் பின்னணி உடையவர்கள் அல்ல.

மாறாக அவர்கள் சாதாரணமான மீன்பிடித் தொழிலை செயது வருபவர்கள். ஏன் இயேசு இந்த கடற்றொழில் செய்பவர்களை தமது பணிக்கு அழைத்திருக்க வேண்டும் என்று நோக்குவோமா?

முதலாவதாக அவர்கள் பொறுமையைக் கட்டாயம் கடைப பிடிப்பவர்களாக இருக்கிறாரகள் மீனவர்கடலில்வலையை அல்லது தூண்டிலை வீசி விட்டு மீன் வரும் வரை பொறுமையோடு காத்திருக்கிறார்கள். அதேபோல் மக்களுக்கு இறைவார்த்தையை போதிக்கும் பணி செய்பவர்களும் கட்டாயம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்போது தான் பலனை பெற்றுக் கொள்ளமுடியும்.

இரண்டாவதாக விடாமுயற்சியை ஊக்கத்துடன் பேணுபவர்களாக இருக்கிறார்கள். தொடர்ந்தும் விடாமுயற்சியுடன் முன்னேற வேண்டும் எனறு செயற்படுபவர்கள். அதேபோல் போதிக்கும் பணிசெய்பவர் அறுவடை ஒன்றும் இல்லையே என்று மனதை தளர விடாது தொடர்ந்தும் விடா முயற்சியுடன் செயற்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்த மூன்றாவதாக அவர்கள் எப்போதும் துணிவுடன் இருப்பவர்கள். கடலின் கொந்தழிப்பையும் ஆபத்தையும் எதிர்த்துப் போராடுபவர்கள். அதில் வெற்றி பெறுபவர்கள். போதிக்கும் பணியாளன் மனிதர்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும்போது ஆபத்தை எதிர்கொள்ளவேண்டி ஏறபடும். அதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

நான்காவது அவர்கள் சரியான நேரம் வரும்வரை குறிவைத்துக் காத்திருப்பவர்கள். அவர்கள் எப்போது, எங்கே வலை வீசவேண்டும் என்று அறிந்திருக்கிறார்கள். சரி யான நேரம் வரும்போது வலைவீசி பயன்பெறுகின்றார்கள். இல்லையேல் எல்லா சக்தியும் வீண் விரயமாகும் என்பதை தெரிந்திருக்கின்றார்கள்.


போதிப்பவனும் இந்த நேரத்தை கண்டுபிடிப்பதில் குறியாக இருக்கவேண்டும். மனிதர்கள் உண்மையை வரவேற்கும் சந்தர்ப்பமும் உண்டு. அதில் சினங் கொள்ளும் சந்தர்ப்பமும் உண்டு. இதைச் சரியாக கணிக்க வேண்டும். எப்போது உண்மை அவர்களை நகரச்செய்யும். எப்போது உண்மை அவர்களுக்கு கசக்கும் என்பதை சரியாக அறிந்து அதன்படி செயற்படவேண்டும். பணிசெய்பவன் எப்போது கதைக்கவேண்டும், எப்போது மௌனமாக இருக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்வேண்டும்.

ஐந்தாவது அவர்கள் எந்த எந்த மீனை தூண்டலில், வலையில் பிடிப்பதற்கு எந்த எந்த வகையான வலை, தூண்டில், இரையைப் போடவேண்டும் என்பதை நன்கு அறிந்து செயற்படுபவர்கள்.

எனவே விவேகமுள்ள ஒரு பணியாளன் ஒரேவகையான அணுகுமுறை எல்லோருக்கும் பொருந்தாது என்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

தன்னுடைய வரையறை எவ்வளவு, எந்த எல்லை வரைக்கும் தாம் போக முடியும், எந்த வரையறையை தவிர்க்க வேண் டும் என்பதை நன்கு தெரிந்து செயற்பட வேண்டும்.

"ஆறாவது தம்மை வெளிக்காட்டாத சந்தர்ப்பங்களை நன்கறிந்து வைத்துக் கொள்பவர்கள. இரையைமட்டும்வெளிக்காட்டி மீனை நன்றாக பிடிக்கத் தெரிந்தவர்கள். தன்னை அல்லது தன்னுடைய நிழலை காட்டினால் மீன்கள் விட்டு விட்டு ஓடிவிடும். அதேபோல பணிசெய்பவன் மனிதர்களுக்கு இறைவார்த்தையை காட்டி இயேசுவை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களை தேடவேண்டும்.





இங்கு "பின்பற்றுவதும்" "பின் தொடர்வதும்" தனக்காக வாழாமல், தான் பின்பற்றும் அல்லது தொடரும் இயேசுவுக்காக வாழ்வது என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. இவ்வாறு இயேசுவுக்காக, அதாவது பிறருக்காக வாழும் வாழ்க்கை ஒரு "தனி மனித வாழ்க்கை" அல்ல மாறாக "குழுவாழ்வு" என்னும் கருத்தை தன்னுள் அடக்கியுள்ளது. ஆகவே இன்று இயேசுவைப் பின்பற்றுவோரும், பின் தொடர்வோரும்,

பின்பற்றுவோருக்கு வழிகாட்டுவோரும் தமக்குள் சாதியில் நல்லவர்கள்-கெட்டவர்கள், கல்வியில் பெரியவர்கள்-சிறியவர்கள், வாழ்வில் தாழ்த்தப்பட்டவர்கள்-உயர்ந்தவர்கள் என்ற வேறுபாடுகளை பாராட்டாது இயேசு காட்டிய பாதையில் பயணம் தொடர்வோமா?

**ம.பிரான்சிஸ்க்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# நெடுந்தீவு பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி முடிவுகள்










நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டக் கழகங்களுக்கிடையிலான 2017 ஆம் ஆண்டு வருடாந்த விளையாட்டு விழாவில் முதற்கட்டமாக நடைபெற்ற ஆண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக்கழக வீரர் இ.லிஜிகரன் 36:54.4 செக்கனில் ஓடி முடித்து முதலாம் இடத்தையும் ப.டர்சன் மூன்றாம் இடத்தையும் பெற்றதுடன் இரண்டாம் இடத்தை பற்றிமா விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த அமலகனிஸ்ரன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து ஆண்கள், பெண்களுக்கான துடுப்பாட்டம், கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் சென்.ஜோண்ஸ் விளையாட்டுக்கழகம் சென்.பற்றிமா விளையாட்டுக்கழகத்தை 17:25 25:18 25:17 செற் அடிப்படையில் வெற்றிகொண்டது.

பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் சென்.ஜோண்ஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் வளர்மதி விளையாட்டுக்கழகம் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை 25:17, 29:27 செற் அடிப்படையில் வெற்றிகொண்டது.

ஆண்களுக்கான துடுப்பாட்ட போட்டியில் அன்ரனி தலைமையிலான சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் வசந்தகுமார் தலைமையிலான உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் முதன் முறையாக இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டன.

12 பந்துப்பரிமாற்றம் கொண்ட இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற உதயசூரியன் விளையாட்டுக்கழக தலைவர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை துடுப்பாட பணித்தார்.

அதன்படி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 12 பந்துப் பரிமாற்ற நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பாட்டத்தை தொடர்ந்த உதயசூரியன் விளையாட்டுக்கழகம் அணியை தனது அதிரடி துடுப்பாட்டம் மூலம் இறுதிப்போட்டிக்கு அழைத்து வந்த அணித்தலைவர் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேற உதயசூரியன் அணி 8 பந்துப்பரிமாற்றநிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இதன் மூலமாக சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 16 ஆவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது.

வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சென்.ஜோண்ஸ் விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய வளர்மதி விளையாட்டுக் கழகத்தை 6:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியை தமதாக்கிக் கொண்டது. (க)








## யூனியன் -மாலுசந்தி மைக்கல் ஆட்டம் சமநிலையில் முடிபு

கரவெட்டி மத்தோனி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் அணிக்கு 6 ஓவர் 9 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரில் (20.01.2017) அன்று இரவு 8 மணிக்கு நடைபெற்ற முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

இதில் முதலில் ஆடிய ஆனைக்கோட்டை யூனியன் அணி 6 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 39 ஓட்டங்களைப்பெற்றது.

மைக்கல் அணியின் பந்து வீச்சு சார்பில் தினோஜன் 3, பிரசாந், அச்சுதன், தர்சன் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய மாலுசந்தி மைக்கல் அணி இறுதி ஓவரில் 11 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் 10 ஓட்டங்களைப் பெற்று போட்டியை சமன் செய்தது. ரகுவரன், தர்சன், அச்சுதன், பிரசாந் ஆகியோர் தலா 6 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

இரண்டாவதுபோட்டியில்நெல்லை கிங்ஸ் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதவுள்ளது. (க)

## கரப்பந்தாட்டத்திற்கு விண்ணப்பிக்குக

மறைந்த முன்னாள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் அமரர் தம்பன் சகாதேவன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டப் போட்டிக்கு வடமராட்சிக்கு உட்பட்ட கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

தொடர்புக்கு யங்கம்பன்ஸ் செயலாளர் சுசீலன் (077 889 3330)

மேற்படி தொடர் விரைவாக ஆரம்பமாகவுள்ளதனால் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# அரசு பலவீனமடைவதால் எதிரணியினர் சிறையில்

## மகிந்த ராஜபக்ஷ கடும் விசனம்



(கொழும்பு)

அரசாங்கம் பலவீனமடையும் போது கூட்டு எதிர்க்கட்சியினரை சிறையில் அடைப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களை பார்வையிடும் நோக்கில் நான் அடிக்கடி சிறைக்குச் செல்கின்றேன்.

அரசாங்கத்துக்கு பிரச்சினை வந்தால் அவர்கள் பலவீனமடைந்தால் கூட்டு எதிர்க்கட்சியின் அரசியலவாதிகளை சிறையில் அடைப்பதனை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இந்த விடயம் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதலமைச்சர்கள் என்னை சந்திக்கவுள்ளனர்.

இந்த சந்திப்பு நன்மையாக அமையுமா? தீமையாக அமையுமா? என்பது பற்றி எனக்குத் தெரியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல்வாதிகள் கைது செய்யப்படுவது குறித்து கொழும்பு பத்திரிகை எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-3)

# இஸ்லாமிய பயங்கரவாதத்தை உலகிலிருந்து அகற்றுவேன்

## கன்னியுரையில் ட்ரம்ப் உறுதி


(வோஷிங்டன்)

இஸ்லாமிய பயங்கரவாதத்தை உலகிலிருந்து அகற்றுவேன் என அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய கன்னியுரையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின்45ஆவது ஜனாதிபதியாக குடியரசு கட்சியின சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

இதேவேளை, அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக மைக் பென்ஸ் உம் பதவியேற்றுள்ளார்.

தன்னை எதிர்நோக்கியுள்ள பணி சவால் நிறைந்தது என்று குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், அதனை உரிய



முறையில் நிறைவேற்றுவேன் எனவும் உறுதியளித்தார் .

ட்ரம்பின் பதவியேற்பு நிகழ்வுக்கு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் பில் கிளின்டன் ஆகியோர் மனைவிகள் சகிதம் கலந்து கொண்டனர். முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் மனைவி ஹிலாரி கிளிண்டனுக்கு ட்ரம்பினால் விசேட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

### ஜல்லிக்கட்டுக்கு ...

போட்டி நடத்தியே தீர வேண்டும் என்று இளைஞர்களும், மாணவர்களும் சிலிர்த்தெழுந்து நடத்திய கட்டுக்கோப்பான போராட்டத்துக்கு மத்திய - மாநில அரசுகள் பணிந்துள்ளன.

மாணவர்கள் போராட்டம் மக்கள் போராட்டமாக வெடித்ததால் மத்திய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்து அவசரச் சட்டம் கொண்டுவருவதை உறுதிசெய்தன.

ஜல்லிக்கட்டு போட்டியை இடையூறு இல்லாமல் நடத்துவதற்கு தேவையான அம்சங்களை கொண்ட சட்ட முன் வரைபை தமிழக அரசின் 5 உயர் அதிகாரிகள் மேற்கொண்டனர். முதலில் அந்த அவசர சட்ட முன் வடிவு மத்திய உள்துறை அமைச்சகத்திடம் கொடுக்கப்பட்டது. அதைப் படித்து பார்த்து ராஜ்நாத்சிங் கையொப்பமிட்டு ஒப்புதல் வழங்கினார்.

இதையடுத்து அந்த சட்ட முன் வடிவு சட்ட அமைச்சகத்துக்கும், மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த 2 அமைச்சகங்களும் தமிழக அரசின் சட்ட முன் வடிவை அப்படியே ஏற்றுக்கொண்டு அளித்தன. மத்திய அரசின் மூத்த சட்டத்தரணி அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்கியும் தமிழக அரசின் சட்ட முன் வடிவை முழுமையாக படித்துப் பார்த்து தனது பரிந்துரைகளை தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவைகளின் ஒப்புதலைத் தொடர்ந்து அந்த அவசரச் சட்ட முன் வடிவு ஜனாதிபதி ஒப்புதலுக்காக அனுப்பப்படும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இது மாநில விவகாரம் தொடர்பான அவசரச் சட்டம் என்பதால் ஜனாதிபதி ஒப்புதல் பெறத் தேவை இல்லை என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் பார்வைக்கு அந்த அவசரச் சட்டத்தின் நகலை மட்டும் அனுப்பி வைத்தால் போதும என்றும் கூறப்பட்டது. மேலும் தமிழக அரசின் அவசரச் சட்டத்துக்கு மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஒப்புதலே போதுமானது என்று தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக அரசின் ஜல்லிக்கட்டு அவசரகால சட்டத்துக்கு மத்திய உள்துறையிடம் முறைப்படி ஒப்புதல் பெறப்பட்டது.

நேற்று முன்தினமிரவே அந்த அவசரச் சட்டத்துக்கான கோப்பு தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தது. அந்த கோப்பில் ஆளுநர் வித்யாசாகர் ராவ் நேற்று மாலையில் கையொப்பமிட்டு முறைப்படி அவசர சட்டத்தை பிறப்பித்தார். இதன் மூலம் ஜல்லிக்கட்டுக்கான தடை நீங்கியுள்ளது. எனவே, இன்று தமிழகம் முழுவதும் ஜல்லிக்கட்டு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அலங்காநல்லூரில் தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஜல்லிக்கட்டு போட்டியை இன்று தொடங்கி வைக்க உள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மற்றைய பகுதிகளில் அமைச்சர்கள் தொடங்கி வைக்க உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மாணவர்கள் பலர் ஜல்லிக்கட்டு மீதான தடையை நிரந்தரமாக நீக்கும் வகையில் அனுமதிச் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து வருவதுடன் இதற்காக நாம் தொடர்ந்தும் போராடப் போவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

### முன்னாள் போராளி ...

அந்தவகையில் வடகிழக்கில் சுமார் 15 ஆயிரம் முன்னாள் போராளிகள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் உள்வாங்கி 3 வருட காலத்துக்கான பொது திட்டம் ஒன்று எமது அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனையின்படி இந்த திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதுடன் இந்த வருட இறுதிக்குள் அமைச்சரவைக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்திட்டத்தில் சாரதி, காவலாளி, சிறைக்காவலாளி, போன்ற அரசாங்க வேலைகளுக்கு முதலில் பயிற்சியாளர்களாக எடுத்து முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்பட வேண்டும் என்றும், சாதாரணதரம் வரை படித்தவர்கள் மேற்படிப்பு படித்தவர்களுக்கு சம்பளத்துடன் பயிற்சியாளர்களாக உள்ளவாங்கி ஒரு வருடத்துக்குள் திணைக்களங்களுக்குள் உள்ளெடுக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளோம்.

மேலும்கல்வியை இடைநிறுத்தியவர்களுக்கும் தொடர்சியாக கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடுகளும் செய்து தரும்படி இத்திட்டத்தில் ஆலோசனைகள் முன்வைத்து திட்டம் தயாரித்துள்ளோம்.

அததுடன் தச்சு தொழில், மேசன் அலுமினிய பொருத்தல் போன்ற தொழிலுக்கு வெளிநாட்டில் இருந்து வேலையாட்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் உள்ளூரில் இருந்து வேலையாட்கள் தெரிவு செய்யுமாறும் பிரதமர் அலுவலகத்தில் கோரப்பட்டுள்ளது.

அத்தொழிலை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு 3 மாத காலம் பயிற்சியுடன் 10 ஆயிரம் ரூபாய் சமபளமும் உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும். பயிற்சி நிறைவில் நேரடியாக நிறுவனங்களில் அறிமுகப்படுத்தி வேலையை பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தொழிலில் தகைமைக்கு ஏற்றபடி 60 ஆயிரம் வரை சம்பளம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே இத்தொழல்பயிற்சியில் ஆர்வம் உள்ள முன்னாள் போராளிகளின் விபரங்களை அரச அதிபர்களிடம் கோரியுள்ளோம்.

முன்னாள் போராளிகளுக்கு உதவுவதின் தேவையை அனைவரும் உணர்ந்துள்ளார்கள். அவரகளுக்கு முக்கியத்துவம். வழங்க வேண்டும் என மும்முரமாக உள்ளார்கள்.

எனவே மேற்குறித்த பொதுத்திட்டம் வெற்றிகரமாக, செயற்படுத்தப்படும் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

### ஜெனிவாவில் ...

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 34ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம்திகதி முதல் மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன்போது பேரவையின் ஐரோப்பிய ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பு நாடுகள் இலங்கை தொடர்பான இந்தப் பிரேரணையை கொண்டு வருமென தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு மேலும் கால அவகாசத்தையும் உதவிகளையும் பெற்றுக்கொடுத்தல் என்ற தொனிப்பொருளில் இந்த பிரேரணை முன்வைக்கப்படலாம் என நம்பப்படுகின்றது. கடந்த 2012, 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் இலங்கை தொடர்பான பிரேரணைகளை அமெரிக்கா தலைமையிலான நாடுகள் கொண்டு வந்திருந்தன. ஆனால் இம்முறை அமெரிக்கா இலங்கை தொடர்பாக பிரேரணை கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபடுமா என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அந்தவகையிலேயே மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளின் ஐரோப்பிய ஒன்றியப் பிரிவு இந்தப் பிரேரணையை கொண்டு வர முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறெனினும் ஐரோப்பிய ஒன்றியத்தால் கொண்டு வரப் படலாம் என எதிர்பார்க்கப்படும் புதிய பிரேரணை இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்க இருப்பதன் காரணமாக அதனை இலங்கை எதிர்க்காது என்றும் தெரிய வருகிறது.

இருந்தபோதிலும் இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமை பேரவையில் மற்றுமொரு பிரேரணை கொண்டுவரும் நோக்கில் இதுவரை எந்தவிதமான உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை.

கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையானது வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. விசேடமாக இலங்கை அரசாங்கமும் இந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது. அந்தப் பிரேரணையில் பொதுநலவாய சர்வதேச நீதிபதிகள் சட்டத்தரணிகள், வழக்குரைஞர்கள, விசாரணையாளர்களைக் கொண்டு விசாரணைப் பொறிமுறை முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

தற்போது பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முனனெடுப்பதற்கு ஜெனிவா மனித உரிமை பேரவையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. எவ்வாறெனினும் இம்முறை 34ஆவது கூட்டத் தொடரில் இலங்கை எவ்வாறு ஜெனிவா பிரேரணையை அமுல்படுத்தியது என்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் எழுத்துமூல அறிக்கையை முன்வைக்கவிருக்கிறார்.

அந்த அறிக்கையில் இலங்கைக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு புதிய பிரேரணையொன்று இம் முறை கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படலாம் என அந்த தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஏ350 ரக விமான சேவை ஒரு மில்.டொலர் இழப்பு

(கொழும்பு)

ஏ350 ரக விமானங்களை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவதால் மாதமொன்றுக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் இழக்க நேரிடும் என பொதுத்துறை தொழில் முயற்சிகள் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

ஏ350 ரக விமானங்களில் மூன்றின் ஒப்பந்தங்களை அரசாங்கம் இரத்துச் செய்திருப்பதால் 98 மில்.அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்படும் என பொது எதிரணி அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழுவிலும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் செய்திருக்கும் முறைப்பாட்டுக்கு பதிலளிக்கும் விதத்தில் நேற்று முன்தினம் தனது அமைச்சில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒன்றிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸில் எமிரேட்ஷ் விமான நிறுவனத்துக்கு 40 சதவீத பங்குகள் இருந்தபோது அந்த ஆண்டு நிகர இலாபம் 4.4 மில். அமெரிக்க டொலர்களாகும். எமிரேட்ஷ் வெளியேற்றப்பட்டதும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்சுக்கு 32 பில்லியன் இழப்பு ஏற்பட்டது.

2015ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு 150 பில்லியன் கடன் இருந்தது. 2016ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் நட்டம் 1600 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டது என்றும் அவர் மேலும் கூறினார்.

அதிக நட்டம் ஏற்பட்டதால் கடந்த அரசாங்கம் கொள்வனவு செய்யவிருந்த 350 ரக விமானங்களில் நான்கை நாம் இரத்து செய்தோம். இந்த விமானங்களை கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தங்களிலிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது.

எனவே பேச்சுவார்த்தைகளின பினனர் ஒரு விமானத்துக்கு 17 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஏனைய மூன்று விமானங்களுக்கு 98 மில்லியன்களும் நட்டஈடாக நாம் செலுத்தினோம்.

இவை 12 வருட குத்தகை அடிப்படையில் பெறப்பட்டன. குத்தகை கால முடிவில் அவற்றுக்கு 600 மில்லியன் டொலர்களை நாம் செலுத்த வேண்டியிருக்கும். பொது எதிரணி கூறுவதுபோல இதில் வியாபார நோக்கம் எதுவும் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

## அமெரிக்காவின்...

தலைமையிலான அரசாங்கத்துடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது டு விட்டர் பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தியில் அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விருமபுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே போர்க்குற்றங்களில் இருந்து இலங்கையை விடுவிக்குமாறு அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், டொனால்ட் ட்ரம்ப்பைச் சந்திப்பதற்கான முயற்சிகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனிடையில், அமெரிக்காவின் ஜனாதி பதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றுள்ள நிலையில், வொசிங்கடனில் குழப்பநிலை தோன்றியுள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் எதிர்ப்பாளர்கள் ஒன்று கூடி வொசிங்டனில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவதுடன், பல இடங்களில் தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக இலங்கை உள்ளிட்ட பல நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## 10 இலட்சத்து...

கம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவி வரும் வரட்சி காரணமாக 2 லட்சத்து 51 ஆயிரத்து 310 குடும்பங்களைச் சேர்ந்த 10 லட்சத்து 41 ஆயிரத்து 690 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி கிழக்கு மாகாணத்தில் வரட்சியினால் 3 லட்சத்து 24 ஆயிரத்து 329 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் 6 ஆயிரத்து 351 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 324 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 ஆயிரத்து 401 குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 2 ஆயிரத்து 5 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வடமாகாணத்தில் 80 ஆயிரத்து 576 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 87 ஆயிரத்து 507 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 427 பேரும், முல்லைத்தீவில் 38 ஆயிரத்து 606 பேரும், மன்னாரில் 76 ஆயிரத்து 728 பேரும், வவுனியாவில் 15 ஆயிரத்து 345 பேரும், கிளிநொச்சியில் 44 ஆயிரத்து 401 பேரும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டியில் 7 ஆயிரத்து 435 பேரும், கம்பாஹாவில் 27 ஆயிரத்து 168 பேரும், களுத்துறையில் ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 199 பேரும், அம்பாந்தோட்டையில் 34 ஆயிரத்து 841 பேரும், மொனராகலையில் 38 ஆயிரத்து 828 பேரும், பதுளையில் 2 ஆயிர்த்து 593 பேரும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் 12 ஆயிரத்து 908 பேரும், இரத்தினபுரியில் 3 ஆயிரத்து 705 பேரும், குருநாகலில் 76 ஆயிரத்து 346 பேரும், புத்தளத்தில் 39 ஆயிரத்து 824 பேரும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.(செ-11)

## ஊறணி பகுதியில்...

பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட காணிகள் சிறிது சிறிதாக விடுவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்றவகையில் தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் ஊறணி இறங்குதுறைக்கு அருகில் உள்ள கடற் கரைப்பகுதி மற்றும் அதனுடன் கூடிய 2 ஏக்கர் காணி படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த பகுதியில் தாம் தொழில் செய்ய முடியாது என்றும் தமது இறங்குதுறை மற்றும் அதனை அண்டிய நிலங்களை விடுவித்தால் மாத்திரமே தாம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும் என மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்த வண்ணம் உள்ளனர்.

அந்த வகையில் குறித்த பகுதிகளை விரைவில் விடுவிக்க வேண்டும் என இராணுவத்திடம் அரச அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனையடுத்து இம்மாத இறுதிக்குள் ஊறணி இறங்குதுறை மற்றும் அதனையண்டிய நிலம் விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-9)

## அவசர சட்ட...

க்கிறார்.

விலங்குகள், குழந்தைகள், முதியவர்கள் ஆகியோருக்கு கொடுமை விளைவிப்பது தார்மீக ரீதியில் அருவருப்பானது என்பதே பீட்டா இந்தியப் பிரிவின் நிலைப்பாடு என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்த நாட்டின் வளர்ச்சி மற்றும் அதன் அறநெறி முன்னேற்றம் என்பது விலங்குகளை நடத்தும் விதத்தின் மூலமே தீர்மானிக்கப்படும் என்று மகாத்மா காந்தி தெரிவித்துள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

பயந்து கிடக்கும் காளைகள்மீது ஆண்கள் பாய்வதும், சில நேரங்களில் காளைகளுக்கு சாராயம் கொடுத்து, வேண்டு மென்றே அதன் வால்களை உடைத்து, அதன் கண்களில் மிளகாய் பொடிகளை தூவி, அது தப்பியோட முயற்சிக்கும்போது காளைகளின் எலும்புகளை நொறுக்குவது, மேலும் ப்யமுறுத்தப்பட்ட காளை களால் மனிதர்கள் காயமடைவது, கொல்லப்படுவது போன்ற புகைப்படங்களை பார்க்கும் போது நம் தேசம் பற்றிய கருத்து என்னவாக இருக்கும் என்று பீட்டா கேள்விஎழுப்பியுள்ளது.

உலக அளவில் ஒரு நாள் அனைத்து ரத்தம் சிந்தும் விளையாட்டுகளும் வரலாற்று புத்தகங்களிலிருந்து இன்று இல்லாவிட்டாலும் ஒரு நாள அகற்றப்படும் என்று பீட்டா நம்புகிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது. (செ-11)

## ஜனாதிபதி பயணித்த...

யிறக்கம் செய்யப்பட்டது. கொழும்பிலிருந்து தலவாக்கலைக்கு உலங்கு வானூர்தியில் ஜனாதிபதி பயணம் செய்தபோது, நுவரெலியா மாவட்டத்தில் காலநிலை சீர்கேட்டினால் கொட்டகலையில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் வானூர்தி திடீரென தரையிறக்கம் செய்யப்பட்டது.

அங்கிருந்து ஜனாதிபதி தலவாக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெற்ற வைபவத்திற்கு பிரத்தியேக வாகனத்தில் பயணித்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கொட்டகலையில் தரையிறங்கிய ஜனாதிபதி அங்கு கொட்டகலை மக்களையும், சிறார்களையும் நேரில் சந்தித்து சிறிதுநேரம் கலந்துரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)


**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் 13 பரப்பு காணி காய்க்கும் 20 தென்னைகளுடன், A9 வீதியில் இருந்து 200M தூரத்தில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0774542175 (7579)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில் DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (த-7283)

**சிறுநீரகம் தேவை**

20 வயதுடைய இளைஞன் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்துள்ளமையால் O+, O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:- 0773911406, 0212227263, 0779797403 (த-7320)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (E-7311)

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

**வேலைவாய்ப்பு**

பார்சல் கட்டுபவர், காசாளர் (மாலை 4 மணிக்கு பின் நேரில் வரவும்)

இடியப்பக் கடை மருதனார்மடம் (7573)

**FREE HOME DELIVERY**

யாழ்.நகரம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு 20 லீற்றர் குடிநீர் குறைந்த விலையில் வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

T.P: 077 338 4838, 077 634 7258 (7534)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை) (C-7312)

அழையுங்கள் - 077 29 31 062

**வாடகைக்கு விடப்படும்**

நெல்லியடி புதிய சந்தைக்கு அருகில் இரு கடையுடன்மேல்மாடி வீடும் வாடகைக்கு விடப்டும்.

தொடர்புகளுக்கு:- 0758834673 (த-7313)

**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் சைவ உணவகம் ஒன்றிற்கு மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, கவர்ச்சியான சம்பளம், சலுகைகளுடன் கீழ் காணும் வேலைக்கு ஆட்கள் தேவை.

01. உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்ஸ்)
02. சுத்திகரிப்பாளர்
03. காசாளர்
04. பில் கிளாக்
05. மரக்கறி வெட்டுபவர்கள்
06. டீ மேக்கர்
07. குசினி வேலையாட்கள்
08. பகுதி நேர சப்பிளையர்
09. அரையல் வேலை/ இடியப்ப வேலை
10. தோசை/ ரொட்டி வேலை

இடம்பெயர்ந்தவர்கள், மலையகத்தவர்கள், வன்னி மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0777917753, 0755304521 (7572)

**CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு**

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பு உத்தரவாதம் *Condition apply

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி (த-7314)

13th Batch start on :- 25.01.2017

ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் 076-7013060 , 021-7306000

VIJAYAM Entertainment — RAJA CINEMA JAFFNA — 26 JANUARY 2017 Evening 06.30pm



SPECIAL VIP SHOW Tickets Available Here
Mobitel (Pvt) Ltd - # 1, Ruban Complex, Stanley Road,Jaffna
IDM Nation Campus - # 216, Navalar Road, Jaffna
Vijayam Entertainment - # Kattappirai Jun, Jaffna
Varani Booking Centre - # 177,Hospital Road,Jaffna
Metro Travel & Tours - # 272/1, Stanley Road, Jaffna
N-Mobile - # 11, New Market, Hospital Road, Jaffna
SPONSORED BY IDM Sri Lanka Telecom Mobitel
077 874 6463 / 075 243 1252 / 077 604 8921 / 077 440 8040 : 0717643322

**கனடாவில் உயர்கல்வி**

A/L சித்திபெய்தி விட்டீர்களா? குறைந்தளவு கட்டணத்துடன் கனடாவில் (வெளிநாட்டில்) படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற ஆசையா? இன்றே இப்பொழுதே தெளிவாக திட்டமிடுங்கள் காலத்தினை,பணத்தினை விரையமாக்காது உடனடியாக எம்மை நாடுங்கள். எம்மிடம் வருபவருக்கு பிரத்தியேகமான தனித்துவமான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி, குடியேற்ற ஆலோசகர்கள்

V4 EDUCATIONAL CONSULTANCY (த-7256)

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226236


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
நாதம் 101
சங்குநாதம்
வள்ளுவர் ஆண்டு 2048 22.01.2017 தொலைபேசி : 021 222 3378






# ஜல்லிக்கட்டுக்குத் தடை
# ஆர்ப்பரிக்கும் இளைஞர்கள்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** மட்டக்களப்பில எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவிருக்கிறது. எதிர்வரும் 10 ஆம் திகதி எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறுமென தமிழ்மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

**விதானையார்:** வாத்தியார் ஜனவரி 21ஆம் திகதி எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அதையேன் பிற்போட்டவியள்.

**வாத்தியார்:** அதையேன் கேட்கிறியள். கிழக்கில எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடத்துறதை மட்டக்களப்பில இருக்கிற இலங்கைத் தமிழரசுக் கட்சியின்ர முக்கிய உறுப்பினர்கள் ஒரு சிலர் விரும்பவில்லையாம். இந்தப் பேரணியை எப்படியும் தடுக்கவேணும் என்பதில அவையள் உறுதியாக இருக்கினம். இதால பொங்கல் விழா ஒன்றை ஏற்பாடு செய்தினம். அதே நேரம் 21ஆம் திகதி நடைபெறவிருந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை வலுக்குறைக்க அன்றைய நாளை பாடசாலை நாளாக ஆக்கிச்சினம்.

**கங்காணி:** அப்ப பெப்ரவரி 10 ஆம் திகதியும் ஏதாவது திருகுதாளம் செய்வினம் எண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** எங்கட மக்கள் வீறுகொண்டெழுந்தால் அதைத் தடுக்க யாராலும் முடியாது. என்னைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணத்தில எங்கட மக்கள் மிகவும் உறுதியாக இருக்கினம். ஆகையால் பெப்ரவரி 10 ஆம் திகதி கிழக்கில நடைபெறவிருக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் மக்கள் அணி அணியாகத் திரளுவர் என்பது உறுதி.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுறதும் உண்மைதான். வடக்கில எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெற ஏற்பாடாகியிருந்த போது அதையும் தடுக்கச் சிலர் முயற்சி செய்தவியள்தானே!.

வர்த்தக நிலையங்களைத் திறக்கவேணும் எண்டு சிலர் விடாப்பிடியாக நின்றபோதும் எங்கட வர்த்தகப் பெருமக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து தங்கள் கடைகளைப்பூட்டி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை உச்சமாக ஆக்கிவைத்தினம். அதுதான் சொல்லுறன் எங்கட மக்கள் ஆதரவு கொடுப்பதென நினைத்துவிட்டால் அதைத் தடுக்க எந்தக் கொம்பனாலும் முடியாது.

**கங்காணி:** அப்ப நாங்களும் எதிர்வரும் 10 ஆம் திகதி மட்டக்களப்பிற்கு போகவேணும். எங்கட பங்களிப்பையும் காட்டவேணும்.

**மூப்பர்:** அது சரி வாத்தியார் ஜல்லிக்கட்டு எப்படியாம் இருக்குது.

**சாத்திரியார்:** ஜல்லிக்கட்டு தமிழ் மக்களின்ர ஒரு மரபுரீதியான வீரம் பொருந்திய நிகழ்வு. அதைத் தடுக்க நினைத்தது மிகப்பெரிய அறியாமை.

**வாத்தியார்:** என்ன இருந்தாலும் தமிழ் நாட்டில ஜல்லிக்கட்டை நடத்தவேணும் எண்டு மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகினம். அங்க ஜல்லிக்கட்டு நடத்தவேணும் எண்டு எங்கட மண்ணிலும் ஆர்ப்பாட்டங்கள் நடக்குது.

**பண்டிதர்:** தமிழ்நாட்டில ஜல்லிக்கட்டு நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி எங்கட தமிழர் தாயகத்திலும் ஆதரவுப் பேரணி இடம்பெறுகிறது. இருந்தும்....

**சாத்திரியார்:** என்ன பண்டிதர் ஏதோ சொல்ல வந்திட்டு விழுங்கிறியள்.

**பண்டிதர்:** ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அண்மையில நல்லூர் முருகன் கோவிலுக்கு முன்னால ஒரு ஆர்ப்பாட்டம் நடந்த தல்லோ! அந்த ஆர்ப்பாட்டத்தில நின்றவர்கள் பாதணிகளோட நல்லூர்த்திரு மண்ணில நின்று ஆர்ப்பாட்டம் செய்தவியள். அதைப் பார்த்த போது மனதுக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

**விதானையார்:** உண்மைதான் பண்டிதர். நல்லூர் முருகன் ஆலயம் எங்கட புனிதமான இடம். அதில பாதணிகளோட நடப்பதை முற்றாகத் தடுக்க வேணும். அதோடு நல்லூருக்கு முன்னால ஆர்ப்பாட்டம் செய்யிறது பாதணிகளோட நின்று கோசம் போடுவது என எல்லாமும் ஆலயத்தின்ர புனிதத் தன்மைக்கு பங்கம்தானே. ஆகையால இனிமேல் நல்லூர் முருகன் ஆலயத்தின் முன்றலிலேயோ அல்லது அதன் சுற்றுப்புறத்திலேயோ ஆர்ப்பாட்டம், பேரணி நடைபெறுவதை முற்றாகத் தவிர்க்க வேணும்.

**கங்காணி:** இப்ப நாங்கள் செய்துகாட்ட பிறகு தென் பகுதியரும் பாதணிகளோட வந்து நல்லூருக்கு முன்னால நின்று கூட்டம் வைப்பினம். முதலில எங்கட புனித இடங்களை நாங்கள்தான் காப்பாற்றவேணும்.

இவ்வாறு கங்காணியார் கூறி முடிக்க ஏதோ எழுதிக் கொண்டிருந்த பண்டிதர் படார் என்று எழுந்தார்.

**பண்டிதர்:** இன்றைய மாநாட்டில இரண்டு தீர்மானம் எடுப்பம். அதில ஒன்று ஜல்லிக்கட்டை ஆதரித்து ஒரு தீர்மானம். மற்றையது முருகன் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணும் வகையில் ஆலய முன்றலிலோ அல்லது நல்லூர் ஆலயச் சூழலிலோ ஆர்ப்பாட்டங்கள் பேரணிகள் எதையும் செய்வதில்லை என்று.



(இப்படிப் பண்டிதர் கூறியதும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு தீர்மானங்களையும் ஏகமனதாக நிறைவேற்றினர்)

**மூப்பர்:** சாத்திரியார் என்ன எங்கட ஜனாதிபதி மைத்திரி ஐயாவின்ர சாதகப்படி அவரின் உயிருக்கு ஆபத்து எண்டு சிங்களச் சோதிடர் ஒருத்தர் அடிச்சுச் சொல்லியிருக்கிறார்.

**சாத்திரியார்:** மூப்பர் சாதகம் என்பதன் பொருளே சாதகமாகச் சொல்லவேணும் என்பதுதான். என்னைப் பொறுத்தவரை மைத்திரி ஐயாவின்ர உயிருக்கு ஆபத்து எண்டு சொல்லுறது அவருக்கு உளரீதியில பாதிப்பை ஏற்படுத்துவதுதான்.

**கங்காணி:** இலங்கையில ஜனாதிபதிகளின்ர பதவிகளுக்கு ஆப்பு வைக்கிறது சாத்திரிமார் போலத்தான் இருக்கு.

(ஆலடியில் சிரிப்பு)

**சாத்திரியார்:** ஓமோம் முன்பு ஒரு சாத்திரியார் மகிந்த ராஜபக்ஷவின்ர பதவிக்கு ஆப்பு வைச்சவர் அல்லோ! இப்போ மைத்திரியின்ர உயிருக்கே ஆபத்து என்கிறார் ஒரு சாத்திரி. அப்ப இனி சாத்திரிமாரைப் பிடித்தாத்தான் ஜனாதிபதியின்ர பதவிக்கு முடிவு கட்டலாம் எண்டு சொல்லுறியள்.

(மீண்டும் ஆலடியில் சிரிப்பு)

**பண்டிதர்:** வாத்தியார் உள்ளூராட்சித் தேர்தல் வரப்போகுது. கடமை நிறைவேற்று அதிபர்கள் ஒண்டு சேர்ந்து உள்ளூராட்சித் தேர்தலில வேட்பாளர்களை நிறுத்தி சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட வேணும் எண்டு கடந்த மாநாட்டில சொல்லுப்பட்டுது. இப்ப எந்த நிலையில இருக்குதாம்.

**வாத்தியார்:** சகல ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்குது. வேட்பாளர்கள் மிகவும் உன்னதமானவர்களாக, பொதுச்சேவையில் ஆர்வம் உடையவர்களாக இருக்கவேணும். அதோட மக்கள் ஆதரவு பெற்றவர்களாகவும் இருப்பது அவசியம் எண்டு சொல்லுப்பட்டிருக்குது.

**விதானையார்:** அப்ப கடமை நிறைவேற்று அதிபர்களும் தேர்தலில குதிப்பினமோ?

**வாத்தியார்:** அவையள் எப்படியோ வேலை செய்து கொண்டிருக்கிறவியள். இருந்தும் அவையளுக்கும் ஆர்வம் இருந்தால்- பொருத்தமானவர்களாக இருந்தால் அவையளும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில போட்டியிடலாம். நீதியை நிலைநாட்டுவதுதானே எங்கட நோக்கம்.

**கங்காணி:** மக்களின்ர ஆதரவைப் பெறவேணும்.

**வாத்தியார்:** ஊர் ஊராகச் சென்று மக்களிட்ட உங்களுக்கு விருப்பமான வேட்பாளர் யார் எண்டதைக் கேட்டு அந்த மக்களே வேட்பாளர்களைத் தெரிவு செய்வினம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில சரியானவர்கள் வெற்றி பெற்றால் அது மாகாண சபை, பாராளுமன்றம் என்பவற்றிலும் நேர்த்தன்மையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஏதோ இறைவன் செயல் எல்லாம் வெற்றியாக அமையும் என்று நம்புவம். இப்படி வாத்தியார் சொல்ல அதை அங்கீகரிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் மக்கள் தயாரா?

மனித வாழ்வு எப்படியாக அமைய வேண்டும் என்பதை அறுதியிட்டுக் கூறக்கூடிய ஒரே நூல் திருக்குறள். வள்ளுவரால் யாக்கப்பட்ட திருக்குறளில் பேசப்படாத விடயம் எதுவும் இல்லை எனலாம்.



1330 குறட்பாக்களைக் கொண்ட திருக்குறள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடங்களில்- ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் தனது ஆழமான கருத்தை வெளிப்படுத்தி நிற்கும்.

அந்தந்தச் சந்தர்ப்பங்களிலும் சூழ்நிலைகளிலும் தனது கருத்தை ஆழப்பதிந்து நிற்கும் திருக்குறளை நம் வாழ்வின் வழித்துணையாகக் கொள்வது தக்கதாகும்.

மன்னன், அரசியல், அறம், போர், இல்வாழ்வு இப்படி மனிதவாழ்வின் அத்தனை சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் தெளிவுபடுத்தக்கூடிய திருக்குறளில் ஒன்று

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை

எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்

என்பதாகும்.

இக் குறளின் அர்த்தம் அற்புதமானது. எதையும் வருமுன்னர் பாதுகாக்க வேண்டும். வர்தா புயல் பற்றிய எச்சரிக்கையும் முன்னேற்பாடுகளுமே அந்தப் புயலின் பேரழிவைத் தடுத்தது. புயல் வாட்டுமே என்றிருந்தால் அழிவுதான் மிஞ்சியிருக்கும். ஆக, முன்கூட்டிய ஏற்பாடுகள் என்பது மிகவும் அவசியமானது.

இருந்தும் ஈழத்தமிழர்களாகிய எங்களிடம் வருமுன்னர் பாதுகாத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலைமையே காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக தேர்தல் காலங்களில் எங்களின் விழிப்பற்ற தன்மை ஆளுமையற்ற மக்கள் பிரதிநிதித்துவத்தைத் தந்துவிடுகிறது.

இத்தகைய ஆளுமையற்ற மக்கள் பிரதிநிதித்துவத்தின் மறுபக்கம் ஏமாற்றுதல், ஊழல், செல்வாக்குக் கலாசாரம் 'என்பனவாகவும் இருப்பதுடன் இவர்களின் செயற்றிறனின்மை மக்களுக்கான சேவையையும் கடுமையாகப் பாதிக்கின்றது.

இதற்கு நல்ல உதாரணம் வடமாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளின் மக்கள் பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிடலாம்.

மாநகர சபையாக, பிரதேச சபையாக, நகர மற்றும் பட்டின சபை எதுவாக இருப்பினும் அவற்றின் செயற்றிறன் என்பது மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சியில் படுதோல்வி கண்டதென்பது மறுக்கமுடியாத உண்மை. இதற்குக் காரணம் உள்ளூராட்சி அரசு என்ற அமைப்பு அல்ல. மாறாக உள்ளூராட்சி அரசில் யார் பங்கேற்க வேண்டும், அவர்களுக்கான சேவைத் தகைமைகள் என்ன என்பது பற்றி மக்களிடம் ஒரு தெளிந்த எண்ணம் இருந்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து நமக்கு விருப்பமான அரசியல் கட்சி போட்டியிடுகிறது.

எனவே வேட்பாளர்களின் தகைமை பற்றியோ அவர்களின் நேர்மை பற்றியோ கவனம் செலுத்தத் தேவையில்லை என்று மக்கள் நினைத்ததன் விளைவு வடக்கு மாகாண உள்ளூராட்சி அரசுகளின் வெறுமைத்தனமாகும்.

## வேட்பாளர்களை சுயேட்சைக்குழுவில் நிறுத்துவதே பொருத்தமான வழியாகும்

உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகக் கட்டமைப்பை தத்தம் வருமான மூலத்தில் இருந்து சிறப்பாக மேற்கொள்ளமுடியும்.

எனினும் பதவியில் இருந்தவர்கள் எவ்வளவுக்கு அடிக்க முடியுமோ அந்தளவுக்கு அடித்துக் கொண்டு போய்விடுவோம் என்று நினைத்தபோது உள்ளூராட்சி சபைகளின் சேவையை மக்கள் பெறமுடியாது போயிற்று.


ஆக, வருமுன்னர் காவாதான் வாழ்க்கை போல எங்கள் நிலைமையும் ஆகிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே எதையும் வருமுன்னர் பாதுகாக்க வேண்டும். இதற்கான முன்கூட்டிய திட்டமிடல், பொருத்தமானவர்களின் தெரிவு என்ற விடயங்களில் மக்கள் கவனமும் கரிசனையும் கொள்ள வேண்டும்.

இப்போதுகூட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. எந்த நேரமும் தேர்தல் அறிவிக்கப்படலாம் என்ற நிலைமை தெரிந்திருந்தும் அது பற்றி நாம் அக்கறையற்றவர்களாகவும் எமக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போலவும் நடந்து கொள்கிறோம்.

இவ்வாறான போக்கு மீண்டும் இயங்கு நிலையற்ற உள்ளூராட்சி அரசைத் தரப்போகிறது என்பதே உண்மை.

ஆகவே உள்ளூராட்சி சபைகள் எங்களுடன் நேரடித் தொடர்பு பட்டவை. அவற்றின் இயங்கு நிலை என்பது எங்கள் அன்றாட சீவியத்துடன் தொடர்புபட்டவை. எனவே உள்ளூராட்சி சபைகளுக்கான மக்கள் பிரதிநிதித்துவம் ஆளுமைத் திறன் கொண்டதாகவும் மக்கள் நலன் மற்றும் சமூக நோக்கு உடையதாகவும் இருத்தல் அவசியம்.



எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களை தேர்தல் திணைக்களம் முன்னெடுக்கும் நிலையில், நாமும் எங்களை உசார்ப்படுத்த வேண்டும்.

சோத்தித்தனம் கொண்ட மக்கள் பிரதிநிதித்துவத்தை விடுத்து ஒரு புதிய சிந்தனையுடைய- தமிழ்மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய வேட்பாளர்களை உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் நிறுத்துவது கட்டாயமானதாகும்.

இதற்காக பொருத்தமான வேட்பாளர்களைத் தேட வேண்டும், இனங்காண வேண்டும். அவர்களைச் சந்தித்து அவர்களின் சேவை தேவை என்பதை வலியுறுத்த வேண்டும்.

பொதுவில் நல்லவர்களும் நேர்மையானவர்களும் ஒதுங்கியே நிற்பர். நமக்கேன் சோலி என்ற நினைப்பும் இவர்களிடம் இருக்கும். இந்த நினைப்புகள் அவர்களின் சேவைக்குத் தடை செய்கிறது.

ஆகவே நல்லவர்கள், நேர்மையானவர்கள் ஒதுங்கி நிற்காமல் தாமாக முன்வரவேண்டும். திறமை மிக்கவர்கள் ஒதுங்கி நின்றால் அந்த இடம் வேறொருவருக்காகிவிடும். ஆகையால் அன்புக்குரிய தமிழ் மக்களே அரசியல் கட்சி என்ற பேதம் கடந்தும் நமர், பிறர் என்ற வகைமைப்பாடு துறந்தும் நேர்மைக்கும் திறமைக்கும் செயலாக்கத்திற்கும் முன்னுரிமை என்ற அடிப்படையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் புதியவர்களை ஒன்றுசேர்த்து சுயேட்சைக் குழுவில் நிறுத்தி உள்ளூராட்சி அரசைப் பலப்படுத்த நாம் தயாராக வேண்டும். இதுவே இன்றைய அவசர தேவையாகும்.

விதுரன்




# மீனே,மீனே மீனம்மா, மீனாட்சியம்மா!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

நான் மன்னனிடம் பேசி உன்னை பெரும் செல்வந்தனாக்குகிறேன்" என்றதாம்.

மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்துபோன அந்த மீனவன் அந்தத் தங்க மீனின் சொற்படியே பாண்டிய மன்னனிடம், பளபளவென ஜொலிக்கும் அந்தத் தங்க மீனை எடுத்துச் சென்றானாம்.

அதைப் பார்த்த அரசரும் ஆச்சரியப்பட்டு விசாரிக்க, அந்த மீனும் அழகாக பேச ஆரம்பித்ததாம்.

“அரசே, உங்கள் முன்னோர்களின் அரச சின்னம் பொறித்த ஒரு முக்கியமான தங்கக்கட்டி பல காலமாக காணாமல் போய்விட்டதல்லவா? இப்போது அது கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதாம்.

மிகவும் மகிழ்ந்து போன அரசனோ, “அப்படிக் கொண்டு வந்து கொடுப்பவருக்கு தக்க சன்மானமாக எதைக் கேட்டாலும் கொடுப்பேன்" என்று வாக்குறுதி அளித்தானாம்.

அதற்கு அந்தத் தங்க மீனும், “சரி அப்போது என்னைக் கொண்டுவந்து உன்னிடம் ஒப்படைத்த அந்த மீனவனுக்கு தக்க சன்மானம் கொடுத்துவிட்டு என் வயற்றினுள் இருக்கும் அந்தத் தங்கக் கட்டியை எடுத்துக்கொள்" என்றதாம்.

ஒன்றும் புரியாமல் விழித்த அரசனைப் பார்த்து, அந்தத் தங்க மீன், தானும் அந்த மன்னனின் மூதாதையரின் வழியில் வந்தவர்தான் என்றும், அந்த பொக்கிஷத்தை தன் வயிற்றில் சுமந்து பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும், அதை அப்போது அந்த மன்னனிடம் ஒப்படைக்கும் நேரம் வந்துவிட்டதாகவும், தான் முக்தியடையும் காலமும் நெருங்கிவிட்டதாகவும் கூறியதைக் கேட்ட அரசன், ஒரு புறம் தொலைந்துபோன தம் மூதாதையரின் பொக்கிஷம் கிடைத்தாலும், அதிசயமான இந்த தங்க மீனை, தம் முடைய வம்சாவழியினரை கொல்ல வேண்டுமே என்ற கவலை ஒரு புறமும் வாட்ட தயங்கி நின்றானாம். அப்போது அந்த மீன்,

“மன்னா, என்னிடம் உள்ள பொக்கிஷத்தைப் பெற்றுக்கொண்டு நான் முக்தி பெற வழி செய்தால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்" என்றதாம்.

மன்னனும் தன் மனதை தேற்றிக் கொண்டு அந்த அதிசய மீன் சொன்னதைக் கேட்டு அதன்படியே செய்ததோடு அந்த மீனவனுக்கு ஒரு ஊரையே எழுதி வைத்தாராம்.

அந்த மீனவரும் மிகவும் மனம் மகிழ்ந்து அரசரை வாழ்த்திச் சென்றாராம்.

நேர்மையாக நடந்துகொண்டால் அதற்கான பலன் கைமேல் கிடைக்கும் என்பதை இக்கதையின் மூலம் புரிந்து கொண்டீர்களல்லவா?

(முற்றும்)

# அர்ஜுனனின் வீரம்



இந்திரலோகத்தில், அர்ஜுனன் மிக இன்பமாக இருந்தான்.

ஒருநாள் இந்திரன் அவனைத் தனியே அழைத்து,

“அர்ஜுனா, நிவாதகவசர்கள் என்ற மூன்றுகோடி அரக்கர்கள் நாற்புறமும் சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஒரு தீவில் வசிக்கின்றனர்.

அவர்கள் என் பகைவர்கள். நீ அவர்களுடன் போரிட்டு அழிக்க வேண்டும்" என்றான்.

இந்திரதேவன் அழகிய ரதத்தை வரவழைத்தான். மாதலி சாரதியாக ஏறி அமர்ந்தான்.

இந்திரன் தன் கரத்தால் மணி மகுடம் சூட்டி ஆபரணங்கள் பூட்டினான். எவ்வித கூரம்பினாலும் துளைக்க முடியாத கவசத்தை அணிவித்தான்.

காண்டீபத்தைக் கரத்தில் அளித்தான்.

ரதம் புறப்பட்டது. வெகுவிரைவில் ரதம் சமுத்திரத்தை தாண்டிச் சென்றது.

மேகங்களின் முழக்கம் போல், அதன் ஒலி திசைகளை நடுங்கச் செய்தது. நிவாதகவசர்கள் வசித்த தீவை அடைந்ததும் ரதம் பூமியில் இறங்கியது.

உடனே தேவதத்தமெனும் சங்கை எடுத்து ஊதினான் அர்ஜுனன்.

கவசமணிந்து இரும்பினாலான பற்பல ஆயுதங்களைத் தாங்கிய ஆயிரக்கணக்கான நிவாத கவசர்கள், அர்ஜுனனை நோக்கி கடல்புரண்டு வருவதைப் போல் ஆர்ப்பரித்து ஓடி வரலாயினர்.

அர்ஜுனன் துணிவுடன் நின்றான்.

சற்றும் பதறாது அம்புகளை எய்தான்.

கடுமையான போர் நடந்தது.

ரதத்தை மேலே செல்லவிடாது அரக்கர்கள் தடுத்தனர்.

கூரிய முனையுடைய சூலாயுதங்கள் அர்ஜுனனைத் தாக்கின. காண்டீபத்தின் முழக்கம் வெகுதூரம் கேட்டது.

அர்ஜுனனின் வீரத்திற்கு முன் நிற்க முடியாத எதிரிகள், யுத்த களத்தை விட்டு ஓடலாயினர்.

எதிரிகள் குவியல் குவியலாக யுத்தகளத்தில் சரிந்து வீழ்ந்தனர்.

குருதி வெள்ளம் ஓடியது.

இனி அர்ஜுனனைப் போரில் வெல்ல முடியாதெனக் கண்ட நிவாதகவசர்கள், மாய யுத்தம் புரியத் துவங்கினர்.

திடீர் என அர்ஜுனன் மீது கற்கள் விழுந்தன. இந்திராஸ்திரத்தைப் பிரயோகித்து அர்ஜுனன் அக்கற்களைப் பொடிப் பொடியாக்கினான்.

பெரும் மழை பெய்ய ஆரம்பித்தது.

எங்கும் இருள் சூழ்ந்து வானத்திலிருந்து பெரும், பெரும் துளிகள் விழுந்தன.

'விசேஷன்' என்ற அஸ்திரத்தை பிரயோகித்து, மழையைத் தடுத்து விட்டான் அர்ஜுனன்.

புயல்போல் பெருங்காற்று வீசியது.

வருணதேவன் அளித்த அஸ்திரம் காற்றின் வேகத்தை நொடியில் அடக்கியது.

ஆயினும் மனம் தளராத அரக்கர்கள் மெய்சிலிர்க்க வைக்கும் அஸ்திரங்களையும், நெருப்பையும் வாரி வீசினர்.

அரக்கர்களின் மாயையால் ஏற்பட்டிருந்த இருளை, ஒரு அம்பால் விலக்கினான் அர்ஜுனன்.

அர்ஜுனனை இவ்விதமாகப் பயமுறுத்த முடியாதெனக் கண்ட அரக்கர்கள், இன்னுமொரு தந்திரத்தைக் கையாண்டனர்.

மாயாவிகளான அவர்கள் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து நின்று போரிட்டனர்.

குரலும், வில்லை நாணேற்றும் ஒலியும் கேட்டனவே தவிர, எதிரிகள் புலப்படவில்லை.


அர்ஜுனன் மனம் தளரவில்லை.

ஒலி வரும் இலக்கை நோக்கி அம்பெய்வதில் அவன் வல்லவனாயிற்றே.

குரு துரோணரிடம், 'சப்தவேதி' பாணம் எய்வதைக் கற்றிருந்தான்.

ஆகையால் கண்களுக்குப் புலப்படாது நின்ற எதிரிகள் கூட மடிந்து வீழ்ந்தனர்.

அர்ஜுனன் வென்று வெற்றிமாலையை சூடினான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



### பைரவா வசூல் எப்படி?

### தமிழர்களின் பண்பாடு மாறுகின்றதே?

### கைகேயி இல்லாவிட்டால் இராவணன் உயிருடன்இருந்திருப்பானோ?

**மயில்வாகனம் — யாழ்ப்பாணம்**

**எமது கலாசாரத்தை மேலைநாட்டவர்கள் ஏற்று பின்பற்ற நாமோ காற்சட்டை அணிந்து திரிகிறோமே?**

காட்டியவன் மறைக்க மறைத்தவன் காட்டுகி றான். இதுதான் கலியுகம். வெளிநாட்டவன் இங்கு வரும்போது எங்கள் கலாசாரம் பிடிக் கிறது. வெளிநாட்டுக்குச் சென்ற மகன் ஊரு க்கு வரும் போது எங்கள் கலாசாரம் கசக் கிறது. கட்டைக் காற்சட்டையும் குட்டை பாவா டையும் எங்களுக்கு ஆகாது. அதுவே இப் போது எங்கள் கலாசாரம் ஆகிறது. எல்லாம் காலக்கொடுமை.

**கோபிகா — யாழ்ப்பாணம்**

**என்னோடு இருந்த நண்பி தனக்கு வேறு நண்பி கிடைத்ததும் போய்விடுகிறாள் எனின்?**

நீ அவளுக்கு நல்ல நண்பியாக இருக்க வில்லை என்பதே பொருள்.

**விஜிந் — பருத்தித்துறை**

**ஒருவரை காதலிக்க வேண்டுமென்றால் அழகை பார்க்கணுமா? மனசைப் பாக் கணுமா?**

மனசைப் பார்க்கப் போய் வில்லங்கத்தில் மாட்டிவிடாதே. ஏனென்றால் அது இருக்கும் இடம் அப்படி. அதனால் அமைதியாக யோசி. அழகைப்பார். அந்த அழகு உன்னுடன் உன் குடும்பத்துடன் ஒத்துவரும் என்றால் கமிட் ஆகிடு.

**டனு**

**மனிதனை மனிதனாக வாழவைப்பது எது?**

தன் தாய் தந்தையர்க்காக, தன் மனையாளுக் காக, தன் மக்களுக்காக, தன் உற்றார் உற வினர்களுக்காக, தன் ஊருக்காக, தன் நாட்டிற் காக இப்படி தன் சார்ந்து எவன் சிந்திக்கிறானோ அவனே மனிதனாகின்றான். அந்த மனிதம் உன்னதத்தை அடைந்து விடுகிறது.

**டனுசாந் — திருநெல்வேலி**

**தமிழர்களின் பண்பாடு மாறுகின்றதே?**

வெள்ளைக்காரர் இங்கு வந்து தமிழ் கலாசார உடையணிந்து நல்லூர் கந்தன் முன் பொங் கலிட்டு பூஜை செய்ய நாமோ கட்டாக்காலி நாய்கள் வெடிக்குப் பயந்து ஊரைச்சுற்றுவது போல் வீதியில் நின்று செல்பி எடுத்து பேஸ்புக், வைபர் என்று எம் கலாசாரத்தை சந்தி சிரிக்கச் செய்கிறோம்.

அழிப்பது நாம். இதில் எமது பண்பாடு திட்டமிட்டு அழிக்கப்படுகிறது என்ற அறிக்கை வேறு.

**நிறஞ்சன் — மல்லாவி**

**புலிகளின் நிர்வாகம் எப்படிப்பட்டது?**

கரும்பிருக்கும் அருகில் எறும்பிருக்கும். கரும்பு கட்டோடு இருக்கும் எரும்பு கட்டுக் கோப்போடு இருக்கும்.

**கபில் — மானிப்பாய்**

**வாழ்க்கை இனிமையாக?**

வாழ்க்கை என்பது தும்மல் போன்றது. தும் மும் போது எவ்வளவு கண்களை இறுக மூடு கின்றோமோ அவ்வளவுக்கு தும்மலில் சுக மும் திருப்தியும் கிடைக்கும். அதேபோல் எவ் வளவு வாழ்வை விரும்பி- நம்பி வாழ்கின் றோமோ அவ்வளவுக்கு இனிமை அதிகரிக் கும்.

குறுந்தகவல் (SMS) உங்கள் கேள்விகளை அனுப்புங்கள் 021 567 1532

**கிரி — சங்கானை**

**பேரின்பம் என்பது என்னவோ?**

வியர்வை சிந்தி வேலை செய்யும் போது மெல் லியதென்றல் வந்து தேகத்தில் பட உடல் சிலிர்க்கிறதே. அதை அனுபவித்தவனுக்குத் தான் தெரியும் உலகில் இதைவிட பேரின்பம் வேறெதுவும் இல்லையென.

**கரன் — ஆறுகால்மடம்**

**கைகேயி இல்லாவிட்டால் இராவணன் உயிருடன் இருந்திருப்பானோ?**

எவ்வளவு வீரனாகவும் தவவலிமை உடைய வனாகவும் இறைவனில் அளவற்ற அன்பு கொண்டவனாகவும் இருந்தாலும் மாற்றான் மனைவியில் ஆசை கொண்டால் அவன் அழிவான் என்பதை போதிப்பதுதான் இரா மாயணம். இதில் இராமன் ஒருமனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும் இராவணன் ஒரு மனிதன் எப்படி வாழக் கூடாது என்பதற் கும் உதாரண புருசர்களாகின்றனர் அவ்வு ளவுதான்.

**வினோத் — சுழிபுரம்**

**சீனி டப்பாவில் தூள் என எழுதி வைத்தால் எறும்பு வராதா?**

உன் மனைவி படித்த அளவிற்கு எறும்பு படித் திருக்காது. அதனால் உனக்கு தூள் ரீ கிடைக் கிறதை யாராலையும் தடுக்க முடியாது.

**நிந்துசன் - அல்வாய், நித்திலன் - பண்டத்தரிப்பு**

**பைரவா வசூல் எப்படி?**

நான்கு நாட்களில் நூறு கோடியை தாண்டி விட்டதாக பேசப்படுகிறது. தற்போது தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டை ஆதரித்து நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வெடித்துள்ளன. இத னால் பைரவா வசூலில் சற்று பின்தள்ளப்படும் என்பது உறுதி.

**தர்சன் — நாவற்காடு**

**தைப்பொங்கல் அன்று சூரியனுக்கு பீட்சா தான் படைத்தோம். சூரியன் அதை சாப் பிட்டிருப்பாரா?**

தைப்பொங்கலை கொண்டாடுவது ஒன்றும் சைனாக்காரனுமில்லை அமெரிக்காகாரனு மில்லை. அது தமிழர் பாரம்பரியத்தோடு வந் தது. நெல்விதைத்து கதிர் அறுத்து மழை தந்த சூரியனுக்கு நன்றி சொல்ல செய்யும் சடங்கது. பிச்சுப்போட்ட பீட்சா ஒன்றும் தேவ யில்லை அவனுக்கு. வெம்மை வீசும் அவனை குளிர்விக்க சர்க்கரைப்பொங்களால் மட்டுமே முடியும்.

**வர்ணியா — இருபாலை**

**உயர்ந்த நட்பென நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்நீர் பேதையார் நட்பு

என்கிறது திருக்குறள். அதாவது அறிவுடை யோருடன் நாம் கொள்ளும் நட்பு வளர்மதி போல வளர்ந்து கொண்டே செல்லும், அறி விலாதோருடன் செய்யும் நட்பு தேய்மதிபோல அறிவு தேய்ந்து கொண்டே செல்லும் என்பதாகும்.

**மாறன் — யாழ்ப்பாணம்**

**வறுமை எப்படிப்பட்டது?**

வறுமைப்பட்ட வீட்டில் தந்தை இருக்கிறார். ஐஸ் கிறீம் வாகனம் பாடலை ஒலிக்க விட்டுக் கொண்டு செல்கிறது. கையில் பணம் இல்லாத தந்தையின் உள்ளம் படும் பாடு எப்படிப்பட்டது?

மாலையில் சிறுவர்கள் சைக்கிள் ஓட்டி விளை யாடும் போது தன்பிள்ளைகள் அந்தச் சைக்கிளை ஏக்கப் பார்வை பார்க்கும் போது அவரின் மன நிலை எப்படிப்பட்டது?

பத்து மாணவர்களுடன் தன் பிள்ளை சேர்ந்து நிற்கும்போது பளுப்பேறிய வெள்ளைச்சட்டை வித்தியாசமாய்த் தெரியும். அப்போது அந்தத் தந்தையின் மனநிலை எப்படிப்பட்டது?

வறுமை உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் வதைத்து எடுத்து விடும்.

**தவராஜா — இனுவில்**

**மைத்திரிக்கு சோதிடர் நாள் குறித்திருக்கிறாரே?**

ஏற்கனவே சோதிடத்தை நம்பி படுதோல்வி கண்டவர் மகிந்த ராஜபக்ஷ. இந்தப் பூச்சாண்டி எல்லாம் தமிழர்களுக்கு தீர்வு தராமல் காலம் தாழ்த்துவதற்கான இராஜதந்திரம்.



# கவிதைக் கலசம்

## அகரமுதல

அன்பாய் இருந்தால்
ஆணவம் தொலையும்
ஆசையை விட்டால்
பாவம் தொலையும்
இல்லார்க்குக் கொடுத்தால்
புண்ணியம் கிடைக்கும்
ஈய்ந்த கைகளுக்கே
செல்வம் பெருகும்
உண்மையாய் நடந்தால்
ஊரே போற்றும்
ஊருடன் பகைத்தால்
வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும்
உன்னை உயர்த்தும்
ஏனென்று கேள்
நியாயம் பிறக்கும்
ஒற்றுமையே பலம்
உணர்ந்தால் உயர்ச்சி
ஓதாப்பொழுது
வீணாய்ப்போகும்
ஐயம் இட்டு
வாழ்ந்தால் பெருமை!
ஔவையாரைப்
படித்தால் புலமை

**கந்தபேரின்பம்**
**காவலூர்க்கவிஞன்**

## வேதனையில்...

உன்னைப் பிரிந்த நாளிலிருந்து
உலகில் பல நிகழ்வு கண்டேன்
உன்னருகில் அவை எனக்கு
அற்புதமான காட்சிகள்
எனை மறந்து எங்கோ
நீ சென்ற பின்
நிஜமான நிகழ்வுகளும்
நிஜமற்றதென எண்ணுகின்றேன்
சடங்குகளும் சம்பிரதாயங்களும்
கோவில்களும் கொண்டாட்டங்களும்
வேடதாரிகளின்
வேண்டாத வேலையென
வேதனையை ஊட்டுகிறது

**அணிஞ்சில்**
**புவபாலன்**

## புதுயுகம் படைப்போம்

நித்திலத்தில் யுத்தமெனும்
பேரரக்கன் தந்து சென்ற
கோர வடுக்கள்
நினைவை விட்டு நீங்கிட முன்னர்
சத்தமின்றியே
சபையேறும் கலாசாரக் கருவறுப்பு
போதைவஸ்து எனும் பெருவடிவம்
எடுத்து நிற்க– இது
புரியாத மூடர் மதி மயங்கி
கல்வியோடு கலாசாரம்
பண்பாடு மனிதநேயம்
தொலைத்துவிட்டு
வாள்வெட்டு வம்பளப்பு
கொலை கொள்ளையோடு
பெண்ணினத்தைச் சிதைக்கின்ற
கொடியவர்களாகி நின்று
எம் இனத்தின்
எதிர்காலம் தொலைத்துவிட்டார்
கலிகாலம் இதுவென்று
விதியின்மேல் பழிபோட்டு நாமிங்கு
மௌனித்து இருக்காது
தடம்மாறும் எதிர்காலம்
தரையோடு புதைகின்ற
நிலையுணர்ந்து துயில்
நீங்கி எழுந்திங்கே
புதுயுகம் படைப்போம்...

**கி.சரண்யா**
**தாவடி**

## ஜல்லிக்கட்டு

தடை அதை
உடையென–என்
தாய்த் தமிழினம்
விடைக்காய் காத்திருக்க

உடையது படையென
என்னினப் பண்பாட்டை
கொடு எனக் கேட்கிறோம்
திடமது மனதுடன்

முடிவது முடிவென
முடித்துவிடுமளவிற்கு
தமிழ்ப் பண்பாடு
நேற்று வெடித்த மொட்டல்ல

விடிவது
எம் வீரத்தின்
விளை நிலமது
நடை உடை அனைத்திலும்
தமிழே தமிழ் கொடையது


முடிவதை கேட்டு
நடைபயில நாமொன்றும்
உம் அடிமைகளல்ல
முடியுடை பரம்பரை

அடித்தவர்க்கு அடிக்கவும்
அடி அளித்தவர்க்கு
அள்ளிக் கொடுக்கவும்
பிறப்பெடுத்த பரம்பரை

முடிவது கேட்கிறோம்
தடையை நீக்கு– இல்லையேல்
தடை போட்ட
கடையினம் நீராவீர்

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 337



## விளையாட்டும் வினையும்

விளையாட்டென எண்ணி
வினையோடு விளையாடும்
துள்ளித் திரியும்
பள்ளிச் சிறுவர்களே
புகையிரதப் பாதையிலே
புன்னகையோடு நீங்கள்
புரியும் செயலால்
புண்பட நேரும்
ஓடும் ரயில் பாதையருகே
வருமானால் வாழ்க்கை எங்கே
பாலர் உங்கள்
உயிர்கள் பறக்கும்
பாதையோரம்
பிணங்கள் கிடக்கும்
பெற்ற மனங்கள் கதறி துடிக்கும்
நல்ல கல்வி கற்ற நீங்கள்
துட்டக்குணத்தை துரத்திவிட்டு
பாரோர் போற்ற பணிந்து வாழ்ந்து
பண்பைக் கொண்டு
உலகை வெல்வீர்

*சி.திவ்வியா*
*யா/ப.மெ.ம.வி.*

## கவனம்

விளையாட தண்டவாளம்
அருகில் கற்களைப் பொறுக்கும்
சின்னஞ் சிறுசுகளே கவனம்
புகையிரத வடிவில் எமன்
உயிர்காவ வரக்கூடும்

*சு.ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## சிரமதானப் பணி

நாற்புறமும் பரவிவரும்
புல்பூண்டு குப்பைகளால்
தொற்று நோய்கள் பரவாது
சுற்றுச் சூழலைச் சுத்தமாக்க
சிரமதானச் செயற்பாட்டில்
முற்போக்கு எண்ணங்கொண்ட
போற்றுதற்குரிய சிறுவர்கள்
செய்யும் அரும்பணி என்றும்
போற்றுதற்குரியதே
நல்லதைச் செய்
அதை இன்றே செய்

*துரை*
*தென்மட்டுவில்*

## விபரீதம்

விபரீதம் நேருகின்ற இடம் இதுவே
விளையாடும் இடமற்ற உங்களுக்கு
வீண்பரீட்சை வேண்டாம் இவ்விடத்தில்
விம்மியழ நேர்ந்துவிடும்
பெற்றோருக்கு
எதிர்பாராத நேரத்திலே
எமன் வந்து
எடுத்து செல்வன்
உங்கள் உயிர்தனை
எதற்கு இவ்விடத்தில் விளையாட்டு
ஏக்கத்துடன் அழுவதற்கும்
எம்மிடத்தில் கண்ணீரில்லை
எதிர்காலம் காத்திருக்கு
உங்களுக்காய்
ஏமாறும் இனம்
ஒன்றைக் காப்பதற்கு

*இளவரசு*
*ஒட்டுசுட்டான்*

## பயமறியா இளங்கன்றுகள்

தொடருந்து வரும் தொடர்பாதையில்
தொட்டு விளையாடும் பிஞ்சுகளே
விளையாட்டு வினையாகிடும்
விட்டு விலகிடுங்கள் பாலகர்களே
பள்ளிப்பாடம் பல பயின்று
கற்றவராய் நீங்கள் மிளிர வேண்டும்
பண்புடைய மாணவர்களாய்
கல்விச் சாதனைகள் பல புரிய வேண்டும்
கணப்பொழுதில் கடந்து போகும்
கடுகதிப் புகையிரதம் மோதி
முடிந்துவிடும் உங்கள் வாழ்க்கை
மறந்திடாதீர் பயமறியா இளங்கன்றுகளே

*எளிமைக்கவி றொபின்*
*புன்னாலைக்கட்டுவன்*

## ஆழமறியாமல் காலைவிடாதே

சின்னஞ் சிறுசுகளே
குறும்புத்தனமாக
தண்டவாளம் அருகே
கல்லை அள்ளி விளையாடி
பாரிய ஆபத்தை தேடுகின்றீர்கள்
இந்தப்பாதை உங்கள் கனவை
வாழ்க்கையை சிதறடித்துவிடும்
ஆழமறியாமல் காலைவிடாமல்
கவனமாக பயணத்தை
தொடருங்கள்

*சி.பிரியங்கா*
*மட்டுவில் தெற்கு*

## இந்த வயதின் இயல்பு நிலை

கூட்டமாகச் சேர்ந்துவிட்டால்
குதூகலமும் கொண்டாட்டமும்
பாட்டு வரும் ஆட்டம் வரும்
பார்த்தவரை பரிகசிக்கும்
கேட்போரை கேலி செய்யும்
பந்தயங்கள் பல
பலவாய் வந்துவிடும்
சதம் சதமாய் காசுகளை
சங்கதி கூறி எடுத்திடுவர்
தொடருந்து பாதை தனில்
தொல்லையின்றி வைத்து நிற்பர்
கடந்ததுமே தொடருந்து
கச்சிதமாய் எடுத்திடுவர்
பலவகையான தகடுகளை
பார்த்துப்பேசி ரசித்திடுவர்
தனித்து நிற்கும் பையனுக்கோ
தற்பெருமை காட்டிடுவர்

*அணிஞ்சில் புவபாலன்*

# மௌனத்தின் தேடல் –338



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 25.01.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# வித்தியாசமான ஹோட்டல்கள்


ஹோட்டல்கள், ரெஸ்ட்ரோரன்கள் என்றாலே டைனிங் டேபிள் இருக்கும், மெனுகார்ட் இருக்கும்... வேற என்ன புதுசா இருக்கப்போகுதுனு யோசிச்சிருக்கீங்களா..? அப்படி நம்மளை மாதிரியே யோசிச்ச யாரோதான் இப்படிப்பட்ட வித்தியாசமான ரெஸ்ட்ரோரன்களையும் வடிவமைச்சுருக்கணும். உலகம் முழுவதிலும் இருக்கும் வித்தியாசமான ஹோட்டல்களைப் பார்ப்போம்.

## Ristorante Grotta Palazzese



இத்தாலியில் அமைந்திருக்கும் இந்த ரெஸ்டாரென்ட், கற்பாறைகளுக்கு நடுவே குடைந்து வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கடலுக்கு அருகே இருக்கும் பாறைகளின் வழியாகக் குனிந்து உள்ளே சென்றால், நீண்ட குகைப்பாதையின் முடிவில் பெரிய ஹோட்டல் வரவேற்கிறது. உள்ளே அமர்ந்து விதவிதமான உணவுகளைச் சுவைத்தபடி, மறுபக்கம் கடலின் அழகை ரசிக்கலாம். # அழகிய கடலே...

## Aiguille Du Midi Restaurant



'பிரான்ஸ் நாட்டின் சாமொனிக்ஸ் நகரத்தில் பனிமலைகளின் முகட்டில் இருக்கிறது இந்த ரெஸ்டாரென்ட். மேலிருந்து கீழே பார்த்தாலே ஈரக்குலை நடுங்கும் 3,842 மீற்றர் உயரத்தில் அமைந்திருக்கிறது. பயமின்றிச் சாப்பிட அமர்ந்தால், பனிமலைகளின் அழகு கண்முன்னே தெரியும்படி சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

# சாப்பாடு பாதி, பயம் மீதி!

## Ithaa undersea Restaurant




மாலைதீவில் கடலுக்கு அடியில் ஐந்து மீற்றர் ஆழத்தில் அமைந்திருக்கிறது இந்த கடலடி ரெஸ்டாரென்ட். கண்ணாடிக் கூண்டு போன்ற அமைப்பில் பெரிதாக இருக்கும். உள்ளே போய் அண்ணாந்து பார்த்தால், தலைக்கு மேலே மீன்கள் நீந்திக் கொண்டிருக்கும். கடலுக்குள்ளேயே அமர்ந்து கடல் உணவுகளை ஒரு கை பார்க்கலாம். # சுறாப்புட்டு சாப்பிட்டா, சுறா வருமா பாஸ்?

## Giraffe Manor



கென்யா நாட்டின் லங்காடா பகுதியில் இருக்கும் இந்த ஹோட்டல் இன்னும் வித்தியாசமானது. காட்டுப் பகுதியில் அமைந்திருக்கும் இந்த ஹோட்டலில் ஒட்டகச்சிவிங்கிகளோடு சேர்ந்து உங்கள் உணவைப் பரிமாறிக்கொள்ளலாம். ஒட்டகச்சிவிங்கிகள் நீண்ட கழுத்தை ஹோட்டலுக்கு உள்ளே நுழைத்து உங்கள் தட்டிலிருக்கும் சாப்பாட்டைக் கவ்விக்கொள்ளும் அளவுக்கு ஜன்னலை அமைத்திருக்கிறார்கள். # சொந்தக் காசுல சூனியம்!

## Ali Barbour's Cave Restaurant




கென்யாவில் அமைந்திருக்கும் இந்த ரெஸ்டாரென்ட்டை அடைய குகைக்குள் நடந்து செல்ல வேண்டும். இருட்டறையாக இருக்கும் இந்தப் பகுதி முழுவதும் மெழுகு வர்த்திகளால் சூழப்பட்டு இரவு நேரங்களில் தங்கமாகத் தகதகவென ஜொலிக்கிறது. #அலிபாபான்னு பேர் வெச்சா, "திறந்திடு சீசேம்" சொல்லணுமோ..?

## Labassin Waterfall Restaurant



பிலிப்பைன்ஸ் நாட்டின் லெப்பாசின் நீர்வீழ்ச்சியில், உச்சிப்பாறைகளில் இருந்து தண்ணீர் தெறித்துவிழும் இடத்தில் நட்டநடுவே அமைந்திருக்கிறது இந்த ஹோட்டல். நீர் ஓடிக்கொண்டிருப்பதற்கு மேலேயே டேபிளைப் போட்டு ரெஸ்டாரென்டாக்கி இருக்கிறார்கள். இந்த ஐடியாவுக்கே வாடிக்கையாளர்கள் குவிகிறார்களாம். #நீங்கள்லாம் எங்கிருந்துய்யா வர்றீங்க..?

## Dinner in the sky




தொங்கும் தோட்டம் போல, இது அந்தரத்தில் தொங்கும் ஹோட்டல். இங்கே சீட் பெல்ட் அணிந்தபடிதான் சாப்பிட விடுவார்களாம். கிரேன் இயந்திரத்தின் உதவியோடு தொங்க விடப்பட்டிருக்கும் இந்த மிதக்கும் ஹோட்டலில், விபத்து நிகழாதவாறு நிறையப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதாம்.

#இதெல்லாம் தேவையா தம்பி!

# கேள்விக்குறியாகும் ஈழத்தமிழரின் பொருளாதாரம்

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தமிழ் மக்களினுடைய பூர்வீக நிலப்பரப்பு என்பதுடன் இப்பகுதியில் கி.மு 2ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் இருந்து தமிழ் மக்கள் தனித்துவமான மொழி, கலை, கலாசாரத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை யாரும் மறுத்து விட முடியாது. தமிழ் மக்கள் தமக்கென ஒரு தனித்துவமான பொருளாதாரத்தை கொண்டிருந்ததையும் அதனை முன்னெடுத்து சென்றதனையும் வரலாறு சான்று பகர்கின்றது. 1980களில் பின்னர் இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கில்



வீ. எஸ். எஸ்.தனஞ்சயன்
சட்டத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

ஏற்பட்ட அசாதாரண போர்ச் சூழ்நிலைகள் தமிழர் பொருளாதாரத்தில் பாரிய மாற்றத்தை, பின்னடைவை ஏற்படுத்தியது. 1983ஆம் ஆண்டுவரை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **(Gross Domestic Product)** 2ஆவது பாரிய பங்களிப்பினை வடக்கு-கிழக்கு மாகாணங்களே வழங்கியிருந்தன. ஆனால் இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்கள் 8ஆவது, 9ஆவது இடங்களை வகிக்கின்றன. இது தற்காலச் சூழலில் தமிழர்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவை தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வளங்கள் நிரம்பிய பிரதேசங்களாக காணப்படினும் கூட அவ் வளங்களை உபயோகப்படுத்த முடியாத நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயங்கள் எனும் பெயரிலான இராணுவ நில ஆக்கிரமிப்பு, பௌத்த சிங்களமயமாக்கலின் ஒரு பகுதியாக நடைபெறும் குடியேற்றங்கள் போன்றவற்றினால் மக்கள் தமது குடி, விவசாய நிலங்களை இழந்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலும் வடமாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தமிழ் விவசாயிகள் தமது பூர்வீக விவசாய நிலங்களை இழந்து வருகின்றனர். விவசாயத்துறைக்கு ஊக்குவிப்புக்கள் குறைவாகவும் உற்பத்திகளுக்கு போதிய சந்தைப்படுத்தல் வசதிகளும் அற்றுக் காணப்படுகின்றன.


வடக்கு-கிழக்கு மாகாணங்கள் கண்டமேடைகள் கொண்ட நீண்ட கடற்கரையை கொண்டுள்ள மாகாணங்களாக திகழ்வதால் வடக்கு-கிழக்கு கடற்பரப்பு மீன்பிடிக்கு உகந்த பிரதேசங்களாக காணப்படுகின்றது. மீன்பிடி தமிழர் பொருளாதாரத்தில் ஓர் முக்கிய இடத்தை கொண்டிருப்பதுடன் இப்பிரதேசங்களில் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். யுத்த காலப்பகுதியில் மீன்பிடித்தொழில் பாரிய பின்னடைவைச் சந்தித்ததுடன் மீனவர்களின் மீன்பிடி படகுகள், உபகரணங்கள் அழித்து சேதமாக்கப்பட்டன.

தற்போது யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வடகிழக்கு கடற்பரப்பில் அதிகரித்துவரும் சிங்கள மீனவர்களினுடைய ஆதிக்கம் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது. முல்லைத்தீவின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், அளம்பில், செம்மலைப் பகுதிகளில் சிங்கள மீனவர்கள் புதிதாக வாடிகள் அமைத்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தின் கெடுபிடிகளுடனேயே தற்போதும் தமிழ் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.மேலும் யாழ். மாவட்டத்தின் சில பகுதிகள் இன்னமும் மீன்பிடிக்காக அனுமதிக்கப்படவில்லை. போதிய இறங்கு துறைகள், பதனிடல் வசதிகள், சந்தைப்படுத்தல் வசதிகள் இன்னமும் மீன்பிடித்துறையை மேம்படுத்த வடக்கு-கிழக்கில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

கைத்தொழில் துறைக்கு தேவையான மூலப்பொருட்கள், கனிய வளங்கள் பல வடக்கு-கிழக்கு பூராகவும் செறிந்து காணப்படுகின்றன. யாழ்.மாவட்டத்தில் சீமெந்து உற்பத்திக்கு அவசியமான முருகைக்கற்கள் காணப்படுகின்றன. 1983ஆம் ஆண்டு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் 113,147 மெற்றிக் தொன் (MT) சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது. போரின் போது இடைநிறுத்தப்பட்ட இந்த சீமெந்து தொழிற்சாலை இன்னமும் மீளமைக்கப்படவில்லை. ஏற்கனவே இயங்கிய ரயர் தொழிற்சாலையும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. யாழ்.மாவட்டத்தின் வல்லிபுரம், குடத்தனை, நாகர்கோவில் மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் கண்ணாடி உற்பத்திக்கு தேவையான சிலிக்கா (Silica) மணல் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று அமைக்க முடியும்.

> இலங்கையில் தமிழர்கள் மீதான பொருளாதார ஒடுக்குமுறைகள் தேசிய இனமுரண்பாட்டுக்கும், தமிழ் ஆயுதக்குழுக்களின் தோற்றத்திற்கும் ஓர் முக்கிய காரணமாக இருந்தது. அசாதாரண சூழல் நிலவிய காலத்தில் இது மேலும்மோசமடைநதது. தொடர் இடப்பெயர்வுகள், பொருட்களுக்கான தட்டுப்பாடு, வியாபார நிலையங்கள் அழிவடைந்தமை, தமிழ் வர்த்தகர்களை தொழிலை கொண்டு நடத்த முடியாத நிலைக்கு இட்டுச்சென்றது.

முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் பகுதியில் ஓட்டு உற்பத்திக்கு தேவையானகளிமண்காணப்படுகிறது. 1980 இற்கு முன்னரும், விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழான காலத்திலும் சிறப்பாக



இயங்கி வடக்கு-கிழக்கிற்கான ஓட்டுத் தேவையை பூர்த்தி செய்த ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை தற்போது செயலற்றுக் கிடக்கின்றது. புல்மோட்டையில் காணப்படும் இல்மனைட் **(ilmenite)** வெளிநாட்டிற்கு தாரைவார்க்கப்பட்ட நிலையில் அதன் பயனை மத்திய அரசே அனுபவிக்கின்றது. அப்பிரதேச மக்கள் அவ்வளத்தின் பயனைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீதான பொருளாதார ஒடுக்குமுறைகள் தேசிய இனமுரண்பாட்டுக்கும், தமிழ் ஆயுதக் குழுக்களின் தோற்றத்திற்கும் ஓர் முக்கிய காரணமாக இருந்தது. அசாதாரண சூழல் நிலவிய காலத்தில் இது மேலும் மோசமடைந்தது.

தொடர் இடப்பெயர்வுகள், பொருட்களுக்கான தட்டுப்பாடு, வியாபார நிலையங்கள் அழிவடைந்தமை, தமிழ் வர்த்தகர்களை தொழிலை கொண்டு நடத்த முடியாத நிலைக்கு இட்டுச்சென்றது. 2009 இற்கு பிற்பட்ட காலத்திலும் தமிழ் வர்த்தகர்களை பொறுத்தவரை வியாபாரத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாண தமிழ் வர்த்தகர்கள் 2009 இற்கு பின்னர் வருகை தந்த முஸ்லிம் வர்த்தகர்கள், தென்னிலங்கை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளுடன் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக யாழ்.நகர்ப்பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் தமிழ் வர்த்தகர்கள் 2009 இற்கு பின்னர் வருகை தந்த புதிய வர்த்தகர்களுடன் பாரிய போட்டியை எதிர்நோக்குகின்றனர். வடக்கில் பாரம்பரிய தனியுடைமை வணிக அமைப்பில் தொழிற்படும் தமிழ் வர்த்தகர் புதிய, நவீனத்துவமான சந்தைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை தற்பொழுது உணரப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் வர்த்தகம் ஓர் பொறி வைத்த மீண்டுவர கடினமான நிலையிலேயே காணப்படுகின்றது. அநேகமான தமிழர் வணிக நிலையங்கள் ஒப்பீட்டளவில் மூலதனம் குறைந்ததாகவும் தத்தம் பகுதிகளிலுள்ள தமிழ் நுகர்வோரை மாத்திரம் எதிர்பார்த்து வியாபார கருமங்களை ஆற்றுவதாகவும் காணப்படுகின்றன. அதிக நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் மக்கள், அரிசி ஆலைகள் அமைத்து வியாபாரத்தை விருத்திசெய்யும் விருப்பிருந்தும் மூலதனம் இன்மையால் தமது நெல்லை அறாவிலைக்கு விற்று வருகின்றனர்.

புலம்பெயர் தமிழ் உறவுகளினுடைய உதவிகள் இலங்கைத் தமிழர்களின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஓர் முக்கியமான சாதகமான காரணியாகவுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர் இடப்பெயர்வுகளையும், இழப்புகளையும் சந்தித்த தமிழினம் மீளவும் தலைதூக்கி நிமிர்தற்கு புலம்பெயர் தமிழர் உதவிகள் இன்றியமையாத ஒன்றாக அமைந்தன. 2009 இற்கு பின்னரான காலப்பகுதியில் புலம்பெயர் தமிழர்கள் வடக்கு-கிழக்கில் காணிகளில் அதிகம் முதலிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இம் முதலீடு சில சந்தர்ப்பங்களில் இலங்கைவாழ் தமிழர்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அதிக மூலதனம் உள்ள புலம்பெயர் உறவுகள் வடக்கு-கிழக்கில் கைத்தொழிற்சாலைகளை அல்லது பாரிய வணிக நிறுவனங்களை அமைப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான முதலீடுகள் இலங்கை வாழ் தமிழர்களுக்கும் நன்மை பயக்கக்கூடியது. புலம்பெயர் உறவுகள் தமது உறவுகளுக்கு மாதாந்த உதவிகளை வழங்கும் போக்கு பரவலாக காணப்படுகின்றது. மாறாக தமது உறவுகளின் நிலையான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் மேலும் பயனுள்ளதாக அமையும்.

வேலையில்லாப் பிரச்சினை தமிழ் இளைஞர்.யுவதிகள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது. அதிலும் பட்டதாரிகள் பட்டம் பெற்றபின் மத்திய அல்லது மாகாண அரசின் கீழ் நியமனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள பல வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. "கோழி மேய்த்தாலும் கவமென்டு வேலைதான் வேண்டும்" என்ற மனநிலையிலுள்ள மக்கள் தனியார்துறை நோக்கிச் செல்ல தயக்கம் காட்டுவது வேலையில்லாப் பிரச்சினையை மேலும் அதிகரிப்பதாக உள்ளது.

தமிழ் புத்திஜீவிகளினுடைய வெளியேற்றமும் தமிழர் பொருளாதாரத்தை பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. தமிழர் பொருளாதாரத்தைப் பெர்றுத்தவரை பொருளாதார வல்லுநர்களின் ஆலோசனை **(Scholarly Advices)** மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. மிகவேகமாக மாறிவரும், நவீனத்துவமடையும் உலகில் தமிழர் பொருளாதாரம், பொருளாதார வல்லுநர்களின் ஆலோசனை பெற்று சரியான பாதையில் வழிநடத்தப்பட வேண்டும். வடக்கு-கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் மத்திய, மாகாண அரசுகள் இதுபற்றி அதிக கவனம் செலுத்தாதுள்ளன.

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்று கிடைக்கவேண்டிய அதே தருணத்தில் தமிழர்களுடைய பொருளாதாரம், கல்வி, சுகாதாரம்என்பனவும்முன்னேற்றமடைய வேண்டும். அவ்வாறான முன்னேற்றம்தான் தமிழர் தரப்பில் ஓர் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும். தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எப்பொழுதுமே அரசியல் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்களோடு மட்டும் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாது பொருளாதார, கல்வி, சுகாதார முன்னேற்றங்களுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும்.

# வாலிபக் கனவுகள்



## சிறுகதை

பல பஸ்வண்டிகள் பல இடங்களின் பெயர்ப் பலகையுடன் அவனை அடுத்தடுத்து கடந்து சென்று கொண்டிருந்தது.தான் போக வேண்டிய பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருக்கிறான். கையில் மூன்று சூட்டுகள் சேர்டில் தொங்கும் கறுப்பு .. கண்ணாடி,சப்பாத்து என அவன் சொல்லாமலே அவன் வெளிநாட்டில் இருந்து தான் வந்திருக்கிறான் என்பதை அவனது நடை உடை பாவனைகள் பார்ப் போருக்கு உணர்த்தின. ஆறடிக்கு குறையாத உயரம், மா நிறம் என்று கூறுமளவிற்கு இல்லாவிடினும் கறுப்பாக இருந்தாலும் உதட்டில் இயல்பாகவே ஒட்டியிருந்த புன்னகையுடன் பார்ப் போரை கவரும் அழகுடன் நின்ற பிரகாஸ் யாழ்ப்பாணம் எனும் LED பெயர்ப் பலகையுடன் வந்த அதிசொகுசு பஸ்ஸை கையைக் காட்டி மறித்து ஏறிக் கொண்டான். அன்று புதன்கிழமை என்பதால் பெருமளவான இருக்கைகள் காலியாகவிருந்தன. அவனும் பின் பஸ்ஸின் பின் பகுதியில் காலியாக இருந்த ஒரு இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டான்.

இரவு நேர சொகுசு பஸ்களில் வழமையாகப் போவது போல் புதிய திரைப்படம் திரையிடப்பட்டிருந்தது. பஸ்ஸின் AC யில் இருந்துவரும் குளிர் காற்று அவன் நாசித்துவாரங்களை வருடிச் சென்றது. எனினும் இவை எவையும் அவனது கவனத்தையும் சிதைக்கவில்லை. அவன் நினைவு முழுவதும் யாழ்ப்பாணத்தையும் அங்கே இருக்கும் அவனது காதலி அனுவையுமே சுற்றியிருந்தது.

அவனது பள்ளித் தோழி , சிறுவயது முதல் கூடப் படித்தவள் பாடசாலை எனும் நந்தவனத்தில் எல்லோரையும் கவர்ந்த ரோஜா மலர் . அவள் அப்படியொரு அழகு , உயர்ந்த எடுப்பான தோற்றமும், கருவண்டு போன்ற பளிச்சிடும் கண்களும், மாநிறமும் பார்த்த உடனே யாரையும் கவர்ந்துவிடும். எப்போதும் அவளது நீட்டுப் பின்னலை அழகாக மடித்துக் கட்டியிருப்பாள். அந்தக் கல்லூரியில் அவளை ரசிக்காத கண்களே இல்லை, அவளது வகுப்பு சக மாணவர்கள் மட்டுமல்ல ஏனைய மூத்தமாணவர்களின் காதல் கணைகளிற்கும் ஆளாகியவள். எத்தனையோ காதல் கடிதங்கள் நீட்டியவர்கள் வரிசையில் இரண்டு பாடசாலை ஆசிரியர்களும் உள்ளடக்கம்.

இத்தனை இருந்தும் எவரையும் திரும்பிக் கூட பார்க்கமாட்டாள். நீட்டிய கடிதங்களை அலட்சியப் பார்வையுடன் கடந்து செல்பவள். அதனால் தானோ என்னவோ அவளை எல்லோருக்கும் பிடித்துவிட்டது.



இத்தனை பேரை அலட்சியப்படுத்தினாலும் அவள் பார்வை எப்போதும் பிரகாஸ் மேலேதானிருக்கும். அதற்கு காரணம் அவளது வகுப்பில் அவளுக்கு கடிதம் நீட்டாத ஒரே ஜீவன் அவன் மட்டும் தான். அதுமட்டுமல்ல எந்த நேரமும் ஏதாவது குறும்புத் தனமும் குழப்படியும் செய்து கொண்டேதான் இருப்பான். அவனுக்கு உறவென்று ஊரில் இருந்தது அவனது தந்தை மட்டும் தான். சிறுவயதிலேயே தாயை இழந்தவன். அவனுக்கு நான்கு சகோதரர்கள், நால்வரும் லண்டனில். இங்கே அவனும் தந்தையும் தான்.ஆரம்பத்தில் நட்பாகப் பழகிய பிரகாசுக்கும் அனுராதாவுக்கும் இடையில் காதல் துளிர்விட்டு வளர்ந்து விருட்சமாகியது.

அனுவின் குடும்பம் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு பெரிய வசதியான குடும்பம் இல்லை. கூலி வேலை செய்யும் அப்பா. கொட்டில் வீடு இரண்டு தங்கை. அன்றாட செலவுக்கே அல்லல்படும் குடும்பம். எனினும் கௌரவமான குடும்பம். வீட்டில் கிடைக்காத அன்பும் பாசமும் அவளிற்கு பிரசாசிடம் நிறையவே கிடைத்ததில் அவள் குழந்தையாகவே ஆகிவிட்டாள். இந்த நிலையில் அவர்கள் A/L படிக்கும் போது பிரகாசின் அப்பா மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார். பிரகாசிற்கு இருந்த ஒரேயொரு உறவும் பறிபோனது. அந்நேரத்தில் அனுவின் அன்பே அவனை அரவணைத்தது.

தந்தையின் மரணத்தின் பின் அவனை தனித்துவிட விரும்பாத சகோதரர்கள் அவனையும் லண்டனுக்கு கூப்பிடுவதற்கு ஒழுங்குகளை செய்தனர். ஏஜெண்டுக்கும் காசு கட்டியிருந்தனர். பிரசாசும் அதனை மெதுவாக அனுராதாவுக்கு எடுத்துக் கூறி அவளதும் அவளது குடும்பத்தின் சம்மதத்தையும் பெற்றிருந்தான். லண்டன் போனால் இரண்டு மூன்று வருடங்களில் விசா கிடைத்ததும் அவளை உடனே எடுப்பதாக கூறியே விட்டுச் சென்றான். கனத்த இதயங்களுடன் இருவரும் பிரிந்தாலும் சேரப் போகும் நாட்களை எண்ணி சமாதானம் பண்ணிக் கொண்டனர்.

லண்டன் போய் இறங்கினாலும் யுத்தத்துடன் சம்பந்தப்படாதவன் என்ற படியால் அவனுக்கு விசா கிடைப்பது குதிரைக் கொம்பாகியது. எனினும் அவனால் வேலைக்குப் போகவும் நிறையப் பணம் ஈட்டுவதற்கும் எந்தத் தடையும் இருக்கவில்லை. அவனுக்கு இருந்த உறவே அவள் மட்டும் தானே. எனவே பெருமளவு பணத்தையும் அவளிற்கே அனுப்பி வைத்தான். தினமும் அரைமணி நேரமாவ்து இருவரும் கதைக்க தவறுவதில்லை.

பிரகாசுக்கு தனக்கு விசா கிடைக்கும் என்ற நம்பிக்கை சுத்தமாகப் போய்விட்டதால் தான் அனுப்பிய பணத்தில் பிரதான வீதியை அண்டிய பகுதியில் காணி ஒன்றை வேண்டி வீடு ஒன்றைக் கட்டு விசா கிடைக்காட்டி அங்கே எண்டாலும் வந்து ஒண்டா இருப்பம் எண்டு சொல்ல அனு காணியும் வேண்டி வீட்டு வேலையும் தொடங்கிவிட்டாள். என்ஜினியர் ஒருவரிடம் வீட்டு வேலை கொடுக் கப்பட்டது.அவரும் இளவயதுக்காரர் எண்டபடியால் பிரசாசின் ரசனைக் கேற்றால் போல் வீட்டினை வடிவமைத் தார். பிரகாசிடமும் அடிக்கடி தொடர்பு கொண்டு அவனது அபிப்பிராயங் களைக் கேட்டு வடிவமைத்தார். லண்டனில் உள்ள வீடு போன்றே உரு வாகியது. கேட்க கேட்க முகம் சுழிக் காமல் பணம் அனுப்பிக் கொண்டிருந் தான். வீட்டு வேலையை கவனிக்கத் தொடங்கியதிலிருந்து அனுவும் வேலைப் பளு காரணமாக பிரகாசுடன் கதைப்பது குறைந்துவிட்டது.

வீட்டு வேலைகள் முடிவுறும் தறுவா யில் இறுதி யுத்தமும் தொடங்கி விட்டதால் தொடர்புகள் முற்றாகவே துண்டிக்கப்பட்டன. மாதத்தில் ஓரிரு தடவை கதைப்பதே அபூர்வமாகி இறுதியில் அவளுடனான தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டது. மூன்று வருடங்கள் முற்றாக ஓடிவிட்டன. யுத்தமும் ஓய்ந்துவிட்டது. பிரகாசுக்கு விசாவும் கிடைக்கவில்லை. சரி போய் சொந்த இடத்திலேயாவது வசிப்போம் என்றுதான் இன்று இலங்கை வந்திருக்கிறான்.

எட்டு வருட பிரிவிற்கு பின் அவளை பார்க்கும் அந்த தருணங்களிற்கும் அவளிற்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கவும் ஒருவருக்கும் அறிவிக்காமல் வந்திருந்தான். அவன் யாழ்ப்பாணத்தை வந்தடையவும் சூரியன் நன்றாக உதித்து தனது பொன்னிறக் கதிர்களை நீட்டி சோம்பல் முறித்துக் கொண்டிருந்தான். ஒரு ஆட்டோவை பிடித்து தான் கட்டிய வீட்டை நோக்கி பயணமானான். அவனின் யோசனைப்படி கட்டிய வீடு, எத்தனையோ தடவை SKYPE ல் பார்த்த வீடென்பதால் பெரிய சிரமமில்லாமல் வீட்டைக் கண்டுபிடித்து விட்டான். ஆட்டோக் காரனுக்கு காசை குடுத்து அனுப்பிவிட்டு திரும்பியவன் அவன் வீட்டுவளவில் construction என்ற பெயர்ப் பலகையை கண்டு திடுக்கிட்டான். எதுவும் புரியவில்லை அவனுக்கு. ஒரு வேளை வீட்டை விற்றுவிட்டாளோ எண்டு எண்ணும் போது வீட்டில் இருந்து கார் ஒன்று வெளியேற மாடியிலிருந்து நிறைமாத கர்ப்பிணி ஒருத்தி இரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவ னுடன் நின்று கை அசைப்பதையும் கண்டான். காரில் போகிறவர் தானே எஞ்சினியர் அப்போ மேலே நிற்பது என்ற குழப்பத் துடன் கண்ணை கசக்கிக் கொண்டு பார்த்தவன் தலையில் இடியே விழுந்தது போலிருந்தது. அங்கே அனு குழந்தையுடனும் கர்ப்பிணியாகவும் நின்று கொண்டிருந்தாள்..

உலகே அவனுக்குத் தாறு மாறாய் சுழல்வது போலிருந்தது. மனதில் எரிமலை வெடித்து சிதறியது போலிருந்தது. இது எதுவும் அவள்து கண்களில் படவே இல்லை. அவளது கையில் இருந்த அந்த சிறுவன் காரில் செல்லும் தந்தைக்கு கை அசைத்து விட்டு அனு கையிலிருந்து இறங்கி மாடிப்படியை நோக்கி ஓடாதடா எண்ட குரல்கள் பிரகாசின் காதிலும் விழுகின் றது. கனத்த இதயத்துடன் வீதியின் குறுக்காக சென்றவனை எதிரே மணலுடன் வந்த டிப்பர் வாகனம் முத்தமிட்டு தூக்கி எறிய வீதியின் ஓரமாய் கசங்கிய குப்பையாய் போய் விழுந்தான் பிரகாஸ். அவனது கண்கள் மட்டும் மாடியில் நின்ற அனுவில் குத்திட்டு நிற்க அவனது உயிர் அநாதையாக வேறொரு உலகிற்கு பயணமாகின்றது.

**என்.கிருஷ்ணா**
**கல்வியங்காடு**




பிணவறையில் ஓரிரவு முழுவதும் துடித்துக் கொண்டிருந்தவனைக் காப்பாற்ற நாங்கள் பட்டபாடு எவ்வளவு வலியானது தெரியுமா? இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என பேசப்பேச கண்ணீர் பெரு கினாலும் உறுதி தொனிக்க பேசுகிறார் சிஷியின் அக்கா.மெலிதாக மூச்சு விட்டுக்கொண்டிருந்த சிஷியை மகாத்மா காந்தி நினைவு வைத்தியசாலைக்கு உடனடி யாகக் கொண்டு சென்று சேர்த்திருக்கிறார்கள்.

விபத்தினால் உயிர் பிரிவது உண்மை என்றாலும் படுகாயமடைந்தவுடன் முதல் ஒருமணி நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தால் சிஷியை பிழைக்க வைத்திருக்கலாம்.எங்களுக்கு கிடைத்தது மிகவும் குறைவான நேரமே.எனவே சிஷியைக் காப்பாற்ற முடியவில்லை.பிரியம் கொண்டவரின் இறப்பை நேரில் காண்பது வலிமிகுந்தது தான்.போஸ்ட்மார்ட்டம் முடிந்த பின் தான் ஒருவரின் இறப்பிற்கான காரணத்தை முடிவு செய்வார்கள்.ஆனால் இங்கு

இறந்துவிட்டார் என்று முடிவெடுத்தவர் திடீரென எழுந்து வந்தால் யாருக்குத்தான் உடல் குலைநடுக்கம் வராது? அதுவும் இறந்துவிட்டார் என முடிவெடுத்து பிணவறையின் படுக்கையில் வைத்து குளிர்சாதன அறையில் பக்குவமாக உள் தள்ளியபின் அவர் எழுந்தால் ஆறடி மனிதனும் பச்சாவ்! என 18 மொழியிலும் அலறுவது சகஜம் தானே! சம்பவ இடம் தென்னாபிரிக்கா.லைவ்வாகவியத்தைபார்ப்போமா?


கடந்த டிசெம்பர் 5 அன்று தென்னாபிரிக்கா வைச் சேர்ந்த சிஷி ஹிஸே (வயது-28) என்பவர் மோட்டார் சைக்கிள் சென்றபோது கார் மோதி விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார்.

அவரை சோதித்த வைத்தியர்கள் அடுத்த வேலையை பார்க்கும் பரபரப்பில் சிஷி இறந்துவிட்டார் என நானோ நொடியில் முடிவுசெய்து அவர்ரை வைத்தியசாலை யின் பிணவறைக்கு அனுப்பி வைத்து விட்டனர்.பிறகு இறந்தவரின் குடும்பத் திற்கு தகவல் கொடுத்ததும் ஓடி வந்தவர் களை பிணவறைக்கு அழைத்துச் சென்று காட்டியபோதுதான் அந்த அதிர்ச்சி சம்பவம் நடந்தது.பிணவறையில் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்த சிஷி ஹிஸே இறந்து போகவேயில்லை.

அவரது உடல் இளஞ்சூட்டோடு இருந்ததோடு அவருக்கு மெல்லியதாக மூச் சும் வந்து கொண்டிருந்தது.உடனே அவரை இறந்தார் என்று கூறிய வைத்தியர்களை சபித்த உற வுகள்.உடனடியாக அவரை வேறு வைத்திய சாலைக்கு கூட்டிச்சென்று காப்பாற்ற முயற்சி செய்தனர்.நோயாளியை முதலுதவி செய்து காப்பாற்றும் கோல்டன் ஹவரை தவறவிட்ட பின் என்ன செய்து என்ன பிரயோசனம்?

அதேதான் 5மணிநேரம் போராடிய வைத்தியர்கள் 24மணிநேரம் கழித்தல்ல.இன்னும் கொஞ்ச நேரம்தான் சிஷி தாங்குவார் என்று கைவிரித்துவிட குடும்பத்தினர் கண்முன்னே சிஷியின் உயிர்மெல்ல பிரிந்தது.சும்மா விடுவார்களா பாசப் பெற்றோர்? இதற்கு பொறுப்பேற்ற தென்னாபிரிக்க வாசுலு மருத்துவக் கழகம் சிஷி விபத்தில் சிக்கி இறப்பதற்கு முன்னரே அவர் இறந்தார் என்று சான்றிதழ் கொடுத்தவர்களைக் குறித்து விசாரணையில் ஈடுபட்டு வருகிறது.அதோடு கவனக்குறைவாக செயற்பட்ட வைத்திய உதவியாளர்கள் மற்றும் அதிகாரிகள் மீதும் சிஷியின் குடும்பத்தினர் கடும் அதிருப்தி குற்றச்சாட்டை கூறியுள்ளனர்.

விபத்தில் சிக்கிய என்மகனின் நிலையை எப்படி விபரிப்பது? விபத்துக்குள்ளாகி உயிரோடு இருந்தும் வைத்தியர்கள் கவனக்குறைவாக இறந்துவிட்டான் என முடிவெடுத்து முழு இரவும் பிணவறையின் குளிர்சாதனப் பெட்டியில் அவனை வைத்திருந்தது தான் பெரும் தவறு என நெஞ்சு தழுதழுக்க பேசுகிறார் சிஷியின் தந்தை பீட்டர். 8 மணிக்கு வைத்தியசாலைக்கு சென்று சிஷியின் இறந்த உடலை பெறுவதற்கான வேலைகளை முடித்துவிட்டு 12 மணிக்கு பிணவறையில் உடலை வாங்கச் செல்லும்போது சிஷி உயிரோடிருக்கிறார் என வைத்தியர் ஒருவர் தகவல் கூறியிருக்கிறார்.



அந்நாளை என்னால் மறக்கவே முடியாது என்கிறார் பீட்டர்கண்களில் நீர்நிறைய. முதுகு தடவி மடியில் போட்டு கன்னத்தில் திருஷ்டி முறித்து தாலாட்டியவர்களின் கண்முன்னே மகன் குற்றுயிராகத் துடித்து இறந்தால் மனம் தவித்துப் போகாதா?




எனது தம்பியை இறந்துவிட்டான் என்று சான்றிதழ் அளி த்தவரைக் குறித்து நாங்கள் அறியவேண்டும். இறந்தார் என முடிவு செய்யுமளவு அவர் தகுதியானவர் தானா என்றே எங்களுக்கு சந்தேகமுள்ளது.

அனைத்தும் தலைகீழாக நடந்துள்ளது என நடைமுறை யதார்த்தம் பேசி குடும்பத்தினரைத் தேற்றியிருக்கிறார் காந்தி நினைவு வைத்தியசாலை வைத்தியர் ரிஷி ஜென் விரானா. காப்பாற்றும் வாய்ப்பிருந்தும் கடமை தவறி உயிரைக் கைவிட்டு வைப்பதும் குற்றம் தானே?

---



ஜான் எஃப் கென்னடி | ஹெர்பெர்ட் ஹூவர் | ஜார்ஜ் வாஷிங்டன்

சர்ச்சையோ சங்கடமோ, ஜெயித்தது வெள்ளையர்களை தூக்கிப்பிடிக்கும் ட்ரம்ப் தான். ஜனாதிபதிக்கு ஊதியமாக வழங்கப்படும் 4 இலட்சம் டொலர்களை வேண்டாம் என்று அதிரடியாகக் கூறியவர்கள் ஆண்டிற்கு ஒரு டொலர் மட்டுமே சம்பளமாக பெறப்போகிறேன் என ஸ்டேட் மென்ட் அளித்துள்ளார். இந்த வரிசையில் ட்ரம்ப் ஒன்றும் முதல் ஆள் அல்ல. அந்த வரிசையில் உள்ள உலக நாடுகளின் ஜனாதிபதிகளைப் பார்ப்போம்.

**ஜான் எஃப் கென்னடி (1961-1963)**

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி. நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து 1947 ஆம் ஆண்டு அரசியலிக்கு வந்து பல்வேறு அறக்கட்டளைகள் மூலம் எக்கச்சக்கமாக பணம் குவிந்ததால் ஜனாதிபதி சம்பளம் சுண்டைக்காயாய் தோன்ற, அதனை அப்படியே சமூக சேவைக்கு திருப்பிவிடத் தொடங்கினார். ஜனாதியாவதற்கு முன்பிருந்தே இச் செயற்பாட்டை தொடங்கி விட்டார். ஜனாதிபதிகளிலேயே செல்வச் செழிப்பாக வாழ்ந்தவரும் இவர் தான்.

**ஹெர்பெர்ட் ஹூவர். (1929-1933)**

இவரும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி தான். தன்னைத் தானே செதுக்கிக் கொண்டு பணக்காரரான 31 ஆவது ஜனாதிபதி இவர். சம்பாதித்தது பூமிக்கு கீழிருந்துதான். அர்ப்பணிப்பாக ஈடுபட்ட சுரங்கத் தொழில் தான் இவரை கரன்சி மனிதராக்கியது. தனது ஜனாதிபதி பணிக்கான சம்பளத்தை பல்வேறு சேவைகளுக்கும் தனது ஊழியர்களுக்கும் பெருந்தன்மையாக வழங்கியவர். அதோடு அமெரிக்காவில் ஏற்பட்ட பஞ்ச காலத்தில் ஏழை மக்களுக்கு உணவளித்து வயிறு குளிர வைத்த பொன்மனச் செம்மலும் கூடத்தான்.

**ஜோஸ் முஜிகா(2010-2015)**

நம் மனம் உருக வைக்கும் எளிமை இனிமை கொண்ட உருகுவே ஜனாதிபதி. தனது சம்பளமான 12500 டொலர்களில் 90 சதவிகிதத்தை சமூகசேவைகளுக்கென தந்துவிடும் கர்ணகுணம் தான் இவரின் அடையாளமே. எளிய உடையில் அரசு விழாக்களில் பங்கேற்பவரின் கழுத்தில் டை இடம்பெறுவதே மிகவும் அரிது. அரசே இவருக்கு வீடு தந்தாலும், அதை மறுத்துவிட்டு மனைவியின் பண்ணை வீட்டில் தங்கியிருக்கும் பொதுநலவாதி. மனைவியோடு வயலிலும் இறங்கி வேலை செய்யத் தயங்காத ஆச்சரிய ஜனாதிபதி. என்னுடைய தேவைகளுக்கு 10 சதவிகித சம்பளமே போதும் என்கிற தங்க மனசு ஜனாதிபதியின் பேச்சே திகைக்க வைக்கிறது.

**ஜார்ஜ் வாஷிங்டன்(1789-1797)**

சம்பளத்தை முழுக்க மறுத்துவிட்டு பணி செய்த முதல் அமெரிக்க ஜனாதிபதி இவர் தான். சாதாரண எளிய பின்னணி கொண்ட மக்கள் ஜனாதிபதியாவதற்கு தன்னுடைய சம்பளம் வாங்காத கொள்கை தடையாகிவிடும் என நினைத்து தனது பணிக்கான சம்பளத்தை மாதம் முதல் திகதி பெறத் தொடங்கினார். ஜனாதிபதி பணிக்கான சம்பளத் தொகை 25 ஆயிரம் டொலர்களையும் சேவைக்கென வழங்கிய தாயுள்ளத்திற்கு சொந்தக்காரர்.


ஃபிராங்கோய்ஸ் ஹாலண்டே | ஜோஸ் முஜிகா

**ஃ பிராங்கோய்ஸ் ஹாலண்டே (2012-இன்று வரை)**

பிரான்ஸ் ஜனாதிபதியாக பதவியேற்றதும் அவர் கையெழுத்திட்ட முதல் கோப்பு அவருடைய சம்பளத்தை 30 சதவிகிதம் வெட்டும் ஆணைக்காகத் தான். முதலில் வாங்கிய சம்பளத்தை குறைக்கும் தற்போது இவர் பெறும் சம்பளம் 10 இலட்சத்து 51 ஆயிரத்து 886 ரூபாய்களாகும். பிரான்ஸ் நாட்டு சட்டப்படி ஜனாதிபதி பதவிக்காக வழங்கப் பட்டுவந்த சம்பளம் 15 இலட்சத்து 2 ஆயிரத்து 695 ரூபாய்கள். 2017 ஆம் ஆண்டோடு பிராங்கோய்ஸின் பதவிக்காலம் நிறைவடைகிறது.

# டெஸ்ட் போட்டிகளுக்கு குட்பை சொல்கிறாரா டிவில்லியர்ஸ்?

அதிரடிக்கு இன்னொரு பெயர் டிவில்லியர்ஸ். இவருக்கு 31 பந்தில் சதமடிக்கவும் தெரியும், 200 பந்துகளைச் சந்தித்து 31 ஓட்டங்கள் எடுக்கவும் தெரியும். தான் சார்ந்த அணிக்கு ஆட்டத்தின் போக்கைப் பொறுத்து எவ்வளவு ஓட்டங்கள் தேவையோ அதற்கேற்ப கியரை மாற்றி பட்டிங் செய்யும் வல்லமை இவருக்கு உண்டு. மூன்று வகையான கிரிக்கெட்டிலும் மிக்சிறப்பாக விளையாடக்கூடிய தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவர் டிவில்லியர்ஸ்.


தென்னாபிரிக்க அணியைச் சேர்ந்த டிவில்லியர்ஸ் கடந்த ஜூன் மாதத்துக்கு பிறகு சர்வதேச போட்டிகளில் காயம் காரணமாகவிளையாடவில்லை.

இந்தியா மற்றும் இங்கிலாந்து டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி தோற்றதால் ஹாஷிம் ஆம்லா தலைவர் பதவியில் இருந்து விலக, கடந்த ஆண்டு டெஸ்ட் தலைவர் பொறுப்பை ஏற்றார் டிவில்லியர்ஸ். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு பிறகு வேறு எந்த டெஸ்ட் தொடரையும் காயம் காரணமாக டிவில்லியர்ஸால் விளையாட முடியவில்லை. இதையடுத்து டிவில்லியர்ஸின் நீண்ட கால நண்பரும், தென்னாபிரிக்க அணியின் சீனியர் துடுப்பாட்டக்காரர்களில் ஒருவருமான ஃபாப்டு பிளசிஸ் டெஸ்ட் தலைவர் பொறுப்பை ஏற்றார்.

ஃபாப்டு பிளசிஸ் தலைமையில் நியூசிலாந்து தொடரை ஜெயித்தது தெனனாபிரிக்கா. அதன் பின்னர் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் மேற்கொண்டது. பட்டிங் சூப்பர் ஸ்டார் டிவில்லியர்ஸ், பவுலிங் சூப்பர் ஸ்டார் ஸ்டெயின் ஆகிய இரண்டு பேரும் காயம் காரணமாக அவதிப்பட்ட நிலையில் அவர்கள் இருவரும் இல்லாமலேயே அருமையாக விளையாடி டெஸ்ட் தொடரை ஜெயித்தது தென்னாபிரிக்கா. இதையடுத்து டுபிளசிஸ் தலைமை மீது எல்லோரது பார்வையும் திரும்பியது. இந் நிலையில் டிவில்லியர்ஸ் தாமே மனமுவந்து டெஸ்ட் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாகவும் டு பிளசிஸ் தான் தலைவர் பொறுப்புக்குச் சரியான நபர்என்றும் முன் மொழிந்தார். டிவில்லியர்ஸின் கோரிக்கையை ஏற்ற தென்னாபிரிக்கா கிரிக்கெட் வாரியம் ஃபாப்டு பிளசிஸை நிரந்தர டெஸ்ட்தலைவராக அறிவித்தது. இந் நிலையில், தற்போது உளளூரில் நடந்து வரும் இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மூன்றிலுமே அபாரமாக ஆடி, ஜெயித்திருக்கிறது தென்னாபிரிக்க அணி. இதையடுத்து ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் மூன்றாம் இடத்துக்கு முன்னேறியிருக்கிறது தென்னாபிரிக்க அணி.

கடந்த ஆண்டு ஐ.பி.எல் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னதாக அதிகம் கிரிக்கெட் ஆடிக்கொண்டே இருப்பதால் சோர்வு ஏற்படுவதாகவும், இதனால் ஏதாவ்து ஒரு ஃபார்மெட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிடலாமா? எனவும் தனக்கு நெருங்கிய நண்பர்களுடன் ஆலோசனை செய்திருக்கிறார் டிவில்லியர்ஸ், இது எப்படியோ மீடியாவில் வெளியாக, 'ஆம், ஆலோசனை செய்தது உண்மைதான், ஆனால் தற்போது ஓய்வு பெறவில்லை' என மறுத்தார் டிவில்லியர்ஸ். இந்நிலையில் இலங்கை டெஸ்ட் தொடர் முடிந்த பிறகு பத்திரிகையாளர்களிடம் டுபிளசிஸ் பேசுகையில், "ஒருதின தொடரில் டிவில்லியர்ஸ் தலைமையில் விளையாடுவதற்கு ஆவலுடன் காத்திருக்கிறோம். அவர் எங்களுக்காக டெஸ்ட் போட்டிகளிலும் ஆட வேண்டும் என்பதே எங்களது விருப்பம். ஒரு தலைவராக உலகின் தலை சிறந்த துடுப்பாட்டக்காரனை அணியில் வைத்திருக்கவேண்டும் என்பது எனது ஆசை" எனச் சொல்லியிருக்கிறார்.


தென்னாப்பிரிக்க அணியின் பயிற்சியாளர் ரசல்டொமிங்கோ பேசுகையில் "டிவில்லயர்ஸுடன் உட்கார்ந்து பேச வேண்டும், அவரது எண்ணம் என்ன.. அவரது எதிர்காலத் திட்டம் என்ன என்பன குறித்து விரிவாக பேச வேண்டும. ஓய்வு பெறுவதா, இல்லை தொடர்ந்து விளையாடுவதா? என்பதை டிவில்லியர்ஸ் தான் முடிவெடுக்க வேண்டும்" என கருத்து தெரிவித்திருக்கிறார்.




டிவில்லியர்ஸ் டெஸ்ட் போட்டிகளைக் காட்டிலும் லிமிட்டட் ஓவர்ஸ் கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார். தற்போதைக்கு தென்னாபிரிக்க அணியை சம்பியன்ஸ் டிராஃபியில் வழி நடத்தவும், 2019 உலகக்கோப்பையில் வழி நடத்தி கோப்பையை ஜெயித்து தருவதும் டிவில்லியர்ஸின் திட்டம். டிவில்லியர்ஸுக்கு இந்தியாவில் கோடிக் கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள், தென்னாபிரிக்காவுக்கு பிறகு அவர் சொந்த ஊரைப் போல கருதுவது பெங்களூரைத் தான். மேலும் ஐ.பி.எல் போட்டிகளில் ஆடுவதன் மூலம் பணப்பயன்களும் ஏராளம் என்பதால்ஐ.பி.எல்.போட்டிகளை எக்காரணம் கொண்டும் புறக்கணிக்க மாட்டார் எனத் தெரிகிறது.

அவுஸ்திரேலியாவின் பிக்பாஷ் லீக் போட்டிகளிலும் விளையாடுவதற்கு டிவில்லியர்ஸ் விருப்பம் தெரிவித்திருக்கிறார். உலகம் முழுவதும் பல்வேறு இருபது-20 லீக் போட்டிகளில் ஆடினால், வருடத்தின் பாதி நாட்கள் தென்னாபிரிக்க அணியுடன் நேரம் செலவிட முடியாது. இதனால் டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்த முடியாது. மேலும் தற்போது தென்னாபிரிக்க டெஸ்ட் அணிக்குள் டிவில்லியர்ஸ் வந்தால், நன்றாக விளையாடிக் கொண்டிருக்கும் டுமினி வழிவிட வேண்டியதிருக்கும் எனபதால் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓய்வு பெறுவது குறித்த விடயங்கள் டிவில்லியர்ஸ் மனதில் ஓடிக்கொண்டிருக்கின்றன, அவர் விரைவில் டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு குறித்த அறிவிப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கலாம். (க)

# கைதி மரம்




பாகிஸ்தான் நாட்டின் லண்டி கோட்டல் மாவட்டத்தில் இருக்கும் ராணுவ முகாமில் 118 ஆண்டுகளாக ஒரு மரம் சிறைபிடிக்கப்பட்டுள்ளது.

“மனுஷப் பயலுகளை வாட்டி வதைக்கிறது போதாதுன்னு இது வேறையா?” என விசாரித்தால், ரணகளமான காரணத்தை அள்ளிப்போடுகிறார்கள். இங்கே இருந்த ஜேம்ஸ் ஸ்குவிட் என்னும் பிரிட்டிஷ்காரர் ஒருமுறை போதையில் இருந்தபோது, இந்த மரம் தன்னை நோக்கி வளர்ந்து வருவதாகக் கோபப்பட்டு, மரத்தைக் கைது செய்ய உத்தரவிட்டாராம்.

அப்போது சங்கிலியால் சிறைபிடிக்கப்பட்ட இந்த, மரம் பிரிட்டிஷ்காரர்கள் பாகிஸ்தானுக்கு விடுதலை அளித்த பின்பும் இன்னும் கைதியாகவே இருக்கிறது.

சூழ்நிலைக்கைதி போல..!

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்:- சந்ரோதயம்
பாடல் :- வாலி
பாடியவர்கள்:- பி.சுசீலா
இசை:- எம்.எஸ்.வி.



கெட்டிமேளம் கொட்டுற கல்யாணம்
தங்கத்தாலி கட்டுற கல்யாணம்
பூவிலங்கு மாட்டுற கல்யாணம்
என்ன கல்யாணமடி கல்யாணம்
உங்கள் கல்யாணமடி கல்யாணம்

வெத்தலை பாக்கு வைச்சு அதிலே ஊரை வரவழைச்சு
குத்துவிளக்கு வைச்சு நடுவே கோலம் வரைஞ்சு வைச்சு
மாவிலைப் பந்தலில்
மாப்பிள்ளைப் பையன் மாலையிடுவானாம்
வண்ணச் சேலை அணிந்தவள்
மாலை கொடுத்தவன் காலைத் தொடுவாளாம்
இந்த ஏமாளிக்கும் கோமாளிக்கும்
கல்யாணமாம் கல்யாணம்
என்ன கல்யாணமடி கல்யாணம்
உங்கள் கல்யாணமடி கல்யாணம்

மஞ்சளைப் பூசிக்கிட்டு காலிலே மிஞ்சி அணிஞ்சுக்கிட்டு
அஞ்சி நடந்துக்கிட்டு மாமியார் சொன்னதைக் கேட்டுக்கிட்டு
வீட்டுச் சிறையிலே கூட்டுக்கிளியென
பெண்ணுமிருப்பாளாம் அவள் கண்ணும் கலங்கிட
கட்டிய புருசன் ஆட்டிப் படைப்பானாம்
அந்தக் கோணங்கிக்கும் பூங்கொடிக்கும்
கல்யாணமாம் கல்யாணம்
என்ன கல்யாணமடி கல்யாணம்
உங்கள் கல்யாணமடி கல்யாணம்

பட்டுச் சிறகடிக்கும் நானொரு சிட்டுக் குருவியடி
கட்டுக் கடங்காமல் மலையில் கொட்டும் அருவியடி
பாடிப்பறக்கவும் ஆடித்திரியவும் ஆசைபிறக்குமடி
அந்தி மாலை அழகிலும் சோலை அழகிலும்
இன்பம் பிறக்குமடி
வண்ண மயில்களுக்கும் மந்திகளுக்கும்
கல்யாணமாம் கல்யாணம்
என்ன கல்யாணமடி கல்யாணம்
உங்கள் கல்யாணமடி கல்யாணம்

# கனவுகளும் பலன்களும்



அந்தப் பெண்ணுக்கு இப்போது அவர்கள் வீட்டில் மாப்பிள்ளை பார்த்துக் கொண்டு இருக்கலாம்.ஆனால் திருமணத்தில் ஏதோ ஒரு ஆபத்து ஒளிந்திருக்கிறது.ஆகவே இப்போது திருமணம் வேண்டாம் என்று உள்மனம் கூறுகிறது.ஒரு ஆபத்திலிருந்து அந்தப் பெண்ணை காப்பாற்ற பார்க்கிறது.ஆகவே அந்தப் பெண் இப்போது திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதே நல்லது.காதல் வயப்படாத பெண்ணாய் இருந்தால் எந்த காதல் வலையிலும் சிக்காமல் இருப்பது நல்லது. ஒரு ஆறுமாத காலம் பொறுங்கள்.பின் இது மாதிரி கனவு வருகிறதா என பாருங்கள். அப்படி எதுவும் வரவில்லை என்றால் அப்போது திருமணம் பற்றி யோசிக்கலாம்.

**கனவில் தேவர்கள் வந்தால்...**

கனவில் கோயிலைக் கண்டால் ·நூதனமான தொழில் விருத்தியாகும்.செல்வமும் செல்வாக்கும் பெருகும். ஆனால் பாழடைந்த கோயிலைக் கனவில் கண்டால் எதிலும் தோல்வியும் நட்டமும் ஏற்படும்.கோயிலுக்குள் நுழைந்து கடவுளைத் தரிசிப்பது போலக் கனவு கண்டால் தொல்லைகள் ஏற்பட்டு விலகும். வாழ்வு வளம் பெறும்.

திருநீறு அணிவதாகவோ அல்லது பிறரிடமிருந்து பெறுவதாகவோ கனவு கண்டால் நற்பலன்கள் உண்டாகும். ஆனால் திருநீறு தவறுவதாகவோ அல்லது சிந்துவதாகவோ கனவு கண்டால் பல விதத் தொல்லைகளும் நோய்களும் ஏற்படும்.ஆருடம் கேட்பதாகவோ அல்லது ஜோதிடம் பார்ப்பதாகவோ கனவு கண்டால் எத்தகைய பலன் சொல்லப்பட்டதோ அது நடக்கும்.

கனவில் பேய்களைக் கண்டால் வாழ்க்கையில் தொல்லைகள் உண்டாகும்.எடுத்த காரியம் தோல்வி அடையும்.

கோயில் தேரைக் கனவில் கண்டால் உறவினர்களுடன் உள்ள பகைமை நீங்கும். கோயில் தேரை தரிசிப்பது போலக் கனவு கண்டால் தடைப்பட்ட காரியம் வெற்றி கரமாக முடியும்.

கடவுள் சிலை மண்ணில் புதைந்து கிடப்பதாகக் கனவு கண்டால் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் நல்லது நடக்கும்.கோயில் உற்சவர் புறப்பாடு செய்யப்பட்டு வரும் காட்சியைக் கனவில் கண்டால் புகழும் பதவியும் கிடைக்கும்.

விநாயகரைக் கனவில் கண்டால் எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மகாவிஷ்ணுவைக் கனவில் கண்டால் துன்பங்கள் நீங்கும். எதிரிகள் பலம் இழப்பர்.

யேசுநாதரைக் கனவில் கண்டால் புகழ் உண்டாகும். யேசுநாதரை சிலுவையில் அறைவது போலக் கனவு கண்டால் துன்பம் வந்து அதுவே நன்மையாக மாறும்.

கோயில் மணி அடிப்பது போலக் கனவு கண்டால் நல்ல செய்திகள் வரும்.பொருள் வரவும் காரியத்தில் வெற்றியும் ஏற்படும்.கோயில்மணி ஒழுங்கற்ற முறையில் அடித்தால் பொருள் நட்டமும் இடையூறுகளும் உண்டாகும்.

திருப்பதி ஏழுமலையானைக் கனவில் கண்டால் செல்வம் பெருகும். ஐயனாரைக் கனவில் கண்டால் சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்.

நவக்கிரகங்களைக் கனவில் கண்டால் அன்றே கோயிலுக்குச் சென்று நவக்கிரகங்களைச் சுற்றி வந்து பரிகாரம் செய்ய வேண்டும். இல்லையெனில் கெடுதல்கள் ஏற்படும்.

**கணவனுக்கு திருமணம் ஆவது போல் கனவு வந்தால்...**

இது மாதிரி கனவுகள் எல்லாமே ஃப்ராய்டியன் பதிவுகளின் படி ஒரு வகை இன்செக்யூரிடி ஃபீலிங்க் தான். சுய நம்பிக்கையின்மையே இந்த வகை கனவுகளில் பிரதிபலிக்கிறது.உடனே வாசகியின் கணவர் இன்னொரு திருமணம் செய்து கொள்வார் எனப் பயப்பட வேண்டாம். உங்கள் இன்செல்யூரிடி ஃபீலிங்க் இவ்வாறு வெளிப்பட்டிருக்கிறது.அவ்வளவே!

ஆனால் இந்த கனவுகளில் அடிக்கோடிட்ட சில தகவல்கள் என்ன? இப்போது நாம் பார்ப்போம்.

முதலில் என் கணவர் ஏன் இந்தக் கனவில் வர வேண்டும்? காரணம் வாசகியின் மனதில் கணவரைப் பற்றிய அன்பு அதிகம் இருக்கின்றது. வாசகி தன் உலகமே கணவன் தான் என நம்பியிருக்கிறார்.வாசகி தனக்கு குழந்தை இருக்கிறதா என குறிப்பிடவில்லை.

ஆனால் நாம் யூகிப்பது என்னவென்றால் குழந்தை இன்னும் பிறக்காமலிருக்கலாம். அந்தக் கவலை கூட இப்படி கனவின் வழி பிரதிபலித்திருக்கலாம்.

(அடுத்த வாரம் தொடரும்)

# கோடிட்ட இடங்களை நிரப்புக



விீத்தியாசம், வித்தியாசம் அனைத்திலும் வித்தியாசம் என ரசிகர்களை கவர்பவர் தான் பார்த்தீபன்.

அவர் எண்ணம் போலவே தான் படைப்பும் வெளிவரும். அப்படி நீண்ட நாள் காத்திருப்பிற்கு பிறகு வெளிவந்துள்ள படம் தான் இந்த கோடிட்ட இடங்களை நிரப்புக. காத்திருப்பின் பலன் கிடைத்ததா? பார்ப்போம்.

சாந்தனு ஒரு நிலத்தை வாங்குவதற்கு வெளிநாட்டிலிருந்து தமிழகம் வருகிறார். அங்கு தன்னிடம் ஒரு இடம் உள்ளதாக கூறி பார்த்தீபன் தன் வீட்டிலேயே தங்க வைக்கின்றார்.

சாந்தனுவும் வீட்டு சாப்பாடு பிடிக்கும் என்பதால் தங்க சம்மதிக்கின்றார்.

அங்கு பார்த்தீபனின் மனைவியாக பார்வதி நாயர் இருக்க, சாந்தனு மனது கொஞ்சம் தடுமாறுகின்றது. இதைத் தொடர்ந்து அவர்களுக்குள் காதல் மலர, அது ஊடலாகவே மாறுகின்றது.

அந்த இடத்தை சாந்தனு வாங்கினாரா? பார்வதி நாயர்-சாந்தனு உறவு பார்த்தீபனுக்கு தெரிந்ததா? என்பதை யாருமே யூகிக்க முடியாதபடி அடுத்தடுத்த காட்சிகளாக திரைக்கதையை கொண்டு செல்கின்றார் பார்த்தீபன். (படத்தின் கதையை இன்னும் ஒரு அடி மேலே சொன்னாலும் பல டுவிஸ்டுகள் உடைந்துவிடும்.)

பார்த்தீபன் ஒரு பேட்டியில் கூறினார். நீங்கள் ஒன்று யோசிப்பீர்கள், சில நேரம் கழித்து இது இல்லை, இது தான் கிளைமேக்ஸ் என்பீர்கள். இந்த அனைத்து எண்ணங்களையும் உடைக்கும் இந்த படத்தின் கிளைமேக்ஸ் என்றார். அதை 100% அப்படியே நிகழ்த்திவிட்டார்.

முடிந்த அளவிற்கு யாரிடமும் கிளைமேக்ஸை கேட்காமல் படத்திற்கு செல்லுங்கள்.

சாந்தனு நீண்ட வருடங்களாக ஒரு ஹிட்டிற்காக காத்திருக்கின்றார். இந்த படம் மிகப்பெரிய ஹிட் அடிக்குமா? என்பது அடுத்த கதை. ஆனால், சாந்தனுவிற்கு ஒரு நல்ல பெயரை வாங்கித்தரும், அவரின் திரைப்பயணத்தில் ஒரு மறக்க முடியாத படமாக இருக்கும்.



பார்வதி நாயர் இயல்பிலேயே மலையாளி என்பதால் படத்தின் கதாபாத்திரம் ஒன்றில் நடித்துள்ளார். தம்பி ராமையா வழக்கம் போல் பார்த்து பழகி போன ஜேனரிலேயே வந்து செல்கின்றார்.

பார்த்தீபன் இயக்குநர். நடிகர் என்று இரண்டு குதிரையில் சவாரி செய்கின்றார். அவருக்கு இதெல்லாம் கைவந்த கலை தான். நன்றாக செய்துள்ளார். அதிலும் பார்த்தீபன் டச் படம் முழுவதும் வந்துக் கொண்டே இருக்கின்றது. சாந்தனு





கையில் இருக்கும் போது கீழே விழும் போது **Break** என இடைவேளை விடுவது பார்த்தீபனின் அக்மார்க் நக்கல்.

ஆனால், இடைவேளைக்கு பிறகு படம் கொஞ்சம் வேகம் குறைகின்றது. அதை கொஞ்சம் கவனித்திருக்கலாம், சத்யாவின் பின்னணி இசை, அந்த குத்து பாடல் என ரசிக்க வைக்கின்றார், அதிலும் சாந்தனுவின் ஆட்டம் செம்ம கொண்டாட்டம். அர்ஜுன் ஜெனா ஒளிப்பதிவும் மிகவும் லைவ்வாக உள்ளது.



படத்தின் கதைக்களம், அதை கொண்டு சென்ற விதம். பார்த்தீபனின் சிம்பாளிக் காட்சிகள்.

படத்தின் கிளைமேக்ஸ் மற்றும் வசனங்கள். இடைவேளைக்கு பிறகு கொஞ்சம் சோர்வடையும் திரைக்கதை. இன்னும் எளிமையாக சில விடயங்களை சொல்லியிருக்கலாமே? என கேட்க வைக்கின்றது. மொத்தத்தில் கண்டிப்பாக கோடிட்ட இடங்களை ரசிகர்கள் நிரப்பலாம்.





## ஜல்லிக்கட்டுக்காக வரலாறு காணாத எழுச்சிப் போராட்டம்

## 25 இலட்சம் பேர் திரண்டதால்

# ஸ்தம்பித்தது தமிழகம்

ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கோரி 25 இலட்சத்துக்கும் அதிகமானோர் அணி திரண்டு போராட்டம் நடத்தியதால் ஒட்டு மொத்த தமிழகமும் ஸ்தம்பித்தது.

ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி உடனடியாக வாடிவாசலை திறக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சென்னை மெரினா கடற்கரையில் கடந்த 17ஆம் திகதி ஆயிரம் மாணவர்கள், இளைஞர்களுடன் தொடங்கிய போராட்டம் 18 ஆம் திகதி 50 ஆயிரம் பேர் பங்கேற்ற மிகப்பெரிய எழுச்சிப் போராட்டமாக மாறியது.

இந்நிலையில், ஜல்லிக்கட்டு போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டன. பள்ளி, கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டன. 25 இலட்சத்துக்கும் அதிகமானோர் மெரினா கடற்கரையில் திரண்டனர். சென்னை மாநகரில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம் அலைமோதியது. ஆயிரக்கணக்கான இடங்களில் பொதுமக்களும், இளைஞர்களும் திரண்டு போராட்டம் நடத்தினர். இதனால் சென்னை மாநகரம் முழுவதும் ஸ்தம்பித்தது. சென்னை மட்டுமல்லாது தமிழகம் முழுவதும் போராட்டங்கள் தொடர்ந்தன.

### கோவை, திருப்பூர், நீலகிரி

கோவை வ.உ.சி. மைதானத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், இளைஞர்கள் திரண்டு போராட்டம் நடத்தினர். மாவட்டம் முழுவதும் 50 இற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டங்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

திருப்பூர் மாநகராட்சி காந்தி சிலை அருகே நடைபெற்ற போராட்டத்தில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், பின்னலாடை நிறுவனத் தொழிலாளர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர். மாவட்டம் முழுவதும் நடைபெற்ற போராட்டங்களில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் பங்கேற்றனர். நீலகிரி மாவட்டத்தில் 15 இற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற போராட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

### சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி

சேலத்தில் சிறை பிடிக்கப்பட்டுள்ள புகையிரதம் மீது அமர்ந்து 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சேலம் மாநகரில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் அவர்களின் பெற்றோரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் போக்குவரத்து முடங்கி நகரம் ஸ்தம்பித்துள்ளது. மாவட்டம் முழுவதும் 50 ஆயிரம் பேர் போராட்டத்தில் இருக்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். கர்நாடகா வாழ் தமிழர்களில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஓசூர் வந்து மக்களுடன் தர்ணாவில் ஈடுபட்டனர். தருமபுரி மாவட்டத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### வேலூர், திருவண்ணாமலை

வேலூர் பழைய பேரூந்து நிலையத்தில் தொடர்ந்து மூன்றாவது நாளாக கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்டம் முழுவதும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் 73 இடங்களில் நடைபெற்ற போராட்டங்களில் 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

### நெல்லை, தூத்துக்குடி

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் நேற்று முன்தினம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியரும், இளைஞர்களும் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தூத்துக்குடியில் எஸ்.ஏ.வி. மைதானத்தில் நேற்று முன்தினம் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர், இளைஞர்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தூத்துக்குடி மாவட்டம் முழுக்க 36 இடங்களில் இதுபோன்ற போராட்டங்கள் நடைபெற்றன.

நாகர்கோவிலில் அண்ணா விளையாட்டரங்கம் முன் நேற்று முன்தினம் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளை ஞர்களும், மாணவ, மாணவிகளும் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கன்னியாகுமரியில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்லவில்லை. பெருமாள்புரம் இலங்கை அகதிகள் முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

### மதுரை

பொங்கல் பண்டிகைக்கு மறுநாள் கடந்த 16 ஆம் திகதி வாடிவாசலில் காளைகளை திறந்துவிட மறுத்ததால் அலங்காநல்லூரில் தொடக்கப்புள்ளியாக தொடங்கிய ஜல்லிக்கட்டுப் போராட்டத்துக்கு இன்று தமிழகமே குரல் கொடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அலங்காநல்லூர் மக்கள், இளைஞர்கள், மாணவர்கள் தொடர்ந்து 120 மணி நேரமாக வாடிவாசல் சாலையில் மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

மதுரை, அலங்காநல்லூரில் நடந்த போராட்டங்களில் நேற்றும் பல்லாயிரம் பேர் திரண்டனர். மதுரை தமுக்கம் திரில் குவிந்த இளைஞர்கள், மாணவர்களால் அப்பகுதியே ஸ்தம்பித்தது. மதுரை மாநகர், அலங்காநல்லூரில் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர். விருதுநகர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 500 இற்கும் மேற்பட்ட இடங்களில் நடந்த போராட்டங்களில் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

### திருச்சி

திருச்சி நீதிமன்றம் அருகே நேற்று இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் சாலைகளில் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். 71 இடங்களில் நடைபெற்ற போராட்டங்களில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடைபெற்ற போராட்டங்களில் சுமார் இரண்டரை இலட்சம் பேர் பங்கேற்றனர்.

### புதுச்சேரியில் பந்த் வெற்றி

புதுச்சேரியில் 15 இற்கும் அதிகமான இடங்களில் நடைபெற்ற போராட்டங்களில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

பிரமாண்ட மாட்டின் உருவத் தினுள் மனிதர்கள் இருப்பதுபோல் புது வகையான போராட்டம் நடத்தினர். புதுச்சேரி புகையிரத நிலையத்தில் மாண வர்கள் புகையிரத மறியலில் ஈடுபட்டனர். பந்த் போராட்டமும் முழு அளவில் புதுச்சேரியில் நடந்தது.

கடலூர் மாவட்டத்தில் 67 இடங்களில் ஜல்லிக்கட்டுக்கு ஆதர வாக போராட்டங்கள் நடைபெற்றன. 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற் றனர்.

தமிழன்டா

# facebook

# தமிழும் பாரதியும்



தமிழில் பாரதியும், பாரதியின் தமிழும் எப்போதுமே அழகு. எனக் குத் தெரிந்த உலகின் மிக அழகான இரு பெயர்கள் தமிழும், பாரதியும் தான். இந்த அழகான பெயர்கள் தான் என் கதையின் இரு குட்டி மனிதர்களுக்கும்.

என் கதையின் இந்த சுட்டிகளை நீங்கள் நன்றாக அறிவீர்கள். தமிழும், பாரதியும் உங்களுக்கு மிகவும் பரீட்சயமானவர்கள் தான் . இந்த சிறு மனிதர்கள் யாரென்று ஞாபகம் வருகிறதா ?

ஆம், ஆம் அவர்கள்... அவர்களே தான். அதே... அதே ... அழுக குச்சட்டைக்கு சொந்தக்காரர்கள்.

அந்த செம்பட்டை முடி , கருத்த தேகம், நலிந்த உடல் வாகு... இவர்களுக்கே உரியது தான் .

"அக்கா பசிக்குதுக்கா காசு கொடுக்கா" என்றபரிதாபத்திற்குரிய பாடலின் இசையமைப்பாளர்கள்... இவர்கள் தான். உங்கள் விரைவான பயணங் களில் , சில விநாடி நிறுத் தங் களில் உங் களிடம் யாசகம் கேட்டு நீளும் கரங்கள்... இவர்களுடையது தான்.

இந்த சின்ன சிறார்களின் பசி போக்க தான் சிக்னல்கள் அமைக் கப்பட்டிருக்கின்றன போலும்.

இவர் களின் பசி போக்க காரணமாகும் போது, சிக்னல்களின் சிவப்பு விளக்கு கள் புனிதம் பெறுகின்றன.

ஆம், தமிழும், பாரதியும் அந்த ரோட்டோரத்தில் தான் வசிக்கிறார்கள். ரோட்டோரத்து குழந்தைகள் பெயரா தமிழும், பாரதியும் என கேட்கிறீர்களா? இருந்துவிட்டு போகட்டுமே... தமிழும் , பாரதியும் கோபப்படவா போகிறார்கள் ?

தமிழை விட பாரதி சற்று சிறியவன். இருவரும் அக்கா தம்பியாக கூட இருக்கலாம். தமிழின் கை பிடித்துக்கொண்டோ, தமிழின் பின்னால் ஓடிக் கொண்டோ பாரதி மக்களிடம் காசு கேட்பது வழக்கம் . சில நல்ல மனங்களால் ஒரு நாளில் , ஒரு வேளையாவது இவர்களிடமிருந்து பசி தாற்காலிக விடை பெறும். அவர்கள் அடித்துக் கொள்வார்கள். சண்டை போட்டுக் கொள்வார்கள். ஆனாலும், சேர்ந்தே இருப்பார்கள் .

கொஞ்ச ஆளில்லாத இவர் களின் மழலைகளை கேட்க , இரவு நேரங்களில் ஈரக்காற்று எங்கிருந் தாலும் ஓடி வந்து இவர்கள் தேகங் களில் தங்கிக் கொள்ளும் . இவர்கள் உடலில் அமர்ந்து தான், கொசுக்கள் தங்கள் அடுத்த நாளைக்கான திட்டங்களை அமைக்கின்றன.

ஒரு நாள் , அந்த துணிக்கடையில் நல்ல கொழுக் - மொழுக் அமுல் பேபி ஒன்றிடம் எல்லோரும் கொஞ்சிக் கொண்டிருப்பதையும், முத்தம் கேட்டுக் கொண்டிருப் பதையும், முத்தம் கொடுத்து கொண்டிருப்பதையும் வாசலில் நின்றவாறே பாரதி பார்த்தான் . தன் கன்னத்தை வலது கையால் மெல்ல தடவினாள். பின், அங்கிருந்து நகன்றான் .

தனக்காகவும் , தன்னை நம்பியிருக்கும் கொசுக்களுக்காகவும் கிடைத்ததை உண்டனர். இருவரும் அந்த மௌனத்தை கலைத் துக் கொண்டு பாரதி தமிழிடம் கேட்டான் , நம்ம கிட்ட ஏன் யாரும் முத்தம் கேட்க மாட்டைக்காங்க ".

டக்கென்று தமிழ் சொன்னாள் , "ஏனா நம்ம பிச்சைக்காரங்க".

"அதனால ..." முத்தம் படாத இடத்தில் கண்ணீர் வடிய கேட்டான் பாரதி.

"அதனால ... ஒண்ணுமில்ல . சரி , நான் கேட்கிறேன் . எனக்கு ஒரு முத்தம் தாயேன் ". என்றாள் தமிழ் . கேட்டது தான் தாமதம் . தமிழை கட்டி அணைத்து முத்தமிட்டான் பாரதி. பாரதியை முத்தமிட்டாள் தமிழ் .

சில நிமிட மௌனங்களுக்குப் பிறகு , பாரதியிடம் தமிழ் கேட்டாள், "ஓய், நாம ஸ்கூலுக்கு போலாமா "?

"அங்க இருக்குறவுங்க நமக்கு கேட்டவுடனே காசு தருவாங்களா" ? இது பாரதியின் கேள்வி . "

"இல்ல .. நாம படிக்கலாமா " ? இது தமிழ் .

"படிக்கவா .. எதுக்கு"? இது பாரதியின் சந்தேகம் . "நாம இன்னைக்கு காலையில - அந்த பழக்கடை கிட்ட பிச்சை எடுத்துட்டு இருந்தோம்ல . அப்ப ஒரு ஆச்சி ஒரு சின்ன பையன் கிட்ட சொன்னாங்கல்ல நல்லா படிக்கணும். நல்லா படிச்சா வேலை கிடைக்கும். வேலை கிடைச்சா காசு கிடைக்கும் . அப்புறம் என்ன வேணாம் வாங்கலாம் . நம்மளும் படிச்சி , வேலைக்கு போயி , காசு கிடைச்சா ஒரு அம்மா அப்பா வாங்கலாம்ல . அம்மா , அப்பா இருந்தா மிட்டாய் கிடைக்கும் . சாப்பாடு கிடைக்கும். கலர் கலரா சட்ட கிடைக்கும் . முத்தம் கூட கிடைக்கும் . " இது தமிழின் பதில் . "முத்தமுமா " ? இது பாரதியின் ஆசை கேள்வி .

"ஆமா . உனக்கொரு அம்மா அப்பா, எனக்கொரு அம்மா அப்பா. நமக்கு தனியா வீடு கூட கிடைக்கும்", தமிழின் எதிர் காலக் கணக்கு .

" நீ வேற வீட்டில , நான் வேற வீட்டிலையா ? அப்ப எனக்கு அம்மா அப்பாவே வேணாம்" , இது பாரதியின் கோபம் .

"சரி . அப்ப நாம ரெண்டு பேரும் ஒரே ஒரு அம்மா அப்பாவை வாங்கலாம் . ரெண்டு பேரும் ஒரே வீட்டில இருக்கலாம். சரியா?" இது தமிழ் .

அசடு கலந்த புன்னகையோடு "சரி" என்றான் தமிழ் .

ஸ்கூல் பற்றிய சிந்தனைகளோடும் , அம்மா அப்பா பற்றிய கனவுகளோடும் பசி ஆக்கிரமித்திருந்த இடங்களை சந்தோசம் நிரப்ப , அன்றிரவு கண் அயர்ந்தன அந்த மலர்கள் .

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 965




### தர்சிகா




### சிந்து




### சர்மிளா




### தினேசன்




### குகதர்சன்




### முகந்திநி

உன் கவலைகளை ஆண்டவனிடம் மட்டுமே சொல்லி அழு

ஏனெனில் அவர் மட்டும்தான் அதை யாரிடமும் சொல்லி சந்தோசப்படமாட்டார்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 69

## சுத்தமான பாதுகாப்பான உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமாகவாழ்வோம்



- எமது சுற்றுப்புறத்தில் நோய்களை உருவாக்கக் கூடிய சில நுண்ணங்கிகள் காணப்படுகின்றன.

- நுண்ணங்களினால் உணவு பழுதடைந்தால் அவை உணவின் தரத்தை குறைப்பதுடன் உணவு நஞ்சாவதற்கும் காரணமாகின்றது.

- உணவின் தோற்றத்தை சிலநுண்ணங்கிகள் மாற்றிவிடுகின்றன.

- உணவின் தரம் குறைவடைவதை நிறம், சுவை மற்றும் உணவின் உள்ளடக்கம் போன்றவற்றில் மாற்றம் ஏற்படுவதை வைத்து இலகுவில் அடையாளம் காணலாம்.

- எல்லா சந்தர்ப்பத்திலும் உணவு பழுதடைந்துள்ளது என்பதை சுவை, மணம் மற்றும் தோற்றம் போன்றவற்றைமட்டும் வைத்து கூற முடியாது.

அத்துடன் அவை நோய்களை உருவாக்குமோ உருவாக்காதோ என்பதையும் கூற முடியாது.

எனவே சுத்தமான பாதுகாப்பான உணவுகளை உட்கொள்வதற்குநாம் முயற்சிக்கவேண்டும்.

### சுத்தமான உணவை எவ்வாறு தயாரிப்பது

- எப்பொழுதும் சமையலறையும் சுற்றுப்புறமும் துப்புரவாக இருக்கவேண்டும். அத்துடன் செல்லப் பிராணிகள் பூச்சிகள் மற்றும் கொறித்துத் தின்னும் பிராணி கள் இல்லாது இருக்கவேண்டும்.

- நோய்களை உருவாக்குகின்ற நோய்க் கிருமிகள் உற்பத்தியாவதற்கும் பெருகுவதற்கும் காரணமான ஈக்கள் மற்றும் ஏனைய பூச்சிகள் வராதவகையிலும் சமையலறைக் கழிவுகளை ஒழுங்காக வெளியேற்றவேண்டும்.





- எல்லாமேற்பரப்புக்கள் சுத்தம் செய்யும் துணிகள் பாத்திரங்கள் விசேடமாக வெட்டும் பலகைகள் மற்றும் கத்திகள் போன்றவற்றை பாவித்தபின் நன்றாக சுத்தம் செய்யவேண்டும். மீன், கோழி இறைச்சி மற்றும் இறைச்சிகள் போன்றவற்றை தயாரிக்கும் போதுமிகவும் துப்புரவாக இருப்பது முக்கியமானதாகும்.


- உணவுகளை தயாரிப்பவர்கள் சுத்தமான ஆடைகளை அணிந்திருத்தல் வேண்டும் மற்றும் காயங்கள், சீழ்புண்கள் இல்லாமல் இருத்தல் வேண்டும். நகங்களை குட்டையாக வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.


- உணவுகளை தயாரிப்பதற்கு முன்பு உண்பதற்கு முன்பு கைகளை சவர்க்காரமிட்டு நன்றாக கழுவுதல் வேண்டும்.

- மலசலகூடப் பாவனையின் பின்னர் கைகளை சவர்க்காரம் இட்டு தண்ணீரினால் நன்றாக கழுவுதல் வேண்டும்.

- சமைத்த பாத்திரங்களை நன்றாக கழுவிக் காயவைக்க வேண்டும். ஏனெனில் கிருமிகள் ஈரலிப்பில் வளரக் கூடியவை. மட்பாண்டங்களை நன்றாக காயவைக்க வேண்டும். இல்லையேல் பங்கசுக்கள் வள்ர்வதுடன் அடுத்தவேளை உணவுகளை இந்த பாத்திரங்களில் தயாரிக்கும் போது உணவுகள் பழுதடையக் கூடும்.

## ஈரலில் கொழுப்புப் படிவு (Fatty Liver)






ஈரல் கொழுப்பு படிவு நிலையினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது ஒரு சுகாதார பிரச்சினையாக அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறது.


இதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்காதவிடத்து ஈரல் பாதிப்புநிலை மட்டுமல்ல இருதயம் இரத்தக்குழாய்கள் சம்பந்தமான பாதிப்புக்களும் ஏற்படக் கூடும்.

இந்த நிலை பொதுவாக போதிய உடற்பயிற்சி இன்மை, உடல் நிறை அதிகரிப்பு, குடிவகை பாவனை, ஆரோக்கியமற்ற உணவுப் பாவனை போன்ற காரணங்களினால் ஏற்படுகிறது.

இந்த நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஒழுங்கான உடற்பயிற்சி, உணவிலே அதிகளவு இலைவகைகளையும் நார்த்தன்மையான உணவுகளையும் சேர்த்தல், குடி வகைகள், சோடாவகைகளை தவிர்த்தல், உடல்நிறையை சரியான அளவில் பேணுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

ஈரல் கொழுப்பு படிவு நிலையினால் பாதிக்கப்பட்டவர்களும் மேற்கூறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அந்த நிலையில் இருந்து குணப்படமுடியும்.

இந்த நிலையை குணப்படுத்துவதற்கு என்று மாத்திரைகள் எவையும் கண்டறியப்படவில்லை.



Dr.சி.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.